தர்மசக்கரம்



துன்மதி ௵ மாசி ௴ சக்கரம் 31 ஆரம் 2

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31 | துன்மதி ஹூ மாசி மீ | ஆரம் 2

பொருளடக்கம்

அந்தர்யோக விவரங்கள்

சென்னை–புரசவாக்கத்தில் 14—2—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸர். M. CT. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 14—2—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ வெங்கடேசுவரா மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 21—2—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 7—3—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம் மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 7—3—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள லாயல் மில் ஆரம்பப்பாடசாலை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

சேலம் ஜில்லா—பேச்சேரியில் 14—3—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சன்மார்க்க சங்கக் கட்டடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—வையம்பாளையத்தில் 14—3—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுதந்திர உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 14—3—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா சேவாச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31	துன்மதி ஹூ மாசி மீ	ஆரம் 2

பிரார்த்தனை

विद्याविद्ये भवान् सत्यमसत्यं च विषामृते ।
प्रवृत्तं च निवृत्तं च कर्म वेदोदितं भवान् ॥

— विष्णु पुराणं

வித்யாவித்யே பவான் ஸத்யமஸத்யம் ச விஷாம்ருதே ।
ப்ரவ்ருத்தம் ச நிவ்ருத்தம் ச கர்ம வேதோதிதம் பவான் ॥

— விஷ்ணுபுராணம்

இறைவா, நீயே கல்வியும் மடமையும் ஆகின்றாய்; மெய்மையும் பொய்மையும் நீயே. விஷம், அமிர்தம்; பந்தம், மோக்ஷம்; நல்வினை, தீவினை ஆகிய யாவும் நீயே.

இம்மைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ நான்.

— நாச்சியார் திருமொழி

அருள் விருந்து

கீழ்த்தரமான ஆட்சி முறையில் நல்லார்க்கு இடமில்லை.

பொருந்திய பிரார்த்தனைக்குப் பரமன் செவி சாய்க்கிறான்.

உடைமையும் வறுமையும் மன நிலைகளைப் பொருத்தவைகளாம்.

நண்பனை நேசிப்பது எளிது. மற்றுப் பகைவனை நண்பனாக்குவது அதிலும் மிக்கது.

மலர்ந்த மலர் மணம் கமழ்வதுபோன்று சான்றோன் செயலில் மேன்மை மிளிர்கிறது.

விடியற்காலத்தை மகிழ்வோடு வரவேற்பதுபோன்று உண்மையை வர வேற்பாயாக.

பகலில் இருள் தென்படுவதில்லை; அங்ஙனம் ஆத்மபோதத்தில் பிழை நிகழ்வதில்லை.

மனிதனுக்கு வரும் வாய்ப்புக்களைவிடச் சோதனைகளே அவன் பண்பை நன்கு வெளிப்படுத்துகின்றன.

தன்னைத் திருத்தியமைப்பதில் தீவிரமாக ஈடுபடுகிறவன் பிறர்க்கு எவ்வித இடைஞ்சலும் செய்கிறதில்லை.

நன்கு சிந்தித்துச் செயலில் இறங்கு; பிறகு எடுத்த செயலை முடிக்கும் வரையில் அதனின்று பின்வாங்காதே.

உடற்கட்டு வலிவுக்கு அறிகுறியாகாது. அஞ்சுதற்கு ஏதுவான சூழ்நிலையை அமைதியாகச் சமாளிப்பதே வலிவுக்கு அறிகுறியாம்.

காற்றிலும் மழையிலும் கற்பாறை அசைவதில்லை அங்ஙனம் வல்லான் ஒருவனைப் போற்றுதலும் தூற்றுதலும் அசைக்க மாட்டா.

சமையல்காரன் சிரமமின்றி நல்ல உணவைச் சமைப்பதுபோன்று, தகை சான்ற ஆட்சி முறை சிரமமின்றி மக்களுக்கு நலனை வழங்குகிறது.

தன்னைத் தேடி வருகிற புகழைத் தக்கான் ஒருவன் பொருள்படுத்துகிற தில்லை. மற்றுப் புகழைத் தேடிப் போகிறவன் தரத்தில் கீழே வருகிறான்.

தோல்விகளும் குறைபாடுகளும் மனிதனுக்குப் பெரிய பாடங்களைப் புகட்டு கின்றன. அப்போக்கில் அவையாவும் மனிதனுக்கு வாய்த்துள்ள வாய்ப்புக்களாம்.

பரமஹம்சர் புகட்டிய
பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவரின் சத்சம்பாஷணை பக்தர்கள் குழாமில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இளைஞன் ஒருவனைப் பார்த்து அவர் இங்ஙனம் இயம்புகின்றார்: "விசாரம் பண்ணுவதையும் வெறும் வாசா ஞானத்தையும் ஒதுக்கித்தள்ளி விடுவாயாக; பக்தி மார்க்கத்தில் தீவிரமாக ஈடுபடு. பக்தியோ அனைத்தின் சாரமாய் அமைந்திருக்கிறது. இங்குத் தக்ஷிணேசுவர ஆலயத்தில் நீ தங்கியிருப்பது இன்றைக்கு மூன்றும் நாள் அல்லவா?"

இளைஞன் (கைகூப்பிக்கொண்டு): "ஆம் ஐயனே."

பரமஹம்சதேவர்: "பரமனிடத்துத் தீவிர விசுவாசம் வை. அப்பரமனையே சார்ந்திரு. அவனைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ளுவாயாகில் வேறு எந்தவிதமான சாதனத்திலும் நீ திண்டாடி ஈடுபடவேண்டிய அவசியமில்லை. உனக்குத் தேவையாயிருக்கும் அனைத்தையும் பரமன் நிறைவேற்றி வைப்பான்.

"வேற்றான் ஒருவன் பிறர் வீட்டின் முன்வாயிலில் மட்டும் செல்லலாம். வீட்டுக்குள்ளே செல்லுவதற்கு அன்னவனுக்கு அனுமதியில்லை. ஞானமார்க்கமோ வேற்றான் போன்றது. மற்றுப் பக்தி மார்க்கமோ பரமனுக்கு முற்றிலும் சொந்தம். பக்தி மார்க்கத்தில் ஈடுபடுகின்றவன் தாராளமாக அதிவிரைவில் இறைவனுடைய சாந்நித்தியத்தை அணுகலாம். வீட்டுச் சொந்தக்காரர்கள் வேறு யாருடைய அனுமதியையும் கேளாது தங்கள் சொந்த வீட்டுக்குள் போகலாம். அத்தகைய சொந்த வீட்டுக்கு நிகரானது பக்திமார்க்கம். பரமன் சுத்த சைதன்யம். எதனோடும் ஒட்டிக்கொள்ளாத நிலையிலிருப்பது சுத்தசைதன்யம். வித்தையும் அவித்தையும் அந்தச் சுத்த சைதன்யத்தைச் சார்ந்திருக்கின்றன. மற்று, சைதன்யமோ எதிலும் கட்டுப்படாதது. காற்றினுள் சில வேளைகளில் நறுமணத்தையும் வேறு சில வேளைகளில் துர்நாற்றத்தையும் மக்களாகிய நாம் மோக்கிறோம். ஆனால் காற்றுத் தன்னளவில் எந்த நாற்றத்தையும் சார்ந்ததன்று. அது யாண்டும் தன்மயமாயிருக்கிறது. சுத்த சைதன்யத்தின் பாங்கும் அத்தகையதேயாம்.

"வியாசமகரிஷிக்கு ஒருதடவை யமுனை நதியைக்கடக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அச்சூழ்நிலையில் கோபிமார்களும் சிலர் இருந்தனர். பால், தயிர், வெண்ணெய் ஆகியவைகளை எதிர்க்கரைக்கு அவர்கள் எடுத்துச் சென்று விற்கவேண்டியதாயிற்று. ஆனால் அவ்வேளையில் ஓடக்காரன் யாரும் ஆங்கு இல்லை. நதியைக் கடப்பது எங்ஙனம் என்னும் பிரச்சனை அவர்களுக்கு உண்டாயிற்று. அவ்வேளையில் 'என்னைப் பசி வாட்டுகிறது' என்று வியாசர் அவர்களிடம் மொழிந்தார். அதை அறியவந்த கோபிமார்கள் அவருக்குத் தயிரும் வெண்ணெயும் படைத்து அவருடைய பசியைத் துடைத்தனர். தமக்குத் திருப்தி உண்டாகும் வரையில் அவர் அப்பண்டங்களை ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு வியாசர் நதியினிடம் இயம்பியதாவது: 'ஓ யமுனாதேவீ, நான் உண்ணாது இருப்பது வாஸ்தவமானால் நீ ஓடாது சிறிது நேரம் எங்களுக்கு வழிவிடு. நாங்கள் நடந்து அக்கரை போய்ச்சேருகிறோம்.' அவர் இயம்பியபடியே நிகழ்ந்தது. நதியின் ஒரு பகுதியில் அணைபோட்டது போன்று நீர் தேங்கி நின்றது. ஆதலால் பாதையொன்று வடிவெடுத்தது. அதன்மீது அவர் நடந்து சென்றார். கோபிமார்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர். 'யமுனாதேவி நான் உண்ணாது இருப்பது உண்மையானால் நீ ஓடாது சிறிது நேரம் எங்களுக்கு வழிவிடு. நாங்கள் நடந்து அக்கரை போய்ச்சேருகிறோம்.' இதன் உட்பொருள் யாது என்பதை நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். பசியால் வாடியிருந்தது உடல். அந்த உடலில் வீற்றிருக்கும் ஆத்மனே சுத்த சைதன்யம். சுத்த சைதன்யமோ பிரகிருதிக்கு அப்பாற்பட்டது. அது எதிலும் கட்டுப்பட்டது அன்று. சுத்த சைதன்யத்துக்குப் பசியுமில்லை, தாகமுமில்லை. அதற்குப் பிறப்பு இறப்பு இல்லை. மூத்தது என்றோ இளையது என்றோ ஆத்மனைப்பற்றி

இயம்பமுடியாது. ஏனென்றால் அது காலத்தில் கட்டுப்பட்டதன்று. மரணமும் அதற்குக் கிடையாது. யாண்டும் அசையாது சுமேருமலை இருப்பது போன்று ஆத்மனும் அசைவற்று இருக்கிறது.

"சுவானுபூதியின் வாயிலாக இந்தப் பிரம்ம ஞானத்தைப் பெறுதல் வேண்டும். இதைப் பெற்றிருப்பவன் ஜீவன் முக்தன் என இயம்பப் பெறுகிறான். சரீரத்தில் ஜீவித்திருப்பதற்கிடையில் முக்தியடைந்தவன் என்பது இதன் பொருள். ஆத்மா வேறு, உடல் வேறு என்னும் உண்மையை உள்ளபடி அன்னவன் அறிகிறான். ஈசனுடைய அனுபூதியை அடையப் பெற்றான பிறகு அந்தப் பக்தன் தன்னுடைய நிஜசொரூபம் சரீரத்துக்கு அப்பாற்பட்டது என்னும் தெளிந்த நிலையில் இருக்கிறான். உலர்ந்து போன தேங்காய்க் கொப்பரையில் உள்ளேயிருக்கும் கொப்பரை வேறு, ஓடு வேறாகப் பிரிந்திருக்கின்றன. அவைகளுள் ஒன்றன் பாங்கு மற்றதற்குப் பொருந்தாது. ஆத்மா உடலிலே கட்டுண்டு இருப்பது போன்று தென்படுகிறது. அந்த உடலை எடுத்துக் கொண்டு அது நடமாடுகிறது. ஆயினும் நடமாட்டங்களனைத்தும் உடலுக்கு உரியனவாம். ஆத்மாவோ எந்தச்செயலிலும்கட்டுப்படாதது. தேங்காய்க்குள்ளிருக்கும் நீருக்கு நிகரானது உலகப் பந்தபாசம். தேங்காய்க்குள்ளிருக்கும் நீர் உலர்ந்து போன பிறகே கொப்பரைவேறு, ஓடு வேறு ஆகப் பிரிவுபடுகின்றன. அதேபாங்கில் உலகப்பற்று என்னும் நீர் உள்ளத்தினின்று உலர்ந்துபட்டுப்போனால்,அங்ஙனம் பரிபாகம் அடைந்துள்ளவனுக்குப் பிரம்மஞானம் வாய்க்கிறது. அந்தப் பிரம்ம ஞானம் அடைந்த பிறகே ஆத்மா வேறு, உடல் வேறு என்னும் அனுபவம் ஞானிக்கு உண்டாகிறது. தேங்காய் போன்றே பாதாமியும் பாக்கும் பச்சையாயிருக்கிற பொழுது மேல் ஓட்டோடு உள்ளேயிருக்கும் கொட்டை ஒட்டிக் கொண்டிருக்கின்றது. உலர்ந்த பிறகே ஓட்டினின்று பாதாமிப்பருப்பும் கொட்டைப்பாக்கும் ஓட்டினின்று பிரிகின்றன. மனிதனுக்கு உலகப்பற்று என்னும் நீர்ப்பசை இருக்கும்வரையில் உடல் வேறு, ஆத்மா வேறு என்னும் ஞானம் வாய்ப்பதில்லை. உலகப்பற்று முற்றிலும் உலர்ந்துபட்டுப்போன பிறகே சாதகன் பிரம்ம ஞானத்துக்குத் தகுதியுடையவன் ஆகின்றான்.

"மனிதன் அடைதற்கிருக்கும் பேறுகளில் மிகக் கடினமானது பிரம்மஞானம். வெறும் வாய்ப்பேச்சால் அப்பேறு அடையப் பெறுவதன்று. தாம் பிரம்மஞானம் அடையப்பெற்றிருப்பதாகச் சிலர் பாசாங்கு பண்ணுகின்றனர். (புன்னகை பூத்தவராக) பொய்யே பேசுகிற மானுடன் ஒருவன் இருந்தான். தனக்குப் பிரம்மஞானம் வாய்த்திருப்பதாக அவன் பகருவதுண்டு. அன்னவன் பேசியதெல்லாம் பொய் என்று மற்றொரு மனிதன் அவனைக் கடினமாகக் கண்டித்தான். அதற்கு அவன் கொடுத்த விடையாவது : 'ஏன் இவ்வுலகமே வெறும் கனவுக்கு நிகரானது. இதில் தென்படுகிற அனைத்தும் வெறும்தோற்றம் என்றால் உண்மைமட்டும் எப்படி மெய்ப்பொருள் ஆகும். உண்மையும் பொய்யும் புளுகும் ஆகிய யாவுமே அநித்தியமாம்.'" (இதைக் கேட்ட அனைவரும் நகைத்தனர்.)

தரையின் மீது விரிக்கப்பட்டிருந்த பாயின் மீது பக்தர்கள் எல்லாருடன் பரமஹம்ச தேவரும் அமர்ந்து கொண்டார். அவர் முக விலாசத்தில் புன்னகை மிளிர்ந்து கொண்டிருந்தது. பக்தர்களிடம் அவர் பகர்ந்ததாவது : "தயவு செய்து என் பாதங்களைச் சிறிது மிருதுவாக அமுக்கித் தாருங்கள்." அவர் இயம்பியபடியே அச்செயலில் பக்தர்களும் ஈடுபடலாயினர். மகேந்திரரிடம் அவர் இயம்பியதாவது : "இச்செயலில் அரும்பெரும் கருத்தொன்று அமைந்திருக்கிறது." தம் நெஞ்சின் மீது தம் கரத்தை நாட்டிப் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "இதனுள் பொருள் ஏதேனும் இருக்குமாகில் இப்பணிவிடையின் வாயிலாகப் பக்தர்களின் அஞ்ஞானமும், மயக்கமும் அறவே அழிந்துபட்டுப்போம்." திடீரென்று பரமஹம்சதேவரின் முகத்தில் ஆழ்ந்த பாங்கொன்று வடிவெடுத்தது. ஏதோ ரகசியம் ஒன்றை வெளிப்படுத்துபவர் போன்று அவர் தென்பட்டார்.

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து) "வேற்றூர் யாரும் இங்கு இல்லை. அன்றொரு நாள் ஹரீஷன் என்னோடு இருந்தபொழுது சச்சிதானந்தம் இந்தக் கோசத்தினின்று

வெளியே வந்ததை நான் பார்த்தேன். அது என்னிடம் இயம்பியதாவது: 'யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.' இப்பேச்சை எனக்கு நானே வெறும் வேடிக்கையாக இயம்பிக் கொண்டேன் என்று எண்ணினேன். ஆதலால் அமைதியுற்றிருந்து மேலும் நிகழ்ந்ததை நான் கவனித்தேன். அந்தச் சச்சிதானந்தம் மறுபடியும் 'சைதன்யதேவரும் சக்தியை வழிபட்டார்' என்று எனக்கு எடுத்து இயம்பிற்று."

பக்தர்கள் அதிசயத்துடன் இக்கூற்றுக்குச் செவிமடுத்தனர். ஈசன் தாமே இந்த ராமகிருஷ்ணர் வடிவத்தில் தங்களுக்கிடையில் அமர்ந்திருக்கிறாரா என்னும் வியப்பு பக்தர்கள் சிலர் உள்ளத்தில் உதயமாயிற்று. பரமஹம்சதேவர் சிறிது நேரம் மௌனமுற்று இருந்தார். அதன் பிறகு மகேந்திரரிடம் அவர் இயம்பியதாவது: "நான் சச்சிதானந்தத்தின் பூரண அவதாரம் என்பதைக் கண்டேன்; ஆனால் இந்தத்தடவை அந்த அருள் சக்தி முற்றிலும் சத்துவத்தில் மிளிர்ந்திருக்கிறது.' பக்தர்கள் பேச்சற்று அமர்ந்திருந்தனர்.

பரமஹம்சதேவர் (மகேந்திரரிடம்) "இப்பொழுதுதான் அன்னை பராசக்தியிடம் நான் அதிகம் பேசமுடியாது என்று உரையாடலானேன். மேலும் அவளிடம் நான் எடுத்து மொழிந்ததாவது: 'ஒருதடவை தீண்டிய மாத்திரத்திலேயே மக்களிடத்து ஆத்மபோதம் வடிவெடுப்பதாகுக!' யோகமாயையின் சக்தியோ அளப்பரியது. ஒரு நொடிப்பொழுதில் மானுடன் ஒருவனை ஆத்மபோதத்தில் விழிப்படைந்தவனாக மாற்றியமைக்கும் வல்லமை அவளிடத்து உண்டு. பண்டொரு காலத்தில் பிருந்தாவனத்தில் அத்தகைய செயலை அன்னை பராசக்தி செய்தருளினாள். ஆதலால்தான் கிருஷ்ணனுடைய தோழனாகிய சுபலன் ஸ்ரீ கிருஷ்ணனையும் ராதையையும் இணைத்துவைத்தான். ஆதி சக்தியாகிய யோக மாயைக்கு அனைத்தையும் தன்பால் கவர்ந்திழுக்கும் அருள்நிலை அமைந்திருக்கிறது. சுபலன் பெற்றிருந்த அதே ஆத்ம சக்தி அன்னையின் அருளால் என்னிடத்தும் வாய்த்திருக்கிறது. (மகேந்திரரைப் பார்த்து) ஈண்டு வருகிற பக்தர்கள் ஆத்மிகத் துறையில் ஏதேனும் அனுபூதி அடைந்து வருகிறார்களா?"

மகேந்திரர்: "ஆம் ஐயனே, அங்ஙனமே நிகழ்ந்து வருகிறது."

பரமஹம்சதேவர்: "அது உனக்கு எப்படித் தெரியும்?"

மகேந்திரர் (புன்னகை பூத்தவராக): "அவருக்கு உரியவராகின்றவர்கள் இவ்வுலகினின்று விடுபட்டவர்களாகின்றார்கள் என்னும் கூற்றை ஒவ்வொரு பக்தனும் சொல்ல நான் கேட்டுவருகிறேன்."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "தவளை ஒன்றை நீர்ப்பாம்பு ஒன்று பிடித்துக்கொண்டது. ஆனால் அத்தவளையை விழுங்கவோ, துப்பித் தள்ளவோ அப்பாம்புக்கு இயலவில்லை. அதன் விளைவாகத் தவளை பெரும் வேதனைக்கு உட்பட்டது. அது கத்திக் கொண்டிருந்தது. பாம்பும் திண்டாடியது. இந்த நீர்ப்பாம்பின் வாயில் அகப்பட்டுக் கொண்டதற்குப் பதிலாக அத்தவளையானது ஒரு நல்லபாம்பின் வாயில் அகப்பட்டிருந்தால் இரண்டொரு தடவை கத்தியானபிறகு அது வாயடங்கிப் போயிருந்திருக்கும்." (இதைக் கேட்டு எல்லாரும் நகைத்தனர்.)

உலக ஆசையில் அகப்பட்டுக்கொள்ளாதிருந்த இளைஞர்களைப் பார்த்துப் பரமஹம்சதேவர் மொழிந்ததாவது: "பக்தி சைதன்ய சந்திரிகை என்னும் நூல் ஒன்றைத் திரைலோக்கியர் இயற்றியிருக்கிறார். அதன் பிரதி ஒன்று வேண்டுமென்று அவரைக் கேளுங்கள். சைதன்ய தேவரைப்பற்றி அவர் நன்கு எழுதியுள்ளார்!"

பக்தர் ஒருவர்: "அந்நூலை அவர் எங்களுக்குத் தருவாரா?"

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "ஏன் தரமாட்டார்? உழவன் ஒருவனுக்குத் தர்பூசனி ஏராளமாக விளைந்திருந்தால் அவைகளில் இரண்டு மூன்றை எடுத்து இலவசமாக வழங்குதலில் சிரமம் யாது உளது?

திரைலோக்கியர் அப்புஸ்தகத்தை உங்களுக்கு இலவசமாக ஏன் தரமாட்டார்?"

25—2—82 வியாழக்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜன்ம தினமாகும்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-16. அந்தகனுக்கு எங்கும்இருள் ஆன ஆறு அறிவில்
வந்தஇருள் வேலை வடியுநாள் எந்நாளோ.

அந்தகனுக்கு-குருடனுக்கு. இருள் வேலை வடியு நாள்-அக்ஞானக்கடல் வற்றிப் போகும் நாள்.

பிறவிக் குருடன் ஒருவன் பிறந்தது முதற் கொண்டு சாகும் வரையில் கார் இருளிலேயே வாழ்ந்து வருகிறான். வெளிச்சத்தைப் பற்றியோ அவ்வெளிச்சத்தில் தென்படுகின்ற வடிவங்களைப் பற்றியோ அவன் ஒன்றும் அறியமாட்டான். கவர்ச்சிகரமான காட்சிகள் இயற்கையில் ஆங்காங்கு அமைந்திருக்கின்றன. அவைகளைக் கண்டு ரசிக்கும் பாங்கு குருடனுக்கு இல்லை. மானுட அமைப்பிலேயே அழகான வடிவங்களும், அழகற்ற வடிவங்களும் அமைந்திருக்கின்றன. அவைகளைப் பற்றிய பாகுபாடுகளையும் அந்தகன் ஒரு பொழுதும் அறிந்துகொள்ள மாட்டான். கண் பார்வை இல்லாமையினால் உலகைப் பற்றிய ஞானமே அரைகுறையாக அவனுக்கு அமைந்திருக்கிறது. ஓர் இந்திரியக் குறைவால் வருகின்ற ஞானக் குறைவு மிகப் பெரியதாம். கண் என்னும் ஞானேந்திரியம் புறவுலக அமைப்பை அறிந்து கொள்ளுதற்கு அமைந்திருக்கிறது. கண்பார்வையற்று இருப்பதற்குக் குருடன் பொறுப்பாளி அல்லன்; அது பிராரப்த கர்மத்தின் விளைவு. அதை மாற்றியமைக்க அவனுக்கு இயலாது. அவனுடைய அமைப்புக்கு மாறாக நானே ஆறு அறிவு படைத்தவனாக இருக்கிறேன். இயல்புக்கு ஒவ்வாத பான்மை என இந்த ஆறு அறிவு பொருள் படுகிறது. 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.' மெய்ப்பொருளைத் திரிவுபட்ட பொய்ப் பொருளாகக் காண்பது ஆறு அறிவு. இது மெய்மைக்கு ஒவ்வாதது. சான்று ஒன்றன் மூலம் இதை விளக்குவோம். கயிறு ஒன்றைப் பாம்பாகப் பொருள்படுத்துவது ஆறு அறிவாம். கயிற்றைக் கயிறாகப் பொருள் படுத்துவது மெய்யறிவு. கயிற்றைப் பாம்பாகப் பொருள்படுத்துவது பொய்யறிவு. ஈசன் பிரபஞ்சமாக விளையாடுகிறார். அப்படி விளையாடுதற்கிடையில் அவரை ஈசனாகப் பொருள் படுத்துவது மெய்யறிவு. அதை மறந்துவிட்டு வெறும் தோற்றத்தளவில் உள்ள பிரபஞ்சமாகப் பொருள்படுத்துவது ஆறு அறிவு. வேலை என்பது கடல். அது எப்பொழுதும் வற்றுவதில்லை. அது வற்றிப்போம் நாளை எதிர்பார்த்திருப்பது வீண். அதற்கு நிகராக நான் படைத்திருப்பது அக்ஞான இருள்கடல். இந்த இருள் கடல் வற்றிப்போம் நாளை எதிர் பார்ப்பதில் பயன் ஏதும் இல்லை. சூரியோதயம் வருகிறபொழுது காரிருள் தானாக அகன்று போகிறது. அதே பாங்கில் பரமனை அவன் இருக்கிறபடி காண்கிற மெய்ஞ்ஞானம் உதயமாகிறபொழுது கடல் போன்று விரிந்துள்ள இருளும் தானாக மறைந்து பட்டுப் போகிறது. பிறவிகள் பலவற்றில் மனிதனை ஈடுபடுத்திய அக்ஞான இருள் ஆனது பரபோதம் வருகின்றபொழுது தானாகவே மாயமாய் மறைந்து போகிறது. அத்தகைய சிவ ஞானத்தை நான் அதிவிரைவில் பெறவேண்டும் என்பது இக்கண்ணியின் வாயிலாக ஆத்ம சாதகன் செய்கின்ற பிரார்த்தனையாம்.

6-17. புன்மலத்தைச் சேர்ந்துமல போதம்
பொருந்துதல்போய்
நின்மலத்தைச் சேர்ந்துமலம் நீங்குநாள்
எந்நாளோ.

மாயப்பிரபஞ்சத்தை மெய் எனக்கருதுவது புன்மலமாம். பொருந்தாத அழுக்கு என அது பொருள்படுகிறது. பொருந்தாத இந்நிலையை ஓர் உபமானத்தின் மூலம் ராமகிருஷ்ண பரமஹம்சர் விளக்குகிறார். நல்லொழுக்கமும் தூய வாழ்வும் நிரம்பப்பெற்றுள்ள அந்தணன் ஒருவன் குப்பை கூளம் நிரம்பியுள்ள புலைச்சேரியில் வாழ்ந்திருப்பது பொருந்தாது. அவனுடைய புனிதம் நிறைந்துள்ள வாழ்வுக்குப் பொருத்தமான தூய சூழ்நிலையிலேயே அவன் வாழ்ந்திருத்தல் வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப மனிதனுடைய பாங்கும் மாறியமைகிறது. கடவுள் தாமே உலகில் உள்ள உயிர்வகைகள் அனைத்துமாய் வடி

வெடுத்து விளையாடுகிறார். அப்படியிருந்தும் மானுட வடிவெடுத்துள்ள மூர்த்தி ஒருவன் மேன்மையடைதல் பொருட்டு அதற்கேற்ற சூழ்நிலையிலேயே வாழ்ந்திருத்தல் வேண்டும். பிரபஞ்ச வாழ்வை விளக்கிக் காட்ட வராக வடிவெடுத்த விஷ்ணு கொஞ்சகாலம் அவ்வடிவத்திலேயே வாழ்ந்திருக்க விரும்பினார். மகாவிஷ்ணு அவமானத்துக்கு ஏதுவான இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்திருப்பதைப் பார்த்த தேவர்கள் வெட்கப்பட்டார்கள். அவர்கள் ஒன்றுகூடிவந்துவிஷ்ணுவிடம் அவருக்குச் சொந்தமான வாசஸ்தலம் வைகுண்டம் என்று ஞாபகப்படுத்தினர். ஆனால் பன்றியோ அவர்கள் விண்ணப்பத்துக்குச் செவிசாய்க்கவில்லை. தேவர்கள் சிவனாரிடம்போய் முறையிட்டார்கள். திரிசூலபாணியாகிய சிவனாரும் பன்றி வேஷம் தாங்கியிருந்த மூர்த்தியிடம் வந்து அவருடைய யதார்த்த நிலையை ஞாபகமூட்டினார். பன்றியோ அப்பரமனுடைய கூற்றுக்கும் செவிசாய்க்கவில்லை. பிறகு சிவனார் தம் திரிசூலத்தால் பன்றியைக் குத்தினார். அக்கணமே அதன் மயக்கம் தெளிந்தது; நிஜபோதம் பெற்றது. தாம் அதுகாறும் படைத்திருந்தநிலையை வெறும் கனவு என ஒதுக்கித்தள்ளிவிட்டு மகாவிஷ்ணு வைகுண்டத்துக்குத் திரும்பினார். இப்புராணக் கதையானது ஜீவாத்மா வடிவெடுத்திருக்கின்ற மக்கள் எல்லார்க்கும் பொருந்தும். புல்லிய பிரபஞ்ச வாழ்வில் புதைந்துகிடப்பது மக்களுக்குப் பொருந்தாது. பாரமார்த்திகப் பெருநிலையை ஞாபகமூட்டுகிற புனிதமான சூழ்நிலையிலேயே வாழ்ந்திருத்தல் வேண்டும். அல்லும் பகலும் தங்களுக்குச் சொந்தமாயுள்ள தெய்விகத்தைத் தங்களுக்கு ஞாபகமூட்டும் நல்ல சூழ்நிலையாக அது இருத்தல் வேண்டும். எண்ணியதை எண்ணியபடி மனிதன் அடையப்பெறுவதால் பரமனைப்பற்றிய எண்ணமே சர்வகாலமும் அவனுடைய மனதில் வந்துகொண்டிருக்குமானால் அவன் நிர்மலன் ஆகிறான். அப்பொழுது பரமனுக்கும் தனக்குமுள்ள தொடர்பை அறிந்து பரமனிடத்து அவன் ஒன்றுபடுகிறான். அதற்கேற்ற சூழ்நிலையை நான் நாடியிருப்பேனாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

6-18. கண்டுகண்டும் தேருக் கலக்கம் எல்லாம் [நீர்வன்னம்
பண்டைவினை வேரைப் பறிக்குநாள்
எந்நாளோ.

எரிகின்ற நெருப்புக்கு விறகுக்கட்டை போட்டு அதன் செயலைத் தணிக்க முடியாது. எவ்வளவுக்கெவ்வளவு விறகுக் கட்டை வந்து சேருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு காலமெல்லாம் அந்த நெருப்பு எரிந்துகொண்டே இருக்கும். மனிதனுடைய உள்ளத்தில் ஊற்றெடுத்து வருகிற ஆசையும் அத்தகையதேயாம். ஆசைக்கு அடிமைப்பட்டிருக்கிற மனிதனுக்குச் சாவு வருகிறபொழுது சாந்தியற்றவனாகவும் ஆசை முழுதும் நிறைவேறப்பெருதவனாகவும் அவன் உடலைவிட்டு விலகுகிறான். அந்த ஆசைகளை நிறைவேற்றுவதற்கு மறுபிறப்பெடுக்கிறான். எடுத்த புதிய பிறப்பில் ஆசைகளை ஒருவாறு நிறைவேற்றுகிறான். அப்படி நிறைவேற்றுவதற்கிடையில் புதிய ஆசைகளை அவன் தனக்குத்தானே உண்டு பண்ணுகிறான். இங்ஙனம் ஆசையினால் தூண்டப்பெற்று மனிதன் எடுக்கிற பிறவிகளுக்கு முடிவே இல்லை. ஓர் ஆசை நிறைவேறுவதற்கு முன்பே மற்றோர் ஆசை முன்னணியில் வந்து நிற்பதை அம்மனிதன் காண்கிறான். அங்ஙனம் தன் உள்ளத்தில் உதித்து வரும் ஆசைகள் ஒன்றன்பின் ஒன்றாக வடிவெடுத்துக்கொண்டே இருக்கின்றன. அரசமரத்தை வெட்ட வெட்ட அது தளிர்த்துக்கொண்டே வரும். அடிமரம் உட்பட அதை அடியோடு வெட்டிய பிறகும் பூமியினுள் மறைந்திருக்கும் அதன் வேர் தளிர்த்து மேலேவந்து தோன்றும். மானுட ஜன்மத்துக்கு ஆதாரமாய் அமைந்துள்ள ஆசை என்னும்வினையும் அந்த அரசமரத்துக்கு ஒப்பாகிறது. அரசமரத்தை வேரில்லாது அறவே அகற்றியாக வேண்டும். அதே பாங்கில் பிறப்புக்கு வித்தாயிருக்கிற வினையின் வேரை ஞானக்னியைக் கொண்டு கொளுத்தித் தள்ளினாலொழிய பிறவியைப் போக்க முடியாது. பிறவியைக் காட்சியினின்று அகற்றித் தள்ளுதற்கு அதற்கு மூலகாரணமாயிருக்கும் ஆசை என்னும் வினையை அகற்றுதல் ஒன்றே உற்ற உபாயம் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

36. நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். நாளைக்குத் தேவையாய் இருப்பவைகளை நாளைய தினம் நிறைவேற்றிவைப்பதற்கு இறைவன் அருள் இருக்கிறது. அன்றன்றைக்கு உங்களுக்குத் தேவையானதைப் பற்றி நினைப்பதே குற்றமாகும். ஏனென்றால் கடவுளை முற்றும் சார்ந்திருப்பவர்கள் தங்கள் தேவைகளைப்பற்றிக் கருத்தில் வாங்கிக்கொள்வதில்லை.

கவலைப்படுவதினால் காரியம் கைகூடுவதில்லை. கவலைப்படுகிறவர்கள் அறியாமையினால் துயரத்தைத் தங்களுக்குத் தாங்களே வரவழைத்துக் கொள்கிறார்கள். முடிந்துபோன காரியத்தை மீண்டும் நினைத்துப் பார்க்கக் கூடாது. மீண்டும் நினைத்துப் பார்ப்பதால் மாற்றி அமைக்கமுடியாது. எதிர்காலத்தில் என்ன கஷ்டம் வந்துவிடுமோ என்று இப்பொழுதே கவலைப்படக்கூடாது. நிகழ் காலத்தை நன்கு பயன்படுத்துகின்றவளவு எதிர்காலத்தை வெல்லலாம். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். மாணாக்கன் ஒருவன் ஆண்டு இறுதியில் நடக்கும் தேர்வில் வெற்றி பெறாமல் போய்விடுவேனோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கக்கூடாது. இப்பொழுது அவன் சிரத்தையோடு காலத்தை விணாக்காது கற்பானானால் வெற்றி அவனைத் தேடிக்கொண்டுவரும். ஆகவே மனிதன் இறந்த காலத்தைக் குறித்தோ, எதிர்காலத்தைக் குறித்தோ கவலைப்படுவதை நிறுத்திவிட்டு நிகழ்காலத்தை நன்கு பயன்படுத்தவேண்டும். மனிதனுடைய லட்சியம் மனதைப் பண்படுத்துவதாகும். உலக நிகழ்ச்சிகள் யாவும் மனதைப் பண்படுத்துவதற்காக அமைகின்றன. உலகத்தில் வரும் நல்லனவற்றையும், தீயனவற்றையும் மனபரிபாகத்துக்கென்று ஏற்றுக்கொள்பவன் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். கவலைப்படுவதினால் வாழ்க்கைப் பிரச்னைகளை நாம் தீர்த்துக்கொள்ளமுடியாது. கவலைப்படுவதில் மற்றொரு பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. உலக விஷயங்களைக் குறித்துக் கவலைப்படுகின்ற மனது கடவுளை நினைக்கத் தகுதியற்றதாகப் போய்விடுகிறது. உலக விஷயத்தைக் குறித்துக் கவலைப்படுகின்ற மனதைத் தெய்வத்தைக் குறித்துக் கவலைப்படுமாறு செய்யவேண்டும். அப்பொழுது உலகக் கவலை மனதை விட்டு அகலுகிறது. தெய்வச் சிந்தனை செய்கின்ற மனது உறுதியும், அமைதியும் உடையதாகிறது.

மனம் படைத்திருப்பவர்கள் அனைவருக்கும் வாழ்க்கையில் துன்பமும் இன்பமும் வந்து கொண்டே இருக்கும். இதற்கு விதிவிலக்கு யாருக்கும் இல்லை. புத்தர் தம் சிஷ்யரிடம் பகர்ந்ததாவது: "நான் உன்னிடம் கனி ஒன்றைத்தருவேன். நீ அதைவாங்க மறுத்துவிடு.'' இங்ஙனம் கூறிச்சிஷ்யர்கையில் கனி ஒன்றைத் தந்தார். சிஷ்யர் அதை வாங்க மறுத்துவிட்டார். "கனி யாரிடம் இருக்கிறது?'' என்று புத்தர் கேட்டார். "கனிதங்களிடம் தான் இருக்கிறது" என்றார் சீடர். "நான் கொடுக்கும் கனியை நீ வாங்கிக்கொள்" என்றார் புத்தர். சிஷ்யர் புத்தர் தந்த கனியை வாங்கிக்கொண்டார். "இப்பொழுது கனி யாரிடம் இருக்கிறது?" என்று கேட்டார்.'' இப்பொழுது கனி என்னிடம் இருக்கிறது" என்றார் சிஷ்யர். புத்தர் "கனியை நீ வாங்காதபொழுது அது என்னிடமே இருந்தது. நீ அதை வாங்கிக்கொண்டபொழுது அது என்னிடமிருந்து உன்னிடம் வந்து விட்டது. அங்ஙனம் நீ பிறர் கூறுவதை மனதில் வாங்கிக்கொண்டால் அது உன்னிடம் வந்துவிடும். நீ அதை மனதில் வாங்கிக் கொள்ளாவிட்டால் கூறுபவரிடமே அது இருக்கும்." இங்ஙனம் மனதில் வாங்கிக்கொள்ளாத விஷயங்கள் நம்மிடம் வருவதில்லை. மனதில் வாங்கிக்கொள்ளும் விஷயங்கள்தாம் நமக்குரியனவாகின்றன. மானுடவடிவம் தாங்கி இருப்பதற்கிடையில் மனதைத் தெய்விக நிலைக்கு உயர்த்த முடியும். மனதைத் தெய்விகநிலைக்கு உயர்த்தியவர்கள் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற உண்மையை உணர்ந்து யாண்டும் மன அமைதியுடன் இருக்கின்றார்கள். கடவுளைச் சார்ந்திருந்து சென்றதைக் குறித்தோ, இனி வருவதைக் குறித்தோ கவலைப்படாது வாழுங்கள் என்று இயேசுநாதர் இவ்வுபதேசத்தில் நமக்குப் போதிக்கின்றார்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்பது இளங்கோவடிகளின் வாக்கு. சூரியனை வணங்கி அவன் புகழைப் பாடுக என்பது இதன் பொருள். சூரியனை ஏன் வணங்கவேண்டும்? இவ்வுலகமே சூரியசக்தியால்தான் இயங்குகின்றது. தாவரங்கள் சூரிய ஒளியில் ஒளிச்சேர்க்கை செய்து ஸ்டார்ச்சுத் தயாரிக்கின்றன. கதிரவனின் மகிமையை அறிந்த நம் முன்னோர் தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்தனர். கை, கால், கண், கழுத்து, மார்பு, வயிறு, இடுப்பு முதலிய எல்லா அங்கங்களையும் உறுதிபெறச் செய்ய வல்லது சூரிய நமஸ்காரம் ஆகும். சூரிய நமஸ்காரத்தில் உடல் இரத்தசுத்தி அடைகிறது. அஜீர்ணம், சிறுகுடல் பெருங்குடல் நோய்கள், மலச்சிக்கல், வாயுக்கோளாறு, வயிற்றுப்பொருமல், பல்நோய்கள், தலைவலி, கண்நோய்கள் போன்ற அநேக வியாதிகள் சூரிய நமஸ்காரம் முறையாகச் செய்வோர்க்கு வராமல் தடுக்கப் படுகின்றன. பிற விளையாட்டுக்கள் தேகத்தை மட்டும் ஆரோக்கியமாய் வைத்திருக்க உதவுகின்றன. ஆனால் சூரிய நமஸ்காரமோ தேகத்தையும் மனதையும் ஆரோக்கியமாய் வைத்திருக்க உதவுகிறது.

சூரிய நமஸ்காரம் செய்வதற்குக் காலை நேரமேஉசிதமானது ஆகும். காலைக் கடன்களை முடித்துவிட்டு 5¼ மணி முதல் 5¾ மணி வரையில் செய்து முடிக்கலாம். அதனால் நாள்முழுவதும் எவ்வளவு உழைத்தாலும் உற்சாகமாகவே இருக்கும். சூரியநமஸ்காரம்அனுஷ்டிப்பவர்கள் மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மலச்சிக்கல் இருந்தால் தினமும் இரவில் படுக்குமுன் ஒரு டம்ளர் சூடான பால் குடிக்கவும். தினந்தோறும் குளிர்ந்த நீரில் குளிக்கவேண்டும். வெந்நீரை உபயோகிப்பது தேக ஆரோக்கியத்துக்கு நன்றன்று. வெந்நீரை உபயோகிப்பதால் நம் நாடிகளின் வலிமை குறைய வாய்ப்புண்டு. மேனாட்டினர் வாரமொருமுறை சுமார் கால்மணிநேரம் உடம்பு முழுவதையும் சூரிய ஒளியில் காட்டி நிற்பர். இதை Sunbath என்பர். இதனால் பலவியாதிகள் அகலும். இதை நாமும் கடைப்பிடிப்பதில் தவறில்லை.

சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் இரவில் சீக்கிரமே படுக்கச் சென்று அதிகாலையில் எழுந்துவிடவேண்டும். "Early to bed and early to rise makes a man healthy, wealthy and prosperous" என்பது பெரியோர் வாக்கு. 'பசித்துப் புசி' என்ற முதுமொழிக்கிணங்க சூரிய நமஸ்காரம் செய்வோர் நன்றாய்ப் பசி எடுத்த பின்னரே உணவு உட்கொள்ள வேண்டும். அளவுக்கு மேல் உண்ணலாகாது. அளவுக்கு மீறி உண்பதால் உள்ளுறுப்புக்கள் பாதிக்கப்படுகின்றன. நீர்பருகுவதில்கூட ஒரு நியமம் வேண்டும். சாப்பிடுவதற்கு முன்போ பின்போ தான் தண்ணீரைக் குடிக்கவேண்டும். இடையிடையே நீர் குடிப்பது கூடாது. உணவை அவசர அவசரமாக விழுங்காமல் நன்றாக மென்று சாப்பிட வேண்டும். மேலும் சத்துள்ள ஆகாரத்தைத் தேர்ந்து உண்ண வேண்டும். "நொறுங்கத்தின்றால் நூறு வயதன்றோ?" சூரிய நமஸ்காரம் செய்யும்போது மூக்கின் வழியாகவே சுவாசிக்க வேண்டும். உதடுகளை நன்கு மூடிக்கொள்ளவேண்டும்.

சூரிய நமஸ்கார ஆசனங்களினால் இடுப்பு வலுவடைகிறது. தோள்பட்டை, விலா போன்ற இடங்கள் நல்ல பயிற்சி பெறுகின்றன; வயிற்றுப்பிணிகள் ஒழிகின்றன; கை கால்கள் பலமடைகின்றன; மார்பு விசாலமாகும்; கண்கள் ஒளியுறும்.

ஆன்றோர்கள் தாங்கள் செய்யும் காரியங்களிலெல்லாம் தெய்வத்தை இணைத்தே செய்வர். சரீர வளர்ச்சியைமட்டும் கருதாமல் உடம்பினுக்குள்ளே கோயில் கொண்ட உத்தமனைக் காணும் ஆத்ம வளர்ச்சியினையும் கருதி, சூரிய நமஸ்காரத்துடன் மந்திர உச்சாரணையையும் சேர்த்தே செய்வர்.. இதனால் ஆரோக்கியத்துடன் ஆன்மிக வளர்ச்சியையும் ஒருங்கே பெறலாம். இத்தகைய மகிமைகள் பொருந்திய சூரிய நமஸ்காரத்தை நாள்தோறும் அப்பியாசம் செய்வோமாக!

அனுமன் கண்டட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

இனி, அனுமன் – சீதை உரையாடலைத் தொடர்ந்து பார்ப்பதற்கு முன்னர் இக்காட்சி வான்மீகியில் காட்டப்பட்டிருக்கும் முறையைத் தெரிந்து கொள்வது அவசியம்.

வான்மீகி ராமாயணத்தில் அனுமன் தன் பேருருவைச் சீதைக்குக் காட்டிய சூழ்நிலை வேறானதாகக் காணப்படுகின்றது.

“இவ்வளவு சிறிய உருவத்துடன் நூறு யோசனை அகலமுள்ள கொடுமையான பிராணிகள் வாழும் பெருங்கடலை நீ எவ்வாறு கடந்து வந்தாய்?” என்ற சீதையின் கேள்விக்குப் பதிலளிக்கும் முறையிலேயே அனுமனின் பேருருவக் காட்சி கம்பனில் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். ஆனால் ஆதிகாவியத்தில் வேறொரு காரணத்திற்காக இப்பேருருவம் காட்டப்பட்டதாகக் காணப்படுகின்றது. இதனைச் சுருக்கமாக இப்போது பார்ப்போம்.

சீதையைப் பிரிந்த ராமன் உறும் துயரத்தைச் சீதையிடம் எடுத்துரைக்கின்றான் அனுமன். அதனைக் கேட்ட சீதையின் உள்ளம் அனலில் இட்ட மெழுகாக உருகுகின்றது. அவள் படும் வேதனையைக் கண்ட அனுமன் அவள் துயரத்தை உடனே நீக்கக்கூடிய வழி ஒன்றை அவளிடம் தெரிவிக்கின்றான்.

“மாசில்லாத பெண்மணியே! என் முதுகில் நன்றாய்ப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருங்கள். சிறிது நேரத்தில் தங்களை இக்கொடிய ராவணனிடமிருந்து விடுவிக்கின்றேன். வேள்வியில் ஹவிசாகக் கொடுக்கப்பட்ட பொருளை அக்னிதேவன் எவ்வாறு இந்திரனிடம் சேர்ப்பிக்கின்றானோ அவ்வாறே தங்களைப் பிரஸ்ரவண மலையிலிருக்கின்ற ராமனிடம் சேர்ப்பித்துவிடுகின்றேன். தங்களைத் தாங்கிச் செல்லும் என் வேகத்துடன் போட்டியிட்டு என்னைப் பின்தொடர்வதற்கு இந்த இலங்கை வாழ் அரக்கருக்கு இயலாது. நான் இங்கு எப்படி வந்து சேர்ந்தேனோ அதே போன்று உங்களைச் சுமந்து கொண்டு களைப்புச் சிறிதுமின்றிக் கடலைக்கடந்து திரும்பிச் செல்வதைக் காண்பீர்களாக!”

சீதையின் மனம் ஒரு விநாடி இன்ப நினைவுகளில் சிறகடித்துப் பறந்தது. ஆனால் உடனே ஒரு பெரிய சந்தேகமும் எழுந்தது. அனுமனின் பலத்தில் நம்பிக்கையில்லாதவளாக அவனைப் பார்த்துப் பேசுகின்றாள்.

“வானரப்படைத் தலைவனாகிய அனுமனே! நூறு யோசனை தூரமுள்ளதாகிய இந்தக் கடலைக் கடந்து என்னை எடுத்துக்கொண்டு போகிறேனென்று நீ சொல்லுவது விந்தையாக இருக்கின்றது. உனக்கு ஸ்வபாவமான ‘வானர புத்தி’ என்பது இதுதான். அல்ப சரீரத்தையுடைய நீ என்னைப் புருஷோத்தமனான ராமனிடத்தில் கொண்டு போய் விடுகின்றேன் என்று எந்தத் தைரியத்தில் சொன்னாய்?”

—சுந்தர. 37வது சர்க்கம் 29, 30 சுலோகங்கள்.

இதில் சீதை அனுமனை अल्पशरीरः அல்ப, சிறிய உருவமுடையவன் என்றும் அந்த உருவத்தை வைத்துக்கொண்டு இப்பெரிய காரியத்தைச் செய்ய முனைவது அனுமனுடைய குரங்கு புத்தியைக் (कपित्वं) குறிக்கின்றது என்றும் குறிப்பிடுகின்றாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட அனுமன் நிலையை வான்மீகி முனிவர் விவரிக்கின்றார். ‘‘नवं कृतं परिभवंचिन्नभामास’’ 37:31. இதுவரையில் தன்னை யாரும் இப்படி இழிவுபடுத்தியதில்லையென்றும், தனக்கு இப்படி ஓர் அவமானம் ஏற்பட்டதில்லையே என்றும் நினைத்துத் திடுக்கிடுகின்றானும் அனுமன். வாயுவின் மைந்தன் மனிதர்களாலேயே செய்ய முடியாத காரியங்களைச் செய்யும் வல்லமை பொருந்தியவன். அப்படிச் செயற்கரிய செயல் செய்யும் முயற்சியில் தனது கன்னத்தில் விழுப்புண் பெற்ற வீரனாகிய அனுமனைப் பார்த்து அல்ப சரீரமுடையவன் என்றும் அவன் செயல் திட்டத்தைக் குரங்குத்தனமானது என்றும் சீதாபிராட்டி சொன்னபோது மாருதியின் மனம் பட்டபாட்டை யாரே விளக்க வல்லார்? இந்த அதிர்ச்சியும் வியப்பும் ஒரு விநாடிதான். உடனே அனுமன் தன்னைத் தானே தேற்றிக்கொள்கின்றான். தன் பிறவிக் குண விசேஷத்தையும், வலிமையையும் அறியாததால் தானே சீதை தன்னைப்பற்றி இவ்வாறு தாழ்வாகக் கூற நேர்ந்தது என்று எண்ணிய

வனுய் அவளுடைய சந்தேகத்தை அகற்றும் பொருட்டுத் தன் பேருருவத்தைக் காண்பிக்க முனைகின்ருன் அனுமன். ஒளி வீசுகின்ற தீப் பிழம்பு போன்ற பிரகாசமுடையவனுய், மேரு மலை, மந்தரமலை இவற்றிற்கு இணையான பேரு ருவத்தை எடுத்துக்கொண்டான். அவனுடைய முகம் சிவந்தது; பற்களும் நகங்களும் வஜ்ரா யுதம்போன்று ஆயின. இப்படிப் பேருருவம் எடுத்துக்கொண்டு சீதையிடம் பேசுகின்ருன்.

"தேவி! இந்த இலங்கையை மலைகளோடும், வனங்களோடும், மாடமாளிகைகளோடும், மக்களோடும் பெயர்த்து எடுத்துக்கொண்டு போகும் வலிமை எனக்கு உண்டு! எனவே என்னேடு வருவதில் தாங்கள் தயக்கம் காட்ட வேண்டாம். இலக்குவனுடன் இருக்கும் ராம னுடைய சோகத்தைப் போக்க உடனே என் னுடன் புறப்பட்டு வருவீராக!"

— வான்மீகி சுந்தர. 37: 37-38

அனுமனின் பேருருவமும் அவனுடைய வேண்டுகோளும் சீதைக்குத் தர்ம சங்கடமான நிலையைத் தோற்றுவித்துவிட்டன. தன்னை எடுத்துச் செல்லத் திறனில்லாதவன் அனுமன் என்ற காரணத்தைக்காட்டி அவனுடன் செல்ல மறுத்த சீதைக்கு அவனுடைய பேருருவம் பெரும் அதிர்ச்சியாகிவிட்டது. மேலும் அனு மன் தன்னைக் காணக் கடல் கடந்து வந்த திறத்தைச் சந்தேகிக்காத சீதை அதே அனு மன் தன்னைத் தூக்கிக்கொண்டு அதே கடலைக் கடக்கச் சக்தியற்றவன் என்று ஏன் நினைத் தாள்? 36வது சர்க்கத்தில் [7-11 சுலோகங் கள்] சீதையே அனுமனை,

"நீர் விக்கிரமசாலி, சமர்த்தர், எல்லாம் அறிந்தவர், உம்மால் இந்த அரக்கரின் அந் தஸ்து அற்பமாக்கப்பட்டது; பயங்கர மீன்கள் நிறைந்த நூறு யோசனை அளவுடைய இந்தச் சமுத்திரம் மாட்டுக்குளம்படியாக்கப்பட்டுத் தாண்டப்பட்டது; உம்மைச் சாதாரண வானர மாய் நான் நினைக்கவில்லை.

त्वाम् प्राकृतं वानरम् न मन्ये; (36-9)

ஏனெனில் உமக்கு ராவணனிடம் அச்சமோ, கவலையோ இல்லை. மேலும், இவ்வளவு பராக்ர மம் இல்லாத ஒருவரை ராமன் என்னிடம் அனுப்பமாட்டாரன்ருே?"

என்றெல்லாம் பாராட்டிப் புகழ்ந்து பேசிய சீதை சிறிதுநேரத்தில் அவனை அல்ப சரீர முடையவனென்றும், தன்னை எடுத்துக் கொண்டு கடல் கடப்பதாக அவன் சொன்னது குரங்குத்தனம் என்றும் பழிப்பது பொருந்து வதாக இல்லை. சாதாரண வானரனுக அனு மனைத் தான் கருதவில்லை என்று 36வது சர்க்கத்தில் பேசிய சீதை அடுத்த சர்க்கத்தில் அவனைக் குரங்குத்தனமுடையவன் என்று குறிப்பிடுவது முன்னுக்குப் பின் முரணுனதா கக் காணப்படுகின்றது. முதலில் அனுமனைப் பாராட்டியபோது சீதை அவனுடைய ஆற்றலை நன்கு புரிந்துகொண்டுவிட்டாள் என்றே நாம் நினைக்கின்ருேம். ஆனல் அடுத்த சில நிமிஷங் களில் சீதை அனுமனைக் குறைவாக மதிப்பிடும் போது நமக்கே அது ஆச்சரியமாக இருக் கின்றது. இம் முரண்பட்ட நிலையைத் தவிர்க் கவே கம்பன் இக்காட்சியை வேறுவிதமாக அமைத்து விட்டான் என்பதை இப்பகுதியின் முதலில் பார்த்தோம். அனுமன் கடல் கடந்து வந்த விதத்தை ஜானகி வினவுவதாகவும் அதற்குப் பதில் சொல்லும் முறையிலேயே அனுமன் தன் பேருருவைக் காட்டியதாகவும் கம்பன் கதை நடத்துவான். இந்தக் கேள் வியே வான்மீகியில் இடம் பெறவில்லை. ஆனல் சீதை, அனுமன் இருந்த அசோகவனச் சூழ் நிலையில் அனுமன் எவ்வாறு கடலைக் கடந்து வந்தான் என்று சீதை கேட்பது மிகவும் இயற்கையான பான்மைதான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இனி, கம்பனில் அனுமன் சீதையைத் தான் சுமந்து சென்று ராமனிடம் சேர்த்துவிடுவதா கச் சீதையிடம் சமர்ப்பிக்கும் முறையையும், அதனை அவள் மறுக்கும்போது அனுமனு டைய மனம் சிறிதும் புண்படாதவாறு பேசும் அழகினையும் அடுத்த பகுதியில் பார்ப்போம்.

9. சொல்லினல் சுடுவேன்

அரக்கர் உலகில் சீதைபடும் துயரத்தைக் கண்ணல் கண்டவனுதலால் அனுமனுக்கு விந்தையான ஒரு யோசனை தோன்றுகின்றது. சீதை தன் முதுகில் அமர்ந்துகொண்டால் அவளைச் சுமந்து சென்று ராமனருகில் விட்டு விடலாமல்லவா? ஒருவேளை ராமன் படை யெடுத்து வருவது தெரிந்ததும் ராவணன் சீதையைக் கொன்று விடக்கூடும். தனக்குக்

கிடைக்காதது ராமனுக்கும் கிடைக்காமல் போய்விடட்டுமே என்று ராவணன் நினைத்து விடலாம். சீதை தம் பக்கம் வந்து விட்டால் இந்த மாதிரி நிகழ வாய்ப்பில்லை. எனவே சீதையை உடனே ராமனிடம் கூட்டிச்சென்று விடுவதே நல்லது. அனுமன் தன் கருத்தைச் சீதையிடம் தெரிவிக்கின்றான். அனுமனின் இந்த யோசனைக்குச் சீதை தந்த பதில் இந்தியப் பெண்மையின் சிறப்பிற்கு ஓர் இலக்கணமாக அமைகின்றது.

இலங்கையைவிட்டு எவ்வளவு சீக்கிரம் வெளியேறி ராமபிரானின் அருகில் சென்று விடமுடியுமோ அவ்வளவுக்கு நல்லதுதான். ஆனால் எப்படி வெளியேறுவது? ராமனுடைய கோதண்டத்தின் வலிமையால் ராவணனும் அரக்கருலகமும் அழிந்துபோன பின்னர்தான் இலங்கையை விட்டு வெளியேறுவது ராமனுக்கும் தனக்கும் பெருமை தரக் கூடியதாகும். மேலும் அனுமன் குறிப்பிட்ட விடுதலையைச் சீதை தானே தேடிக் கொள்ளமுடியும். கற்புடைப் பெண்டிர்க்கு, ராமனைப்போன்ற புருஷோத்தமனோ, அவனுடைய ஆற்றல் பொருந்திய கோதண்டமோ, காற்றினும் கடுகிச் செல்லும் வேகமுடைய பேருருவம்கொண்ட மாருதியோ துணை செய்யவேண்டியதில்லை. அவர்களுடைய கற்பே அவர்களுக்குத் துணை. கற்புடைய மாதர்க்குத் தீங்கிழைத்தவர்கள் இலங்கையில் மட்டுமல்ல வேறு எந்த உலகத்தில் இருந்தாலும்சரி அவர்களை அழிக்கும் சக்தி அம் மாதர்க்கு உண்டு. அந்தச் சக்தி வில்லிலோ, வேலிலோ, வாளிலோ இல்லை; அம் மாதரின் சொல்லிலேயே இருக்கின்றது. ராமனுடைய வரமும் பலமும், அனுமனுடைய அசாதாரண வலிமையும் செய்யக் கூடியதைச் சீதையின் சொல் சாதித்துவிடும். அச்சொல்லினால் சீதை தன்னை விடுவித்துக்கொள்ள முடியும். ஆனால் செய்ய விரும்பவில்லை. ஏனெனில் தன்னைக் காப்பது கணவனின் கடமை; தன் கணவன் உயிரோடிருக்கின்றான்; அதுவும் அந்தக் கணவன் தன் விடுதலையை வில்லால் பெறக்கூடிய ஆற்றல் பெற்றவன்; இந்த நிலையில் தன் கற்பின் திறத்தால் தன்னுடைய விடுதலையைத் தேடிக்கொள்வது கணவனின் பெருமைக்கு இழுக்கு ஆகும். குற்றம் புரிந்தவர்கள் இலங்கையில் மட்டுமல்ல, வேறு எந்த உலகத்தில் இருந்தாலும் கற்பின் திறத்தினால் அவர்களை அழிக்க முடியும். ராமனுடைய வில்லாற்றலுக்கு மாசு ஏற்படுமே என்ற ஒரே காரணத்தினால்தான் சீதை தன் சொல்லால் இலங்கையை எரித்து விட்டுத் தன் விடுதலையைத் தேடிக்கொள்ளாமலிருந்தாள். கற்புக்கனலான சீதாதேவியின் எண்ணத்தைக் கம்பன் கவியில் காண்போம் :

அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ?
எல்லைநீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன்; அது, தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்!

— சூடாமணிப் படலம் 18

பகுத்தறிவு இல்லாதவர்கள் மனித உருவில் இருந்தாலும் அவர்கள் விலங்குகளாகவே கருதப்படவேண்டும் என்பர் தொல்காப்பியர். விலங்குகளும் இவர்களும் ஐந்தறிவே உடையவர்கள் என்பர் அவர் :

" மாவும் மாக்களும் ஐயறிவினவே "

— தொல்காப்பியம், பொருளதிகாரம்,
மரபியல்–32

ஆறறிவுடையவரை மக்கள் என்றும் ஐந்து அறிவுடைய விலங்குகள்போன்று நடந்து கொள்பவரை 'மாக்கள்' என்றும் அழைப்பது மரபு. பெண்களுக்குத் தீங்கு புரியும் பித்தர்களை விலங்கினத்துடன் சேர்த்து 'மாக்கள்' என்றே குறிப்பிடுகின்றாள் சீதை.

ராமாயணத்தில் மிகவும் பாராட்டப்பட்ட பாடல்களுள் இதுவும் ஒன்று. இப்பாடலில் உள்ள சொற்செறிவும் கருத்துச் செறிவும் படித்துப்படித்துச் சுவைக்கத்தக்கன. கற்பின் செல்வியின் வாக்கில் வந்துள்ள, கற்பின் திறத்தைப் பேசும், இப்பாடல் சிரஞ்சீவித் தன்மை பெற்றுள்ளது.

பெண்டிர்க்குத் தம் கற்பே துணை என்பதைக் குறிக்கவே " என் " சொல்லினால் சுடுவேன் என்கின்றாள் சீதை. தன்னைக் காக்கும் மனத்திறமுடையவனாதலால் ராமனைத் "தூயவன்" என்றும், அவ்வாறு காப்பாற்றுவதற்கான செயல்திறமும் ஆற்றலும் அவனுக்கு உண்டு என்பதைக் குறிக்க "வில்லின் ஆற்றல்" என்றும், இந்த நிலையில் தானே முயன்று தன்னை விடுவித்துக் கொள்ளும் எண்ணத்திற்கே தன் மனதில் இடம் தராமல் துடைத்து

எறிந்துவிட்டதை "வீசினேன்" என்றும் சீதை குறிப்பிடுவது காணலாம்.

சீதையின் கற்பு அரக்கரை எரிக்க வந்த நெருப்பு என்பதைப் பல இடங்களில் கம்பன் குறிப்பிட்டுச் செல்வதைப் பார்க்கலாம்.

சூர்ப்பணகை முதன் முதலில் சீதையைப் பார்த்ததைச் சொல்ல வந்த கம்பன்,

"மீன் சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் [அரக்கர் என்னும்
கான் சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணில் [கண்டாள்."

—ஆரண்யகாண்டம், சூர்ப்பணகைப் படலம் 58

என்று குறிப்பிடுகின்ருன். நட்சத்திரங்கள் ஒளி வீசும் விண்ணுலகத்திலும், மற்றும் மண்ணுலகத்திலும் பெருகிப் பரந்திருந்த அரக்கர்கள் என்ற வனத்தை எரிக்க வந்த கற்பாகிய நெருப்புப் போன்ற சீதையைச் சூர்ப்பணகை கண்டாளாம்.

இலங்கை, தீயில் அழிந்து போனதைப் பற்றி ராவணன் மந்திராலோசனைச் சபையில் வீடணன் குறிப்பிடுகின்ருன். "இலங்கை நகரத்தைத் தீக்கிரையாக்கியது அனுமன் என்ற வானரம் அன்று; உலகங்களுக்கெல்லாம் தாயாகிய சீதையின் கற்புத் தீயினல்தான் இலங்கை எரிந்து அழிந்தது" என்பான் வீடணன்:

"கோநகர் முழுவதும், நினது கொற்றமும்
ஜானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினுல் வெந்தது அல்லது ஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ?"

—யுத்த காண்டம், ராவணன் மந்திரப்படலம் 75

யுத்தம் முடிந்தபின்னர், சீதைஅக்னிப்பிரவேசம் செய்தபோது சீதையின் கற்புத்தீயினல் அக்னிதேவனே தீப்புண்களுடன் சீதையை ராமனிடம் சேர்ப்பித்தான் என்பான் கம்பன்.

"......பாலின் பஞ்சு எனத்
தீய்ந்தது அவ் எரி, அவள் கற்பின் தீயினுல்"

— யுத்த காண்டம், மீட்சிப் படலம் 85

எனவே சீதை தன் கற்பின் திறத்தினல் இலங்கையை எரிக்க முடியும் என்று கூறியது பொருத்தமானதுதான் என்பது புலப்படும்.

வான்மீகியும் இதனைக் குறிப்பாக உணர்த்துகின்ருர். ராவணன் சீதையைத் தூக்கிச் சென்றபோது, அக்காட்சி மலையிலுள்ள காட்டில் எழுந்த காட்டுத்தீ போன்றிருந்தது என்பார் முனிவர். மலையிலுள்ள காட்டிற்கு ராவணனையும், அதனிடையில் எழுந்த நெருப்பிற்குச் சீதையையும் ஒப்பிடுவார் ஆதிகவி.

— ஆரண்ய காண்டம் 52 : 17

மேலும் வான்மீகியில் சீதை, தன்னுல் அரக்கரை அழித்துவிட முடியும் என்று ராவணனிடமே கூறுவதாக வருகின்றது. தன்னிடம் தகாத வார்த்தைகள் பேசிய தசகண்டனைச் சீதை எச்சரிக்கின்ருள்.

"சாம்பலாக வேண்டிய தசக்ரீவனே! ராமபிரானுடைய கட்டளை இல்லாததாலும், என்னுடைய பெண்மைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டியிருப்பதாலும் உன்னை நான் எரிக்காமலிருக்கின்றேன்."

— சுந்தர காண்டம் 22: 21

மகாபாரதத்தில், பாஞ்சாலியை இழுத்துச் சென்று, கேடுற்ற மன்னர் அறங்கெட்ட சபைதனில் நிறுத்தி அவமானப்படுத்திய பின்னர், பஞ்சபாண்டவர்களின் பெருமையைக் குலைத்து வனவாசத்திற்கு அனுப்பினுர்கள். பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் வனம் புறப்படும் சமயம் தம் அன்னை குந்திதேவியிடம் விடைபெறுவதற்காக வருகின்றனர். அப்போது துருபதன் குலக்கொழுந்தைப் பார்த்த குந்திதேவி கொதிக்கும் உள்ளத்துடன் கூறுவாள்: "குழந்தாய்! இந்தப் பெரிய ஆபத்தை அடைந்தும் நீ விசனப்படலாகாது. ஸ்திரீ தர்மங்கள் உனக்குத் தெரியும். நீ கற்புள்ளவள்; குணங்கள் நிரம்பினவள்; பிறந்ததும் புகுந்ததுமாகிய இரண்டு குலங்களும் உன்னுல் பெருமைப்படுத்தப்பட்டன. குற்றமற்றவளே! இந்தக் கௌரவர்கள் அதிர்ஷ்டமுள்ளவர்கள்! அதனல்தான் உன்னுல் எரிக்கப்படாமலிருக்கின்றனர்!" —வியாச மகாபாரதம், சபாபர்வம், அனுத்யூதபர்வம் 101ஆம் அத்யாயம். ஸ்ரீனிவாசாச்சாரியர் மொழிபெயர்ப்பு பக்கம் 332

பாண்டவர்கள் நகரத்தை விட்டுச் சென்றபோது தர்மன் துணியினல் தன் முகத்தை மூடிக்கொண்டு போனுன் என்றும், அதற்குக் காரணம் தர்மத்திலிருந்து சிறிதும் மாருத சிந்தையுடைய தர்மன், கௌரவர்களின் சதியினல் கெடுக்கப்பட்டதால் ஏற்பட்ட கோபத்தோடு உக்கிரமான பார்வையினல் பார்த்து இந்தக் கௌரவர்களை எரிக்கலாகாது என்று

நினைத்துக் கண்களைத் திறக்கவில்லை என்றும் விதுரன் திருதராஷ்ட்ரனிடம் விவரிக்கின்றான். [வியாசபாரதம் Ibid. பக்கம் 335]. தன் கணவனுக்குக் கேடிழைத்த மன்னன் அழிந்தபின்னர், அவன் ஆண்ட மதுரையையும் தீக்கிரை ஆக்கிய கற்பின் கனலியான கண்ணகியின் கதையைச் சிலப்பதிகாரம் சிறப்பாகப் பேசுகின்றது.

எனவே, கொடுமையை அழிக்கும் ஆற்றல் தர்மத்திற்கும் கற்பிற்கும் உண்டு என்பதும், சந்தர்ப்பத்திற்கேற்ப அவை தம் கடமையை நிறைவேற்றும் என்பதும் நம் இலக்கியங்களின் மரபாதல் காணலாம். சீதையின் சீற்றம் கட்டுப்படுத்தப்பட்டதற்குக் காரணம் காகுத்தனின் வில்லாற்றலின் பெருமையை நிலைநாட்டவேண்டும் என்பதுதான். பெண்டிர் கணவனின் பெருமையைக் காப்பதற்காக எவ்வளவு இன்னல்களுக்கும் தங்களை ஆளாக்கிக் கொள்கின்றனர் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாகிறது. கணவனின் பெருமைக்குக் குறைவு நேர்வதாக இருந்தால், தன்னால் முடிந்தாலும் அச்செயலைச் செய்யாமலும், கணவனைத் தவிரப் பிறர் உதவிபுரிய முன்வந்தால் அதனை ஏற்றுக்கொள்ளாமலும், அதனால் ஏற்படும் கஷ்டங்களை ஏற்றுச் சகித்துக்கொண்டிருப்பதுமே பெண்ணின் பெருமையாகக் கருதப்பட்டு வந்துள்ளன எனத் தெரியவருகிறது. ராவணனுடைய சிறையிலிருந்து ஒரு நொடியில் தன்னை விடுவித்துக்கொள்ளும் வழியிருந்தும், ராமனுடைய வீரத்திற்கு மாசு ஏற்படும் என்பதால் அச்சிறைவாசக் கொடுமைகளையெல்லாம் பொறுமையாக ஏற்றுக்கொண்டதன் மூலம் சீதை பெண்குலத்திற்கே பெருமை தேடித் தந்திருக்கின்றாள் என்பதில் ஐயமில்லை.

10. சூடாமணியும் பிரியாவிடையும்

சிறையிருந்த செல்வியின் சிந்தையில் ஏற்பட்ட ஐயங்களையெல்லாம் நீக்குகின்றான் அஞ்சனைச் செல்வன். சீதையைத் தேடிப் புறப்பட்ட அனுமனிடம் ராமன் அடையாள மொழிகள் சிலவற்றையும் மோதிரத்தையும் கொடுத்தனுப்பியதுபோன்று, தன்னைச் சந்தித்த மாருதியிடம், ராமன்பால் சொல்வதற்காகச் சில அடையாள மொழிகளைக் கூறிவிட்டுத் தன் ஆடையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த சூடாமணியைக் கையில் எடுக்கின்றாள். சீதையின் தலையை அழகு செய்த அந்தச் சூடாமணி அவள் கையில் இருந்தது. அதன் ஒளி அங்குச் சூழ்ந்திருந்த இரவைப் பகலாக்கியது; இலங்கையுள் புகுவதற்கே அஞ்சிய சூரியன் பயமில்லாமல் ஒளிவீச ஆரம்பித்து விட்டானே என்று அரக்கர் கவலையுற்றனர்; இரவில் பிரிந்து பகலில் சேரும் சக்கரவாகப் பறவைகள் சூரியன் எழுந்தான் என்று இன்பகீதம் பாடின; ஆதவன் உதித்தான் என்று தாமரை மலர்ந்தது; சூரியனைக் கண்டதும் ஒளி பெருக்கும் சூரியகாந்தக்கற்கள் ஒளிவீச ஆரம்பித்தன; இந்த அதிசயங்களையெல்லாம் தோற்றுவிக்கும் பொருள் என்ன என்பதை அனுமன் வியப்புடன் பார்த்தான். கருமேகம்போன்ற கூந்தலின் நடுவே ஒளிவிடும் சூரியனைத் தோன்றியது அச் சூடாமணி; சீதையின் மேனியைப் போன்றும் ராமனின் தாமரைப் பாதங்கள் போன்றும் சிவந்து விளங்கும் அச் சூடாமணியைக் கண்டான் அனுமன்.

கையில் சூடாமணியுடன் சீதை அனுமனிடம் கூறுவாள்:

"சூடையின் மணி; கண்மணி ஒப்பது; தொல்நாள்
ஆடையின்கண் இருந்தது; பேரடையாளம்;
நாடிவந்து எனது இன்னுயிர் நல்கிய நம்பா!
கோடி" என்று கொடுத்தனள் மெய்ப்புகழ்
[கொண்டாள்.

— சூடாமணிப் படலம் 88

"இச்சூடாமணி என் கண்ணின் மணி போன்றது; பல நாட்களாக என் ஆடையில் முடிந்து வைக்கப்பட்டுப் பாதுகாக்கப் பெற்றது. முன்னர், ரிஷியமுகபர்வதத்தில் நான் சில அணிகலன்களைத் துணியில் சுற்றி எறிந்தபோது இதனை மட்டும் என்னிடமே வைத்துக் கொண்டுவிட்டேன். இதுவே மிகச் சிறந்த அடையாளமாக ராமனிடம் கொடுக்கத்தக்கது. கொடும் அரக்கர் காவல் கடந்து என்னைத் தேடி வந்து நான் உயிர் நீக்கும் வேளையில் தடுத்து என்னுயிர் தந்த ஆடவர் திலகமே! இதனை என் நாயகனிடம் தருவாயாக."

அனுமனை இங்கு "நாடி வந்து எனது இன்னுயிர் நல்கிய நம்பா" என்று சீதை அழைப்பது அவளுடைய நன்றி உணர்வின் வெளிப்பாடு ஆகும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (302) ***தர்மசக்கரம் 30; இதழ் 12ல் 'அருள் விருந்து' என்ற தலைப்பில் 18வது (கடைசி) அருள் விருந்து எனக்கு விளக்கமாகப்புரியவில்லை. அருள் கூர்ந்து புரியும்படி தெளிவுபடுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.***

அருள்விருந்து வருமாறு:

''பழைய கொள்கைகள் யாவுமே பெரு நெறிகள் ஆகமாட்டா; புதிய கொள்கை களிலும் புனிதம் பொலிவதுண்டு.''

பழைய கொள்கைப்படி மாது ஒருத்தி தன் கணவனைத் தெய்வமாகக் கருதி அவனை வழி படக் கடமைப்பட்டிருக்கிருள். ஆனல் அம் மனிதனே அவள் படைத்துள்ள மனப்பான் மையைத் தானும் பெருதிருப்பது அவனுக்கு இழுக்காகாது. அவன் மறுமணம் புரிந்து கொள்ளலாம்; மாது ஒருத்தி அங்ஙனம் செய்ய லாகாது.

இனி, புதிய ஏற்பாட்டின்படியோ ஸ்ரீ ராம கிருஷ்ணர் மணந்துகொண்டவளை மனைவியா கக்கருதவில்லை; அன்னைபராசக்தியின் சொரூப மாகவே கருதினர். அங்ஙனம் கருதியதுமட்டு மன்றி அந்த வடிவத்தின் வாயிலாகத் தாம் வழிபட்ட தெய்வமாகிய அன்னை பராசக் திக்கு முறைப்படி ஆராதனை செலுத்தினர். எனவே பழைய போக்கில் ஒரு சார்பில் இருந்த மேலாம் மனப்பான்மை இந்தப் புதிய ஏற்பாட்டின்படி இரு சார்பாருக்கும் பொது வாகிறது. அந்த அளவில் இப்புதியது பழையதைவிட மேலானது என்பது வெளிப் படை.

பழைய கொள்கையின்படி கற்புடைய மாது ஒருத்தி தன் கணவனை இழக்குங்கால் தானும் உடன்கட்டை ஏறுவது பாராட்டத்தக்க பெரிய செயலாகக் கருதப்பட்டது. அப்படிச் செய்ய இயலாத விதவைகள் மொட்டையடித் துக்கொண்டும், மேனியை விகாரப்படுத்திக் கொண்டும் தௌர்பாக்கியத்துக்குச் சின்ன மாக வாழ்வை ஏதோ ஒரு பாங்கில் கழித்து வந்தார்கள். பரமஹம்சதேவரின் கோட்பாட் டின்படி இது பொருந்தாத செயலாகும். இது காறும் மானுடன் ஒருவனுக்கு உட்பட்டிருந்த பெண்பால் இனித் தெய்வத்துக்கு உட்பட்ட வளாக வேண்டும் என்றும் மேலான சமுதாய சேவைகள் பல செய்தல் முறைமை என்றும் வழி வகுத்துக் கொடுத்திருக்கிருர். இக்கோட் பாட்டின்படி மாது ஒருத்தி கைம்பெண்ணுவது தௌர்ப்பாக்கியமன்று. புதிய சௌபாக்யம் அதில் அவளுக்கு வடிவெடுக்கிறது. சுபகாரி யங்களில் அன்னவள் கலந்து கொள்ளுவது அமங்கல்யம் ஆகாது. அவள் வாழ்ந்துவரும் புதிய மேலான வாழ்வே அதற்குப் பிரமாண மாக அமைகிறது. இந்த அருள் விருந்துக்கு இப்புதிய வாழ்க்கை முறைகளிரண்டும் எடுத் துக்காட்டுகள் ஆகின்றன.

கேள்வி: (303) ***தை மாதத்திய 'தர்ம சக் கரம்' இதழில் வெளியான தங்கள் கட் டுரையான 'கண்ணன் வாழ்வும் போதனை யும்' என்பதில் ஒன்பதாவது அவதார மாகப் புத்த அவதாரம் அமைகின்றது என்று பகர்ந்துள்ளீர்கள். நான் நினைப் பதாவது: 'பண்பும் உழைப்பும் கொண்ட தாகக் கலப்பை ஏந்திய பலராம அவதா ரம் எட்டாவது அவதாரம்; ஒன்பதாவது அவதாரம் விவேகத்தின் சிகரமான கிருஷ்ணுவதாரம்.' தாங்கள் புத்தாவதா ரம் ஒன்பதாவது என்று கூறியுள்ளது சந்தேகமாக உள்ளது; விளக்கம் தேவை.***

அவதார மூர்த்தி ஒருவருடைய வாழ்க்கை யும் செயலும் தர்மத்துக்கு விளக்கமாக அமை கின்றன. தசரத ராமனுடைய தம்பிமார் மூவ ரும் தமையனுடைய வாழ்க்கையைத் தெளிவு படுத்துதற்கும் அவனுடைய திட்டத்தை நிறை வேற்றுவதற்கும் கருவிகளாக இருந்தார்கள். தசரதராமன் தர்மத்தினின்று சிறிதும் பிசக வில்லை. ஆகையினல் அவன் நரோத்தமன் எனப் போற்றப்படுகிருன். வரிசைக்கிரமத்தில் அவன் ஏழாவது அவதாரம். எட்டாவது அவ தாரமாக வருவது ஸ்ரீ கிருஷ்ணன். அவன் பரமாத்மாவாகவே போற்றப்படுகிருன். கிருஷ் ணனை அறிவதும், பரதத்துவத்தை அறிவதும் ஒன்றேயாம்.

இனி, கிருஷ்ணனுடைய தமையன் பலராமன்

அதர்மமே வடிவெடுத்திருந்த கம்சனைக் கொல்லுதற்குமட்டும் தன் தம்பியாகிய கிருஷ்ணனுக்குத் துணைபுரிந்தான். அடுத்தபடியாக கௌரவர்களைத் துன்மார்க்கத்தினின்று நல்வழிக்குத் திருப்ப முயன்றதும், அம்முயற்சி சாத்தியப்படாதவிடத்து அக்கொடிய கௌரவர்களைக் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் துடைத்துத் தள்ளியதும் கிருஷ்ணனுடைய முக்கியமான செயலாயின. அவனுடைய தமையனாகிய பலராமனோ முற்றிலும் கௌரவர்களுக்குத் துணைபுரிபவனாக இருந்தான். கௌரவர்கள் சூதாடிப் பாண்டவர்களுடைய ராஜ்யத்தை அபகரித்துக்கொண்டதில் குற்றம் ஏதும் இல்லை என்று விராட நகரத்தில் தன் தம்பியோடும், மற்றவர்களோடும் வாதாடினான். உதவியை நாடிக் கௌரவர்களுள் மூத்தவனாகிய துரியோதனன் பலராமனிடம் சென்றான். அப்பொழுது அவன் விராட நகரத்தில் துரியோதனனுக்குச்சாதகமாகப்பேசியதைத் தம்பி கிருஷ்ணன் ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் கிருஷ்ணன் பாண்டவர்களுக்குத் துணைபுரியத் தீர்மானித்திருப்பதால் தன் தம்பிக்கு விரோதமாகப் போருக்குப் போகப் பலராமன் மறுத்துவிட்டான். பின்பு யுத்தத்தின் கடைசிப் பகுதியில் கிருஷ்ணனால் தூண்டப்பட்டுப்பீமன் செய்துள்ள சபதப்படி துரியோதனனைத் தொடையில் அடித்து வீழ்த்தியது பிசகு என்று ஆட்சேபித்தான். இங்ஙனம் பலராமன் வாழ்ந்த பூவுலகவாழ்வு அதர்மத்துக்கு ஆதரவு தருகிற பாங்கில் இருந்ததால் அன்னவனை ஓர் அவதார மூர்த்தியாக ஏற்றுக்கொள்வது பொருந்தாது.

பத்து அவதாரங்கள் பிரபஞ்ச வாழ்க்கையில் ஜீவர்கள் பரிணமித்து மேல்நிலைக்கு வருவதற்கு விளக்கங்களாக அமைந்திருக்கின்றன. அக்கோட்பாட்டின்படி புத்தாவதாரம் முற்றிலும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அவருடைய வாழ்க்கை முழுதும் தத்துவத்துக்கு விளக்கமாகிறது. ஜீவாத்மாவாகிய மனிதன் முறையாக முயன்றால் அவன் தன்னிடத்திலுள்ள கீழ்மைகளை வென்று, நலத்தில் நிலைபெற்றிருந்து பிரபஞ்சவாழ்வைக் கடப்பது சாத்தியம் என்பதற்குப் புத்தாவதாரம் யாண்டும் நல்ல பிரமாணமாகும். இந்த அமைப்பே தர்மத்துக்கும் தத்துவத்துக்கும் ஒத்திருக்கிறது.

கேள்வி : (304) நல்லவனாக அமைவதும், கெட்டவனாக அமைவதும் முன் வினைப் பயன் எனவும், சூழ்நிலை காரணம் எனவும் சொல்லுகிறார்கள். கடவுள் ஏன் எல்லாரையும் நல்லவர்களாகவும், எல்லார்க்கும் பொருத்தமான சூழ்நிலையையும் உண்டு பண்ணலாகாது ?

மக்கள் எல்லாரும் பேரறிஞர்களாகப் பிறப்பெடுப்பார்களானால் பிறகு பள்ளிக்கூடம் அமைப்பதற்கு அவசியமில்லை. அதே விதத்தில் மக்கள் எல்லாரும் நல்லவர்களாகப் பிறப்பெடுப்பார்களானால் சிருஷ்டிக்கு அவசியம் இல்லை. ஆனால் இயற்கையின் திட்டம் அத்தகையதன்று. இயற்கையின் அமைப்போ மேலும் திருத்தியமைப்பதற்கு இடமில்லாதபடி அவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது. இதுவே இறைவனுடைய மகிமையாம். இனி, ஒரே சூழ்நிலை ஒருவிதப் பாங்குடையவனுக்கு அனுகூலமாகவும் மற்றொரு விதப் பாங்குடையவனுக்குப் பிரதிகூலமாகவும் அமைகிறது. அவனவன் படைத்துள்ள மனப்பான்மைக்கும் பரிபாகத்திற்கும் ஏற்பச் சூழ்நிலைகளைச் சமாளிப்பது வாழ்க்கைப் பயிற்சியாம். ஜப்பான் தேசத்தில் அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு மக்களுக்கு உபத்திரவம் மிக உண்டாகிறது. அதைச் சமாளிப்பது அந்நாட்டவர்கள் பெற்று வருகிற பயிற்சியாம். பாலைவனப் பிரதேசங்களில் மழை கிடைப்பது அரிதிலும் அரிதாம். அச்சூழ்நிலையைச் சமாளித்து வாழ்க்கையில் முன்னேற்றமடைவது அப்பிரதேசத்தவர் பெற்றுவருகிற பயிற்சியாம். எனவே, பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் நலனும் கேடும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. ஆங்காங்கு அமைந்துள்ள கேட்டைச் சமாளிப்பதும் நலனைப் பயன்படுத்துவதும் வாழ்க்கையின் கூறுகளாம்.

பழவினைப்பயன் எதுவாகவிருப்பினும் அதை மூலதனமாக வைத்துக்கொண்டு மனிதன் எடுத்திருக்கும் இப்பிறப்பில் சரியாக முயன்று முன்னேற்றமடையக் கடமைப்பட்டிருக்கிறான். இதுவே இறைவன் அமைத்துள்ள திட்டமாம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-162

921. सदातुष्टा ஸதாதுஷ்டா— எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உயிர்வகைகள் யாண்டும் ஏதேதோ தேவைகளை நிறைவேற்றுவதற்காகக் காலமெல்லாம் முயன்று கொண்டிருக்கின்றன. தேவை நிறைவேறப்பெறாது இருக்கும் பொழுது ஸந்துஷ்டி சாத்தியப்படாது. இனி, உயிர்வகைகளுக்கு ஓர் ஆசை நிறைவேறப் பெறுவதற்கு முன்பே மற்றோர் ஆசை மனதில் உதித்து முன்னணியில் வந்து நிற்கிறது. கடலில் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வடிவெடுத்துக் கொண்டிருப்பதற்கு நிகராக மனது என்னும் ஆழ்கடலில் அளவற்ற ஆசைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பிக் கொண்டேயிருக்கின்றன. அவை யாவையும் அறவே அகற்ற மனிதனுக்கு இயலாது. ஆதலால் அவன் எப்பொழுதுமே அல்லலிலும் அதிருப்தியிலும் அலைந்து கொண்டிருக்கிறான். அன்னை பராசக்தியோ பூரணி; எல்லையில் அடங்காதவள்; அகண்டாகாரத்தில் அவள் சொரூபம் விரிவடைந்து இருக்கிறது. அவளுக்குப் புறம்பாக ஏதுமில்லை. நிறைபொருளாக அவள் யாண்டும் இலங்கிக் கொண்டிருக்கிறாள். வழிபாட்டிலே அவளுடைய மகிமை பூரண கும்பத்தின் வாயிலாக விளக்கப்படுகிறது. நிறைபொருளாயிருக்கும் அவளிடத்து வேறு எதையும் செலுத்த முடியாது. செலுத்துதற்கு அவளுக்கு அன்னியமான வஸ்து ஏதுமில்லை. ஆதலால்தான் அவள் சர்வகாலமும் சந்துஷ்டியுடன், பரம திருப்தியுடன் வீற்றிருக்கின்றாள்.

நிராசையும் நிறைவுநிலையும் ஒன்றே என்பது அன்னையின் அருளால் தாற்காலிகமாகச் சுஷுப்தி அவஸ்தையின் வாயிலாக மனிதனுக்கு விளக்கப்படுகிறது. அயர்ந்த உறக்கத்தில் ஆசை வடிவத்தில் உள்ள மனது மனிதனிடத்து ஒடுங்கிக் கிடக்கிறது. ஆதலால் அவன் அயர்ந்த உறக்கத்தில் பரமானந்தத்தில் திளைத்திருக்கிறான். அந்நிலையிலிருக்கும் வரையில் யாண்டும் திருப்தியிலிருக்கும் அன்னையின் சொருபத்தில் ஒன்றுபட்டிருக்கின்றான். தான் சுஷுப்தி அவஸ்தையில் இருக்கும் நிலையை அன்னையின் அருளால் ஜாக்ரதாவஸ்தைக்குக் கொண்டு வருவானாகில் ஸதாதுஷ்டா என்னும் நாமத்தின் உட்பொருளை உள்ளபடி அறிய அவன் வல்லவனாகிறான்.

அஷ்டாங்க யோகத்தில் இரண்டாவது அங்கமாயிருக்கின்ற இயமத்தில் சந்தோஷம் என்னும் நியதி இடம் பெற்றிருக்கிறது. யாண்டும் அமைதியும் இனிமையும் கூடிய மகிழ்வில் நிலைத்திருப்பவனுக்கே யோகம் கைகூடுகிறது என்பது அதன் பொருள். துன்பப்பட்டுக் கொண்டிருப்பவனுக்கும் பொருளற்ற அகமகிழ்வில் உழன்று கொண்டிருப்பவனுக்கும் யோகம் கைகூடாது என்பது அதன் பொருள். இனிமையும், அமைதியும் கூடிய சந்தோஷத்தில் மனது மேலாம் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையதாகிறது. அத்தகைய ஆழ்ந்த அமைதியான மனநிலையை அடையப் பெற்றவனுக்கே யோகசாதனம் சாத்தியப்படுகிறது என்னும் கோட்பாட்டுக்கு இலக்காக அன்னை பராசக்தி ஸதா ஸந்துஷ்டையாயிருப்பதன் வாயிலாக நிரூபித்துக் காட்டுகிறாள். ஆத்ம சாதகர்கள் மனதை இப்பாங்கில் வைத்திருப்பது அவசியம்.

922. तरुणादित्य-पाटला தருணாதித்ய பாடலா — நண்பகல் சூரியனைப் போன்று சிறிது சிவப்போடு கூடிய வெள்ளை நிறம் படைத்தவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தி இயற்கையாக இலங்குகின்றாள். இயற்கையின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு நிறங்கள் மிளிர்ந்துகொண்டிருப்பது வெளிப்படை. அங்ஙனம் பலவிதமான நிறங்களோடு கூடி இயற்கைத் தாய் இலங்குதலில் முரண்பாடு ஏதுமில்லை. அம்பிகையின் கிருத்தியங்களே உலக நடைமுறைகளாக இலங்கிக்கொண்டிருக்கின்றன. நடைமுறைகளுக்கேற்பவும் நேரத்துக்கேற்பவும் நிறங்கள் மாறியமைவது இயல்பு. அன்னை பராசக்தி மகாகாளி வடிவெடுக்கின்றபொழுது அவளுடைய நிறம் அமாவாசை இருள்போன்று கன்னங்கரேலென்று இருக்கிறது. கார் இரு

ளில் பார்ப்பவர்களுக்குப் புறத்தில் ஒன்றும் விளங்குவதில்லை. தாங்கள் இருப்பதைமட்டும் மக்கள் ஒருவாறு உணர்கிறார்கள். காலத்தின் பாங்கு அத்தகையது. இறந்த காலமோ மறைந்துபட்டுப் போய்விட்டது. மீண்டும் அது காட்சிக்கு வரப்போவதில்லை. நிகழ்காலம் மட்டும் ஏகதேசம் புலனாகிறது. ஆகவே கால மயமாயிருக்கின்ற காளிகாதேவியின் நிறம் கன்னங்கரேலென்று இருப்பது முற்றிலும் பொருத்தமானதே.

எங்கும் வியாபகமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற அன்னை பராசக்தி நீலநிறம் படைத்திருக்கின்றாள். அகண்டத்தில் விரிந்தோடுகிற வெட்டவெளியும் கரைகாணாத கடலும் நீல நிறம் உடையவைகள் போன்று காட்சி தருகின்றன. இதற்கு அறிகுறியாக அன்னையானவள் சியாமளா என்னும் பெயர் பெறுகின்றாள். அவள் அனுக்ரஹ மூர்த்தியாயிருக்கின்றபொழுது பொன்னார் மேனியளாகப் பொலிகின்றாள். அப்பொழுது அவள் கௌரி என அழைக்கப்பெறுகின்றாள். தக தகவென்ற தங்க நிறத்தோடு திகழ்பவள் என்பது அந்த நாமத்தின் உட்பொருள். தருண ஆதித்யம் என்னும் பதம் நண்பகல் சூரியனைக் குறிக்கிறது. பரிபக்குவமடைந்துள்ள ஆத்மசாதகர்கள் அன்னை பராசக்தியின் ஜோதியில் ஒன்றுபடுகின்றனர். அது முக்திக்கு அறிகுறியாக விளங்குகிறது. முக்தியடைந்துள்ள மேலோர்கள் எல்லாரும் ஜோதியில் கலந்தவர்கள் என்று பாராட்டப்படுகிறார்கள். இயற்கையின்கண் உள்ள பாங்குகளை யெல்லாம் கடந்துள்ள ஆத்மஜோதிக்கு அறிகுறியாக நண்பகல் ஞாயிறு வாரிக்கொட்டும் வெளிச்ச மயமாக அன்னை பராசக்தி இலங்குகின்றாள் என்பது பொருத்தமானதே.

இனி, தருண ஆதித்யம் என்பது நண்பகல் சூரியனுக்கும் பால சூரியனுக்கும் இடையிலுள்ள வெள்ளை நிறமான சூரியனைக் குறிக்கிறது. அது சுத்த சத்துவத்தின் சின்னமாகிறது. சுத்த சத்துவத்தை அடையப்பெற்றவர்களே பிறகு குணாதீதத்திற்குப் போகத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள் என்பது கோட்பாடு.

ஆத்ம சாதகர்கள் தியான அவஸ்தையில் இருக்கிறபொழுது அன்னை பராசக்தியை நண்பகல் சூரியன் போன்று பிரகாசித்துக்கொண்டிருப்பவள் எனத் தங்கள் ஹிருதய கமலத்தில் பாவிப்பது பொருந்தும்.

923. दक्षिणादक्षिणाराध्या தக்ஷிணாதக்ஷிணாராத்யா— (தக்ஷிண அதக்ஷிண ஆராத்யா) தக்ஷிண மார்க்கத்தின் வாயிலாகவும் வாமாச்சாரத்தின் வாயிலாகவும் ஆராதிக்கப் படுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

தக்ஷிண மார்க்கம் என்பது வேதத்திலும் ஆகமத்திலும் விளக்கப்பட்டுள்ள சாதனமுறைகளாம். இம்முறைகள் சமயங்களனைத்துக்கும் பொதுவானவைகளாம். மனிதன் திரிகரணங்களிலும் சுத்தமாயிருக்கவேண்டும். ஐம்பொறிகளை வெல்லுதற்கேற்பச் சாதனத்தில் மனிதன் மேல்நிலைக்கு வருகிறான். சதாசாரமே வடிவெடுத்திருப்பவன் தக்ஷிண மார்க்கத்துக்கு உரியவனாகிறான். உயிர்வகைகளனைத்தையும் அன்புடன் அவன் நேசிக்கிறான். சுயநலத்தை ஒதுக்குமளவுக்குச் சாதனத்தில் அவன் மேலே வருகிறான். அம்பிகையினிடத்துப் பூணுகிற பராபக்திக்கு ஒப்ப அம்பிகையின் சிருஷ்டியில் உள்ள ஜீவகோடிகளனைத்தையும் உள்ளன்போடு அவன் நேசிக்கிறான். படிப்படியாகப் பரஞானத்துக்குத் தகுதியுடையவனாக அவன் திருந்தியமைகிறான். இத்தகைய நியதிகளனைத்தும் தக்ஷிண மார்க்கத்தில் அமைந்திருக்கின்றன.

இனி, வாமாச்சாரம் என்பது தக்ஷிணமார்க்கத்தினின்று முற்றிலும் மாறுபட்டதாம்.

தக்ஷிண மார்க்கத்தில் எது தூயதன்று என்று ஒதுக்கி வைக்கப்படுகிறதோ அது வாமாச்சாரத்தில் தூயதாகக் கருதப்படுகிறது. பிணம், மலம், ஸ்மசானம் ஆகியவைகள் அணுகத்தகாதவைகள் என்று தக்ஷிண மார்க்கம் ஒதுக்கி வைக்கிறது. மற்று, வாமாச்சாரமோ ஸ்மசானத்தை வழிபாட்டுக்குரிய தூய இடமாக அங்கீகரிக்கிறது. அகால மரணத்தில் மடிந்து போன மேனி ஒன்றைத் தியானத்துக்கும் வழிபாட்டுக்கும் பொருத்தமான ஆசனமாக வாமாச்சாரம் கருதுகிறது. பரிபாஷையில் இது சவாசனம் எனப் பெயர் பெறுகிறது. வாமாச்சாரத்தை அனுஷ்டிக்கிற சாதகன் சந்த

னத்தையும் மலத்தையும் நிகராகக் கருதி நாவில் தீண்டக் கடமைப்பட்டிருக்கிறன். இவை போன்ற முறைகள் தக்ஷிண ஆசாரத்தோடு ஒவ்வா.

வாமாச்சாரத்தில் மூன்று பகுதிகள் உண்டு. அவை முறையே சாந்தபாவம், வீரபாவம், திவ்விய பாவம் எனப் பெயர் பெறுகின்றன. வாமாச்சாரத்தில் சொல்லியுள்ள சாந்த பாவம் முற்றிலும் தக்ஷிணச்சாரத்துக்கு ஒத்தது. மற்று, வீரபாவமும் திவ்விய பாவமும் தக்ஷிணச் சாரத்தோடு முற்றிலும் முரண்படுபவைகளாம்.

அமாவாசை நள்ளிரவிலே அம்பிகையை வழிபடுபவன் தன்னந்தனியனுக ஸ்மசானத்தில் ஒரு பிணத்தின்மீது அமர்ந்து கொண்டு சாதனங்கள் புரியவேண்டும். அப்பொழுது அவன் காணுகின்ற பயங்கரமான தோற்றங்களைக் கண்டு அவன் அஞ்சுவது பொருந்தாது. பயப்பட்டால் பைத்தியம் பிடித்துப் போவான் அல்லது மடிந்துபட்டுப் போவான். வீரன் ஒருவனுக்கே இச்சாதனம் சாத்தியம். ஆதலால் தான் இது வீரபாவம் என இயம்பப்படுகிறது. இதில் வெற்றியடைகிறவன் அபயத்தில் முற்றிலும் நிலைபெற்றவனுகிறன்.

அடுத்தபடியாகத் திவ்வியபாவத்தில் கட்டழகே வடிவெடுத்திருக்கும் கன்னிகை ஒருத்தியை அன்னை பராசக்தியின் சொருபமாகக் கருதிச் சாதகன் பூஜைபண்ணுகிறன். அப்பொழுது அழகின் உச்சநிலையை அடைந்துள்ள பெண்பாலின் தோற்றங்கள் காட்சிக்கு வருகின்றன. காமவாசனை சிறிதளவாவது சாதகன் உள்ளத்தில் இருக்குமாகில் அப்பொழுதே அவன் புத்தி தடுமாற்றமடைந்து நிரந்தரமாகப் பைத்தியமாய்விடுவான். அத்தகைய ஆபத்தைத் தூயமனம் படைத்தவனுகச் சமாளிப்பவனே அன்னையின் அருளுக்குப் பாத்திரமாகிறன். பயத்தையும் காமத்தையும் இங்ஙனம் வென்றவன் பரஞானத்துக்குத் தகுதியுடையவனுகிறன்.

இங்ஙனம் தக்ஷிண ஆசாரமும், வாம ஆசாரமும் நெறியில் வேறுபடுகின்றனவெனினும் அடைகின்ற குறி ஒன்றேயாம். இக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டே தக்ஷிண தக்ஷிணராத்யா என அம்பிகை போற்றப் பெறுகிறள்.

924. दरस्मेर मुखाम्बुजा தரஸ்மேர முகாம்புஜா — ஆபத்துக்கேதுவான சூழ்நிலையிலும் புன்னகை பூத்த தாமரை முகம் படைத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஆபத்துக் காலத்தில் சாதாரண மாந்தர் படைத்திருக்கும் முகமலர்ச்சியும், புன்னகையும் பறந்தோடிவிடும். அவ்வேளையில் உள்ளத்திலுள்ள குழப்பத்தைப் புறத்தில் முகம் நன்கு விளக்கிக்காட்டுகிறது. இப்பாங்கு மேனி படைத்திருக்கும் மக்களின் போக்கு ஆகும். ஆனல் அன்னை பராசக்தியோ எக்காரணத்தை முன்னிட்டாவது தான் படைத்துள்ள புன்முறுவலினின்று பிறழ்வதில்லை; பிறழவேண்டிய அவசியமும் அவளுக்கு இல்லை. ஏனென்றல் ஆபத்து என்னும் சோதனைக்குரிய சூழ்நிலை, காலத்திலும் இடத்திலும் கட்டுண்டு கிடக்கும் எல்லையில் அடங்கிய உடலைப்படைத்துள்ள ஜீவர்களுக்கு உண்டு. அன்னவர்கள் தென்படுகின்ற நெருக்கடியின் விளைவு தங்களுக்குக் கேடாய் முடியும் என்பதை அறியவருகிறர்கள். எனவே பொருந்தாத சூழ்நிலையில் பயப்படுவது உடல் எடுத்துள்ள உயிர்களின் போக்கு ஆகும். மற்று, அன்னை பராசக்தியோ எல்லையில் அடங்காத அகண்டவஸ்துவாக இலங்குகிறள். ஒரு குளம், குட்டையிலுள்ள ஜலத்தைக் கலக்கிச் சேறுபடியச் செய்யலாம். ஆனல் கடலைக் கலக்க யாருக்குமே இயலாது. அது எல்லையில் அடங்காத நீர்ப்பரப்பு. அதற்கு நிகராக அகண்டாகாரத்தில் விரிந்தோடும் அன்னை பராசக்தியின் பாங்கைப் பாழ்படுத்தவோ மாற்றியமைக்கவோ யாருக்குமே இயலாது. பண்டாசுரன் போன்ற கொடியவர்களைத் துடைத்துத் தள்ளும் தறுவாயிலும் அன்னையின் முகத்தில் விளையாடிக்கொண்டிருக்கிற புன்னகை சிறிதளவும் மாறுவதில்லை. ஆத்ம சாதகர்களுக்கு இது எடுத்துக்காட்டு ஆகிறது. அற்ப மனம் படைத்திருப்பவர்கள் ஆபத்துக்கு அஞ்சுகின்றனர். ஆதலால் அவர்கள் முகம் கோணுகிறது. அகண்டாகாரத்தில் மனதை வியாபகப்படுத்துபவர்களுக்கோ அன்னையின் இனிய புன்முறுவல், முகவிலாசம் தானுக வந்தமைகிறது.

ஞானசூரியன்

பகலும் இரவும் சேர்ந்து ஒருநாள் ஆகிறது. சூரியன் தென்படும் நேரம் பகல் எனவும், சூரியன் மறைந்திருக்கும் நேரம் இரவு எனவும் கருதப்படுகின்றன. சூரியன் மறையும்பொழுது இருள் உலகத்தைக் கவ்வுகிறது. மக்கள் உள்ளத்தில் அச்சம் ஏற்படுகிறது. தீய சக்திகள் இருளில் செயல்பட ஆரம்பிக்கின்றன. சூரியன் உதயமாகும்பொழுது இருள் மறைகிறது. மக்கள் வாழ்க்கையைத் துவங்குகின்றார்கள். உலக இருளைப் போக்குவதற்குச் சூரியன் நாள்தோறும் உதயமாகின்றான். புற இருளைப் போக்குவதற்குச் சூரியன் பயன்படுவது போன்று அஞ்ஞானம் என்னும் அக இருளைப் போக்குவதற்கு அடிக்கடி ஞானிகள் தோன்றி வருகிறார்கள். மக்களுடைய உள்ளத்திலுள்ள அஞ்ஞான இருளை அகற்றுவதற்கு 1836 ஆம் ஆண்டு வங்கத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஞான சூரியனாகத் தோன்றினார்.

சூரியன் வருகையினால் தாமரை மலர்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வருகையினால் மக்களுடைய இதயம் என்னும் தாமரை நன்கு மலர்ந்தது. இருதயத்தை மலரச் செய்வதற்காக வந்த மக்கள் இருதயத்தைப் பாழ்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். வாழ்க்கைமலர வேண்டுமென்றால் இருதயம் மலரவேண்டும். இருதயத்தை மலரச் செய்வதற்குக் கல்வி துணைபுரியவேண்டும். உள்ளத்தைக் கல்லுதல் அல்லது கிளறுதல் கல்வி எனப்படும். உள்ளத்தைக் கல்லுகின்ற அளவு அது பண்பாடு உடையதாகின்றது. உள்ளம் உயர்வடைகின்ற அளவுதான் மக்கள் உயர்நிலையை அடையமுடியும். உள்ளத்தை உயர்த்துவதே வாழ்க்கையின் திட்டமாகும். உள்ளத்தை உயர்த்தும் இலட்சியத்தை மறந்து உள்ளத்தைக் கெடுக்கும் செயலில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டுவிடுகின்றனர். உள்ளத்தை உயர்த்துவது எப்படி என்பதை மக்களுக்குக் காட்டித் தருவதற்கு ஞானிகள் உலகில் பிறப்பெடுக்கிறார்கள். அப்படிப் பிறப்பெடுத்த ஞானிகளுள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிகச் சிறந்தவராகின்றார்.

ஆங்கில ஆட்சியில் இந்திய நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. இந்தியர்களை அடிமைகளாக வைத்திருப்பதற்குவேண்டிய கல்வித் திட்டத்தை அமைத்து இந்தியர்களுக்குக் கல்வி தந்தனர். இதயத்தை மலரச்செய்யும் அம்சம் அக்கல்வித் திட்டத்தில் இல்லை. அடிமை மனப்பான்மையை வளர்க்கும் திட்டம்தான் அக்கல்வித்திட்டத்தில் இடம்பெற்றிருந்தது. அக்கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வந்த கல்வி நிலயத்திற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அனுப்பப்பட்டார். கல்வியின் தரத்தை அறிந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதைக் கற்க மறுத்துப் பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்திவிட்டார். அப்பொழுது அவர் பகர்ந்ததாவது: "வயிறு வளர்ப்பதற்குப் பயன்படும் சோற்றுக் கல்வி எனக்கு வேண்டாம். இக்கல்வி கற்பதில் நான் காலத்தை வீணாக்க விரும்பவில்லை. என் இதயத்தை மலரச் செய்கின்ற இதயக்கல்வி ஒன்றை நான் நாடிப்போகின்றேன்." இங்ஙனம் கூறி இளைஞனாக இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் தற்காலக் கல்வியை அறவே புறக்கணித்தார். காளிதேவியின் உபாசனையில் அவருடைய உள்ளம் ஆழ்ந்து ஈடுபட்டது. காளியின் சிந்தனையில் அவருடைய உள்ளம் ஆழ்ந்து ஈடுபட்டதன் விளைவாக அது உலகை விட்டு விலகி இருந்தது. அவர் உண்ணும் பொழுதும், நடக்கும்பொழுதும், வழிபடும்பொழுதும், எல்லாக் காலத்திலும் காளியையே கருத்தில் கொண்டிருந்தார். உலக மக்கள் அற்ப சுகங்களுக்காக என்னென்ன கஷ்டப்படுகிறார்கள் என்பதை நாம் காண்கின்றோம். நொடிப்பொழுதில் மறைந்துபோகும் அற்ப சுகங்களுக்கு அவர்கள் என்ன பாடுபடுகிறார்கள்! காலமெல்லாம் அற்ப சுகத்தைப் பெறுவதில் கருத்துடையவர்களாக இருக்கின்றார்கள். உண்பதற்கு நல்ல உணவில்லையே என்று மக்களுள் சிலர் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உடுத்துவதற்கு நல்ல உடை இல்லையே என்று இன்னும் சிலர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடியிருப்பதற்குக் குடிசை இல்லையே என்று சிலருக்குக் கவலையாக இருக்கிறது. இன்னும் சிலர் குடியிருக்க அரண்மனை இல்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆடம்

பர வாழ்வில் மூழ்கி உலகச் சுகங்களை வேண்டியவாறு அனுபவிப்பதற்கு வேட்கை உடையவர்களாகப் பலர் இருக்கிறார்கள். அவ்வேட்கை நிறைவேறவில்லையே என்று வேதனைப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இப்படி மக்கள் அக்ஞானத்தால் துயரப்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வுலகில் ஞானசூரியனாக விளங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் காளியின் காட்சிக்காகக் கதறிப்பதறி அழுதார். மாலையில் ஆலயத்தில் பூஜா காலத்தில் அடிக்கும் மணியோசை அவர் காதில் வந்து விழுந்ததும் அவர் உள்ளம் துயரத்தால் துடிக்கும். "தாயே! என் வாழ்நாளில் ஒருநாள் கழிந்துவிட்டது என்பதை இம் மணியோசை எனக்குத் தெரிவிக்கிறது. உன் காட்சி பெறாமலே என் வாழ்நாள் முழுவதும் கழிந்து போய்விடுமோ!" என்று வாய்விட்டுக் கூறித் துயரந்தாங்காது முகத்தைத் தரையில் தேய்த்துக்கொண்டு புலம்புவார். அக்ஞானத்தில் உழல்கின்ற மக்கள் தங்கள் புலம்பல் மூலம் தங்களிடத்தில் இன்னும் அறியாமையை வளர்த்துக்கொள்கின்றார்கள். ஞானிகள் புலம்புகின்ற புலம்பல் மூலம் தங்களுடைய உள்ளத்தைப் பேருணர்வுக்குத் தயாராக்குகிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அம்பிகையின் காட்சி பெறுவதற்காகப் புலம்பிய புலம்பல் அவருடைய உள்ளத்தை மகோன்னத நிலைக்கு எடுத்துச் சென்றது. உள்ளத்திலுள்ள அக்ஞானம் முற்றும் அகன்று தெய்வக் காட்சி பெறுவதற்கு அவருடைய உள்ளம் தயாராகியது. காளிகாதேவியும் அவருக்குக் காட்சி கொடுத்து ஆனந்தப் பேற்றினை நல்கினாள்.

சூரியன் மறைந்ததும் உலகை இருள் கவ்வுகின்றது. உயிர்கள் அப்பொழுது உறக்கத்தில் ஆழ்கின்றன. சூரியோதயம் உயிர்களை உறக்கத்திலிருந்து எழுப்புகின்றது. மக்களுடைய உள்ளத்தில் ஞானம் மறைக்கப்பட்டிருக்கும்பொழுது ஆங்கு அக்ஞானம் இடம் பெற்றுவிடுகிறது. அக்ஞானம் இடம்பெற்றிருக்கின்ற உள்ளம் படைத்திருக்கின்றவர்கள் பாரமார்த்திகத்துறையில் உறங்கிக்கொண்டிருக்கின்றார்கள். மக்களுடைய உள்ளத்தில் பாரமார்த்திக உணர்வைத் தட்டி எழுப்புதல் அவசியமாகிறது. பாரமார்த்திக உணர்வு தலையெடுக்கும்பொழுது உடல் உணர்வு பின்னணிக்குப் போகிறது. உடல் உணர்வை வெல்லுகின்ற அளவு ஞானம் பிரகாசிக்கின்றது. உடல் உணர்விலிருந்து பால் வேற்றுமை உண்டாகிறது. ஆண், பெண் என்ற உணர்ச்சி உடல் உணர்வில் இருந்து உண்டாகிறது. ஆண், பெண் உணர்ச்சியை வென்று பழகுவது கல்வியின் அடிப்படையாகும். கல்விமான் தான் ஆணும் அல்லன் பெண்ணும் அல்லன் தான் அறிவு சொரூபம் என்று உணரவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் அறிவு சொரூபம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். ஆத்மா ஆணும் அன்று. பெண்ணும் அன்று. அது அறிவு சொரூபம். உடல் பற்றிலிருந்து பால் உணர்வு தலையெடுக்கின்றது. ஆன்மிக உணர்வு ஓங்கும் பொழுது பால் உணர்வு மறைந்துவிடுகிறது. ஆண் வடிவம் தாங்கி இருப்பவன் தன்னைப் பெண்பாலாகப் பாவித்துப் பழகுவானாகில் ஆண்பால் உணர்வை வெல்லுகின்றான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மை ஒரு பெண்ணாகப் பாவித்தார். பெண்போன்று உடை அணிந்துகொண்டார். பெண் குரலில் பேசக் கற்றுக்கொண்டார். பண்பட்ட பெண்களுக்கு இடையில் நெருங்கிப் பழகினார். இங்ஙனம் அவர் பல ஆண்டுகள் சாதனையில் ஈடுபட்டு மனப்பான்மையில் ஆண் என்கின்ற உணர்வை வென்று பழகினார். அதன் விளைவாக அவருடைய மனப்பாங்கு பால் உணர்வை அறவே வென்று விட்டது. பெண்பாலர்கள் எல்லாரையும் அவர் அம்பிகையின் சொரூபமாகக் கருதியது அவரிடத்தில் ஆன்மிக உணர்வை வளர்த்தது. மேனாட்டு நாகரிகம் பெண்களின் வடிவத்தில் இளமையையும், அழகையும் கண்டு ரசிக்கும்படி தூண்டுகிறது. இளமைக்காகவும், அழகுக்காகவும் மேனாட்டு ஆடவர்கள் பெண்களைத் துதிக்கின்றார்கள். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெண்பாலர்களின் முகங்களைப் பார்க்கும்போது அம்பிகையின் தரிசனம் பெற்றார். சமூகத்தினரால் தீண்டத் தகுதியற்றவர்கள் என்று புறக்கணிக்கப்பட்டிருந்த மகளிரைத் தேவியின் வடிவங்களாகக் கண்டு அவர்களை வழிபட்டார். அவர்கள் முன்னிலையில் வீழ்ந்து "ஜகன்மாதா! தெருவில் நிற்கின்ற இம் மங்கையர்கள் வடிவத்தில் நீ காட்சி

தருகின்றாய், இப் பிரபஞ்சமயமாகவும் நீ காட்சி தருகின்றாய். நீ காட்சி தரும் எல்லா வடிவங்களுக்கும் நான் வணக்கம் செலுத்து கின்றேன்." அவருடைய காட்சியில் கீழ் மைக்குச் சிறிதும் இடமில்லை. காம உணர்வு சிறிதுமின்றிப் பெண்களைநோக்கினார்.எல்லாப் பெண்களையும் அவர் தெய்விக வடிவங்களா கப் பார்த்து அவர்களிடம் அன்பும் மரியாதை யும் செலுத்தினார். பெண்கள் முகத்தில் தெய் விக எழில் வீசிக்கொண்டிருப்பதை அவர் பார்த்தார். இத்தகைய மனநிலைதான் ஞானத் தின் அறிகுறியாகும். பெண்களிடம் தெய் விகத்தைக் காணும் அறிவு நம்மை ஒருநாளும் கீழ்மைப்படுத்தாது. அறிவு அப்பொழுது தான் நமக்கு நிலைபேறுடையதாகிறது. அந்த அறிவு நம்மிடத்திலுள்ள குறைகளை எல்லாம் போக்குகிறது. அந்த அறிவு நம்மிடத்தி லுள்ள போலித் தன்மைகளை எல்லாம் அகற்று கிறது. உள்ளத்தில் தெளிந்த தன்மையை யும் புனிதத் தன்மையையும் அவ்வறிவு வளர்க் கிறது. அந்த ஞானம்தான் எல்லாப் பொருள் களிடத்திலுமுள்ள மெய்ப்பொருளைக் காண்ப தற்கு நமக்குத் துணைபுரிகிறது. நம்மிடத்தி லுள்ள அறியாமையை அறவே அகற்றி நாம் அறிவு சொரூபம் என்பதைக் காட்டித் தரு கின்ற ஞானசூரியன் என்று கமார்ப்புகூர் கதாதரனைப் பகரலாம்.

ஞானத்தைப் புகட்டுபவர் ஞானகுருவாகின் றார். நூலறிவும் உலக அனுபவ அறிவும் ஞானத்தை உண்டுபண்ணி விடமாட்டா. உள் ளத் தூய்மைதான் ஞானத்தைத் தருகிறது. எனவே ஞானகுரு ஒருவர் தூய்மையே வடி வெடுத்தவராக இருக்கவேண்டும். ஸ்ரீ ராம கிருஷ்ணர் தூய்மையே உருவெடுத்தவராக விளங்கினார். நாம் படுகின்ற கஷ்டங்கள் யாவற்றையும் அவர் கடந்தவராக இருந்தார். ஆனால் அவர் தம் வாழ்வின் முக்கால் பகுதியை அருளைச் சம்பாதிப்பதற்காகச் சிரத்தையோடு பயன்படுத்தினார். அப்படி அவர் தேடிய ஞானச் செல்வத்தை உலகிற்கு வழங்குவதற்கு ஓர் அருள் கூட்டத்தைத் தயார்படுத்தினார். அவருடைய உபதேசமும் போதனையும் உள் ளத்தைத் தொடுபவைகளாகவும் உள்ளத்தை அறவே மாற்றியமைப்பவைகளாகவும் தெளி வுடையவைகளாகவும் எளிமையுடையவை களாகவும் இருந்தன. ஞானம் அடையவேண்டு மென்று விரும்பிய மக்கள் அவரை வந்தடைந் தார்கள். அவரிடம் அன்புடனும் மரியாதை யுடனும் நடந்துகொண்டார்கள். அவரை ஞான குருவாக உள்ளத்தில் கொண்டு அவரை வழி பட்டார்கள். ஆனால் அவர் தம்மை ஒரு குரு வாக நினைக்கவே இல்லை. அம்பிகையே தம் மூலம் அனைத்தையும் செய்து வருகின்றாள் என்று அவர் நினைத்தார். தம்மை ஓர் இயந்திர மாகவும் அம்பிகையை அந்த இயந்திரத்தை இயக்கும் இயந்திரியாகவும் கருதிவந்தார். அகங் காரம் சிறிதும் இன்றி ஞானத்தை உலகுக்கு நல்கிய ஞான சூரியனாக அவர் விளங்கினார்.

ஞானோபதேசம் என்பது வெறும் பேச்சு மட்டும் அன்று. நாம் கொள்கைகளை எடுத்துப் பேசுவதால் ஞானத்தைப் புகட்டுபவர்களாக மாட்டோம். நம் கைவசமுள்ள பொருளைப் பிறருக்கு எடுத்து வழங்குவது போன்று நாம் ஞானத்தைப் பெற்றுப் பிறர்க்கு அதை உரிய தாக்க வேண்டும். ஞானகுரு ஒருவர் முதலில் தம்மைச் சீலமே வடிவெடுத்தவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஞான நிலையைத் தாமே ஞானகுரு அடைய வேண்டும். அப்பொழுது தான் அவர் ஞானத்தைப் பிறருக்கு வழங்க முடியும். இவ்வுண்மைக்கு ஒப்ப ஸ்ரீ ராம கிருஷ்ணர் சீலமும் ஞானமும் பெற்று விளங் கினார்.

குறையில்லாத நிறைநிலையை ஞானம் என்று பகரலாம். நம்மிடத்தில் குறையிருப்பதாக உணர்வோமானால் அது அக்ஞானத்தின் விளைவாகும். நிறைநிலையடைந்த ஞானிகள் யாரிடத்தும் குறை காண்பதில்லை. ஸ்ரீ ராம கிருஷ்ணர் யாரையும் பற்றிக் குறைகூற மாட் டார். பிறரிடமிருக்கும் நலனை மட்டும் அவர் காண்பார். பிறரிடமிருக்கும் நலத்தைமட்டுமே அவர்களுக்கு ஞாபகமூட்டி அவர்களை மேல் நிலைக்குக் கொண்டுவந்து விடுவார். அவ ருடைய வார்த்தைகள் கேட்பவர்களுடைய உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெற்றுவிடும். அவர் பேசும் வார்த்தைகள் எளியவைகளாக இருக்கும். கேட்போர்களுடைய உள்ளத்தில் அவை புகுந்து, அவர்களிடத்து அவை பெரும் மாறுதல்களை உண்டுபண்ணும். நாம் பொருள்

களைக் கையாலெடுத்துப் பிறருக்குக் கொடுப்பது போன்று, அவர் ஞானத்தைத் தம் வார்த்தைகளால் பிறருக்கு எடுத்து வழங்கினர்.

சிந்தனையைத் தெளிவாக்குதல் ஞானமாகும். சிந்தனை தெளிவாக ஆகக் கேடான எண்ணங்களை எண்ணும் சக்தியை மனது இழந்துவிடுகிறது. தூய எண்ணங்கள் மனதில் தோன்றி வருமானல் ஞானம் வருவதற்கு அது அறிகுறியாகும். மக்கள் உண்டு, செல்வம் உண்டு என்று மகிழ்வதெல்லாம் அக்ஞானத்தின் விளைவாகும். தெய்வம் உண்டு, அத்தெய்வத்தின் தோற்றங்களாக உயிர்கள் உண்டு என்று அறிவது ஞானமாகும். உயிர்கள் எல்லாம் தெய்வ சொரூபங்கள் என்று அவ்வுயிர்களுக்குப் பணிவிடை பண்ணுவது ஞானத்தின் விளைவு ஆதும். உலகப் பொருட்களைத் தமக்குரியவைகளாகக் கருதி மக்களிடத்தில் உடல் சம்பந்தமான உறவுகொண்டு இன்பதுன்பங்களை உண்டுபண்ணிக் கொள்வது அக்ஞானத்தின் விளைவாகும். உலகப் பொருட்களைத்தெய்வத்துக்குரியவைகள் என்று கருதி, அவைகளை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்துகின்றவன் தியாகியாகின்ருன். மக்கள் எல்லாரும் தெய்வ சொரூபங்கள் என்று தனக்கும் மக்களுக்குமிடையே தெய்விக உறவை நிலைநாட்டுபவன் ஞானியாகின்ருன். பொருள்களிடத்துப் பற்றற்ற நிலையை வளர்ப்பது காஞ்சனத் தியாகமாகும். உடலுறவைத் தியாகம் பண்ணுவது காமத்தியாகமாகும். பொருள் மூலமாகவும் சரீரம் மூலமாகவும் வரும் இன்பதுன்பங்கள் ஞானிக்கு இல்லை. தியாகத்தின் மூலமாக வரும் இன்பம்தான் மெய்யான இன்பம் என்று ஞானி அதில் திளைத்திருக்கின்ருன். உலகப் பொருளையும் புகழையும் துச்சமென ஒதுக்கிவிட்டுத் தெய்விக எண்ணத்திலே யாண்டும் திளைத்திருந்த ஞானியாவார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

பணத்தை நம்பி உலகம் வாழ்கின்றது. பணம் இல்லாவிட்டால் உலக வாழ்வு இல்லை என்று உலகம் நம்பி வருகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஞானத்தை நம்பி வாழ்ந்தார். காசைக் கையால் தீண்டுவதில்லை என்று சங்கல்பித்தார்; அதை வாழ்வு முழுவதும் கடைப்பிடித்தார். ஞானம் மெய்ப்பொருளைக் காட்டித் தருகிறது. மெய்ப்பொருள் நேர்மையும் சத்தியமும் உடையவர்கள் மூலம் அடையப் பெறுகிருர். மெய்ப்பொருளை நம்பி வாழ்ந்த பரமஹம்ஸர் பணத்தை அறவே புறக்கணித்தார். காமமும் காசு ஆசையுமே ஞானத்திற்குத் தடை என்று மக்களுக்குப் புகட்டினர். தாம் புகட்டியது போன்றே தம் வாழ்விலும் நடந்து கொண்டார். காமத்தையும் காசு ஆசையையும் தம் உள்ளத்திலிருந்து அறவே நீக்கி மனதைக் கடவுள்பால் செலுத்திவந்தார். நூல்கள் எதையும் கற்காது அவர் ஞானம் முழுவதையும் பெற்றிருந்தார். இறைவனுக்கு வாலறிவன் என்பது பெயர். வாலறிவனுகிய இறைவனிடத்தில் மனதைச் செலுத்தித் தாம் வாலறிவு உடையவராக இருந்தார். நவீனக் கல்வி முழுவதையும் பெற்றிருந்த சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சந்தித்த பிறகுதான் தம் கல்வி பூர்த்தி ஆவதை உணர்ந்தார். சூரியன் சுயஞ்ஜோதியாக விளங்குவது போன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பேரறிவு சொரூபமாக விளங்கினர்.

சூரியன் ஒளியையும் வெப்பத்தையும் தன்னிடத்திலுள்ள கிரணங்கள்மூலம் உலகுக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறது. ஞான சூரியனுகிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய அருட்புதல்வர்கள் மூலம் தம்மிடத்திலுள்ள ஞானத்தை உலதுக்கு வழங்கிக்கொண்டே இருக்கின்ருர். அவர் அம்பிகையினிடத்தில் பிரார்த்தனை செய்ததாவது: "தாயே! நான்பெற்ற ஞானத்தை உலகமக்களுக்கு வழங்குவதற்கு ஏற்ற உத்தமர்கள் எனக்குச் சிஷ்யர்களாக வந்து வாய்க்க வேண்டும்." அவருடைய பிரார்த்தனையை அம்பிகை நிறைவேற்றி வைத்தாள். உத்தமர்கள் பலர் அவருக்குச் சிஷ்யர்களாக வந்து வாய்த்தார்கள். ஞானத்தை உலகுக்கெல்லாம் எடுத்து வழங்குவதற்கு அவர்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். அவ்வருளாளர்கள் கூட்டத்திற்குத் தலைவராகச் சுவாமி விவேகானந்தர் அமைந்தார். அவ்வருளாளர்கள் கூட்டத்திற்கு அருளன்னையாக ஸ்ரீ சாரதாதேவியார் அமைந்தார். மண்ணுலகுக்குச் சூரியன் ஒளியைத்தருவதுபோன்று உலக மக்களுக்கு ஞானத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணர் இயக்கம் தந்துகொண்டிருக்கிறது.

சமூக நலன்

(சுவாமி ஸதானந்தர்)

கல்வி

பள்ளிக்கூடத்தில் பாடப் புத்தகங்கள், ஆசிரியர்கள் துணைகொண்டுதான் கல்வி பெறுகிறோம் என்பதில்லை. குழந்தை பள்ளிக்கு வருமுன்னமேயே எவ்வளவு விஷயங்களைத் தெரிந்துகொண்டு வந்திருக்கிறான் என்பதைக் காணவேண்டும். அவன் பல விஷயங்களைக் கற்று வந்திருக்கிறான். அதற்குமேல்தான் பள்ளிக் கல்வி உதவுகிறது. பஞ்ச இந்திரியங்கள் மூலமும் நாம் கல்வி கற்று வருகிறோம். ஸ்தாவரம், சிற்றுயிர்கள் எந்தப் பள்ளியில் போய்ப்படித்து வருகின்றன? அவைகளிடத்து அறிவின் வெளிப்பாடுகளே இல்லையா? சிற்றுயிர்கள் எவ்வளவு அறிவுள்ளவைகளாக இருக்கின்றன. நாய் நன்றியுடையது. தன் யஜமானனுக்காக அது உயிர் கொடுக்கும், வீட்டைக் காக்கும், கடைக்குப் போய்க் காய்கறி வாங்கி வரும், நண்பர் வீட்டிற்குப்போய்க் கடிதம் தந்துவரும். இவையெல்லாம் அறிவின் வெளிப்பாடு இல்லாமல் வேறு என்ன? யானைக்கு ஞாபகசக்தி அதிகம். யானைப் பாகன் அதனிடத்தில் தன் மொழியில் பேசுகிறான். அது புரிந்துகொள்கிறது. காசு வாங்கித் தருகிறது, பழத்தை வாயில் போட்டுக் கொள்கிறது, சலாம் செய்கிறது, தலையில் துதிக்கையை வைத்து ஆசீர்வதிக்கிறது. இவைகளை அது எப்படிக் கற்றுக்கொண்டது? குதிரை விசுவாசம் உடையது. நரியும் காகமும் தந்திரமுடையவைகள். எறும்பு சுறுசுறுப்பே வடிவெடுத்தது. அது வெயிலில் தன் உணவுப் பொருளைக் காய வைக்கிறது. மழைவரப் போவதை முன் உணர்ந்து விரைவாகச் செயல்படுகிறது. பொருட்களை நனையாமல் அது பாதுகாக்கிறது. தேனீ சுத்தமானது; சமூக வாழ்க்கை வாழ்கிறது. விரோதி, எதிரி இல்லாத உயிரே உலகில் இல்லை; அவைகள் எவ்வளவு திறமையாகத் தப்பிக்கின்றன, சமாளிக்கின்றன. பூனை இருக்கிற வீட்டில்தான் எலி, பெருச்சாளி வாழ்கின்றன என்பார்கள். இவையெல்லாம் அறிவின் செயல்களே ஆகும். சிற்றுயிர்களிடத்து அறிவைப் பார்த்து நாம் மகிழ்கிறோம்; அதன் பயனையும் அடைகிறோம். கடைவீதியில்சாமான்களை ஏற்றி நன்கு கட்டிக்கொண்டு இரவில் வண்டி கிளம்புகிறது. வண்டிக்காரன் தூங்கிக்கொண்டே வருகிறான். வழியில் வரும் லாரி பஸ்களுக்கு மாடுகள் தாமே ஒதுங்குகின்றன; தாமே வீடுவந்து சேருகின்றன. மாடுகள் மிக்க அறிவுள்ளவைகள். உழுகிறவன் மாட்டோடு பேசிக்கொண்டே உழுகிறான். அது கேட்டுக்கொள்கிறது. அது அவனுக்குப் பெரிய ஆறுதலாய் இருக்கிறது. வாயில்லாத ஜீவன் ஆயினும் அவைகள் அறிகின்றன; உணர்கின்றன; அன்பைச் செலுத்துகின்றன. தென்னந்தோப்பில் ஒன்றிரண்டு மரங்கள் ஏன் சாய்ந்தும் வளைந்தும் வளர்ந்திருக்கின்றன? அடிமரத்தைவிட்டுத் தள்ளியும் ஆழமாகவும் வேர்கள் போகின்றன? தொட்டால் ஒரு செடி சுருங்கிக்கொள்கிறது. வெயிலில் வாடியும், மழையில் பெருமகிழ்ச்சியடைந்தும் ஸ்தாவரங்கள் தென்படுகின்றன. மழைக்குப் பிறகு செடிகள் மகிழ்ச்சியினால் செழிப்பாக இருக்கின்றன. அறிதலும் உணர்தலும் உடையனவாக உயிர்வகைகள் படைக்கப்பட்டுள்ளன. ஜடம் என்றும் சேதனம் என்றும் இப்பிரபஞ்சப்பொருள்கள் பிரிக்கப்படுகின்றன. உயிரும் உணர்வும் அற்றவை ஜடம். கல், உலோகம், பஞ்சபூதங்கள் எல்லாம் ஜடப்பொருள்கள். ஜடப்பொருளிலும் உயிர்கள் ஒளிர்வதை ஞானிகள் காண்கின்றனர். அவைகள் நெடுங்காலத்திற்குப் பிறகு சேதனப் பொருள்களாக மாறி அமைகின்றன. புல் முதல் பிரம்மா பரியந்தம் எல்லா உயிர்களும் சேதனம். கடவுள் சைதன்யம் எனப்படுகிறார். எல்லாம் சின்மயம் எனப்படுகின்றன. பேரறிவே மெய்ப்பொருள். அவரிடத்திருந்து தோன்றியுள்ள இப்பிரபஞ்சமும் சின்மயம். ஆகையால் அவைகள் ஓதாது, புகட்டாது தாமே உணர்கின்றன. இந்தச் சக்தி இருப்பதால்தான் மற்றக் கல்வி போதனைகள் செயல்படுகின்றன, சாத்தியமாகின்றன. பள்ளி ஆசிரியரின் போதனைகளைச் சுவரும் ஆங்குள்ள தளவாடங்களும் அறியமாட்டா. மாண

வர்கள் அறிந்துகொள்கிறார்கள். இவ்வுலகம் அறிவிலிருந்து தோன்றிவந்துள்ளது, அறிவு நிறைந்து விளங்கிவருகிறது, அறிவில் ஒடுங்கி விடுகிறது.

இப்பிரபஞ்சம் முழுவதும் அறிவுமயம். இவ்வுலகமே பள்ளிக்கூடம். அதன் ஒவ்வொரு நிகழ்ச்சியும் பாடம்புகட்டுகின்றன. ஜீவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்கிறார்கள். கடவுளை அறியும்போது கற்றல் என்பது முடிவுபெறுகிறது. எதைத் தெரிந்து கொண்டபிறகு மேலும் தெரிந்து கொள்வதற்கு ஒன்றுமில்லையோ, எதை அடைந்தான பிறகு யாவும் பெற்றதாகிறதோ மேலும் பெறுவதற்கு ஒன்றுமில்லையோ அது பிரம்மம்.

நாம் பெற்றுள்ள அறிவு மாயை, ஆணவம், கர்மம் என்கிற திரைகளால் மூடப்பட்டிருக்கிறது; அழுக்குகளால் சூழப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் ஜீவர்களாக, குமானுஷர்களாகக் குறைபாடு உடையவர்களாக இருக்கிறோம். சூக்ஷ்மமான திரைகளைச் சமய அனுஷ்டானம் நீக்குகிறது. ஸ்தூலமான இவ்வுலக வாழ்க்கை சம்பந்தமான அறியாமைகளை உலகக் கல்வி விலக்குகிறது. மானுடர் இப்பஞ்ச பூதங்களைப் பற்றியும், இவ்வுலகப் பொருட்களைப்பற்றியும், தன் சரீர அமைப்புக்களைப்பற்றியும், விலங்கு இயல், தாவர இயல், உலோக இயல்களைப்பற்றியும், அரசியல், பொருளாதாரம், சமூகம், விண்வெளி, பூமிக்கு அடியில் உள்ளவைகள், கடலில் வாழும் உயிர் இனங்கள், வட தென் துருவங்கள் ஆகியவைகளைப் பற்றியும் வேண்டிய அளவு தெரிந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். புதிய உண்மைகள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என்பதைஅறிந்து கொள்கிறான். புதிய புதிய பிரச்னைகள், புதிய புதிய நோய்கள் வருகின்றன. அவைகளைச் சமாளிக்க முயல்கிறான். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருகின்றன. இவ்வுலக வாழ்க்கை ஒரு புதிர்போன்று தோன்றுகிறது. இந்த இடத்தில்தான் உயர்ந்தஅறிவு, சூக்ஷ்ம அறிவு, நுண்ணறிவு, சமய அறிவு மானுடனுக்குக் கை கொடுக்கின்றன. அவன் அப்பொழுது இப்பிரபஞ்சப் பொருட்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அவன் மனது அந்தர்முகமாய்த் திரும்பிவிடுகிறது.

இறப்பது என்றால் என்ன? இந்தச் சரீரங்களை இயக்கிவந்த பொருள் யாது? இது மரணத்திற்குப் பிறகு என்ன ஆகிறது? தூங்கும்போது ஏன் இப்பிரபஞ்சம் நமக்கு இல்லாது, உணர முடியாது போகிறது? கனவு என்பது என்ன? அதில் பெற்ற அனுபவம் இன்பம் எல்லாம் வெறும் தோற்றமா, பொய்யா? இந்த நனவு நிலையில் பெறுவதும் அதேபோன்றது தானா? ஒரு விதத்தில் இறந்த கால நிகழ்ச்சிகள்கனவு போன்று தானே இருக்கின்றன. மனம் என்பது என்ன? காலம், தேசம், வர்த்தமானம் என்பவை யாவை? இந்தச் சிருஷ்டியின் நோக்கமாவது யாது? பிறந்து பிறந்து இறப்பதுதானா? நம் எல்லாரையும் இப்பிரபஞ்சத்தையும் இயக்குபவர் யார்? அவருக்கும் நமக்கும் சம்பந்தம் உண்டா? உண்மையில் இந்த ஸ்தூலப் பிரபஞ்சம் இருக்கிறதா? இவ்வுலகம் உண்மையா? இப்படி அவன் மனது ஆராய ஆரம்பித்து விட்டது. இந்த ஸ்தூல பிரபஞ்சத்தைச் சூக்ஷ்மப் பிரபஞ்சம் இயக்கி வருவதை அறிய வந்தான். உலகப் பொருட்களில்ஆசை ஒழித்தவுடன் மனது சுத்தமானது ஆகிவிடுகிறது. அப்போது கடவுள் விஷயங்கள் மனதில் உணரப்படுகின்றன. பரிசுத்தமானவனுக்கு இயற்கை தன் சொரூபத்தை, ரகசியத்தைக் காட்டித் தருகிறது. அப்பொழுது, தானும் பிரபஞ்சமும் கடவுளும் ஒன்றே என்பதை அறியவருகிறான். கல்வியின் சிறந்த பயன் இதுவே.

இன்றையக் கல்வித் திட்டத்தில் என்ன நடக்கிறது? கல்விச்சாலைகள் அறிவு வளர்ச்சிக்காக என்ற நிலைமாறி, வேண்டாத நாகரிகங்களை, குயுக்திகளை, வாதங்களை, கொள்கைகளை, அராஜகங்களை வளர்த்து விடுவதாய் அமைந்திருக்கின்றன. தாயுமானவர் கல்லாதவர்களே நல்லவர்கள், நல்லவர்கள்என்று வற்புறுத்திச் சொன்னார். இன்று படித்தவர்களில் பலர் அனைத்தையும் பாழாக்குகின்றனர். பார்த்து எழுதலாம், மிகக் குறைந்த மதிப்பெண் வாங்கியிருந்தாலும் தேறவேண்டும், எப்படி இருந்தாலும் நன்னடத்தைச் சான்றிதழ் வேண்டும், பணிவு, அடக்கம், முதியோரிடத்து

மரியாதை, சேவை மனப்பான்மை, எளிமை புலனடக்கம் ஆகியவற்றைக் கற்றவர்களிடம் காண்பது அரிதாக உள்ளது. அடுத்த தலை முறையினருக்கு நாம் ஒரு நன்மையும் செய்யாமல் பெரும் பாதகம் தேடிவைத்துள்ளோம். குடும்பத்தில் தகப்பன் ஊதாரியாக இருந்து சாகும்போது அதிகக் கடனை வைத்துச் சென்றால் எப்படியோ அப்படி இருக்கிறது இன்றைய தலைமுறை. நம்முடைய தீவினைப்பயன் யாவும் ஒன்றாய்த் திரண்டுவந்து இங்ஙனம் வடிவெடுத்துள்ளன. இவையாவுக்கும் நல்லாட்சி இன்மையே காரணம். கெட்டகுடியே கெடும், பட்ட காலிலே படும் என்பார்கள். நாம் மேலும் மேலும் கெட்டு வருகிறோம். திருத்த வேண்டிய ஆசிரியர்கள் மாணவர்களைப் போலவே கூச்சல் குழப்பம், அழிவுக் காரியங்களில் இறங்கி விட்டார்கள். இனிவிமோசனம் எங்கே இருந்து வரப்போகிறது? ஆசிரியர்கள் சீலமாக வாழ வேண்டும். மக்களுக்குச் சீலம், நேர்மை, தர்மம் இவைகளைப் புகட்டவேண்டும்.

முன்னைவிடக் கல்வி கற்கத் தற்போது புற உதவிகள் அதிகம். படக்காட்சி, சுற்றுலா, **T. V.** ரேடியோ ஆகியவைகள் மூலம் கற்பிக்கலாம். பாடப்புத்தகங்கள், கட்டடங்கள், மைதானங்கள், பரிசோதனைக் கூடங்கள், வாசகசாலைகள் பெருகியுள்ளன. கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆகிய பல வித போட்டிகள் அகில உலக நிலையில் நடைபெறுகின்றன. மாணவர்களுக்குச் சர்க்கார் உதவி, தனியார் உதவி, சன்மானம், மதிய உணவு, வட்டியில்லா நீண்டகாலக் கடன் தருதல் இப்படியெல்லாம் சௌகரியங்கள் பெருகியுள்ளன. ஆனால் உலகம் முழுதிலும் மானுட வாழ்வின் உயர் லக்ஷியம், பண்பில் மிக மிக மேலோங்கி மிளிரச் செய்தல் என்கிற கருத்தே தேய்ந்து பின்னணிக்குப் போய்விட்டது. பண்டங்களுக்குத் தரக்கட்டுப்பாடும், தவறினால் தண்டனைக்கு உட்படுகிற சட்டமும் இருக்கிறது. ஆனால் மானுடர் மட்டும் எதையும் கொளுத்தலாம், சேதம் பண்ணலாம், அழிக்கலாம், கொல்லலாம்—இக்குற்றங்களுக்குத் தண்டிக்காது அனுதாபம் காட்டவேண்டும் என்கிறார்கள். உலகியல் அறிவு வளர வளரத் தவறுகளும் வளருகின்றன. தவறுகளும் அறிவின் செயலே. இந்தத் தவறுகளைக் குறைக்கவே சமய அனுஷ்டானம் ஏற்பட்டது. தவறுகளுக்கு அடிப்படைக் காரணம் ஆசை, புலன் இன்ப நாட்டம், ஆடம்பரம் ஆகிய மனோ விகாரங்கள் ஆகும். அவைகளின் பொய்த் தன்மையை, அழியும் தன்மையை, நம்மைக் கீழ்மைப்படுத்தும் தன்மையை, உண்மைக்கு மாறுபட்ட தன்மையைச் சமயம் விளக்குகிறது. அக்காலத்தில் செவிச் செல்வத்தைப் பயன்படுத்தியே நல்லறிவைப் பரப்பி வந்தார்கள். இராமாயணம், மகாபாரதம், பாகவதம் ஆகிய மூன்று நூல்களை மட்டுமே வைத்து நல்லறிவைப் பரப்பினார்கள். அம்முறையைப் பின்பற்றி இன்றைக்குப் பொது இடங்களில் கூட்டம் கூட்டி இராமாயணம், பாரதம் இவைகளைத் தினம் ஒரு மணிநேரம் ஒன்றன்பின் ஒன்றாகப் படித்து அவசியமான இடங்களில் விளக்குவது அவசியம். அது பண்போடு, ஒழுக்கத்தோடு கூடிய கல்வியை வளர்க்கப் பயன்படும். நுண்ணிய இன்பங்களை அனுபவிக்க எந்த மனது பக்குவமானதோ அதே மனது நுண்ணிய துன்பங்களையும் ஏற்க வேண்டியதாகிறது. இன்பமும் துன்பமும், அறிவும் அறியாமையும் ஆகிய துவந்துவங்கள் யாவும் இரு இணைகோடுகள் போல இருக்கின்றன. இரண்டும் சேர்ந்து வளருகின்றன; ஒன்றைத் தவிர்த்து மற்றொன்று இல்லை. அவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. அவைகள் கடவுளை நோக்கித் திருப்பப்படும்போது இரண்டும் ஒன்றாகவிடுகின்றன. அங்கு நன்மை ஒன்றே இருக்கிறது; இருமைகள் அற்றுப் போகின்றன. ஆகையால் இன்றைய தீமைகளுக்கெல்லாம் ஒரே பரிகாரம் பண்பு, ஒழுக்கம நிறைந்த சமயக் கல்வியே ஆகும். இதை என்றும் எல்லாரும் சொல்லிக்கொண்டேதான் இருக்கிறார்கள். ஆனால் செயல்படுத்த நல்ல அரசாங்கம் வேண்டும். நல்ல அரசாங்கம்தான் நல்ல திட்டங்களைக் கொண்டு வரமுடியும். "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம், வீழ்க தண் புனல் வேந்தனும் ஓங்குக, ஆழ்க தீயதெல்லாம்; அரன் நாமமே சூழ்க, இவ்வையகமும் துயர் தீர்கவே." இப்பிரார்த்தனை நிறைவேறுவதாகுக.

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

संसारः स्वप्नतुल्यो हि रागद्वेषादि सङ्कुलः ।
स्वकाले सत्यवद्भाति प्रबोधे सत्यसद्भवेत् ॥

रागद्वेषादि सङ्कुलः (ராகத்வேஷாதி ஸங்குல:) விருப்பும் வெறுப்பும் நிறைந்த संसारः (ஸம்ஸார:) பிரபஞ்சமானது स्वप्नतुल्यो हि (ஸ்வப்னதுல்யோ ஹி) கனவு போன்றது தானே; स्वकाले (ஸ்வகாலே) அந்தநிலை இருக்கும் வரை सत्यवत् (ஸத்யவத்) உண்மையே என भाति (பாதி) தோன்றுகிறது; प्रबोधे (ப்ரபோதேஸதி) விழித்து எழுந்தவுடன் असत् भवेत् (அஸத் பவேத்) பொய்யாகிவிடுகின்றது.

"விருப்பும், வெறுப்பும் நிறைந்துள்ள பிர பஞ்சம் உண்மையில் கனவு போன்றது தானே? கனவு தோன்றும் காலத்தில் மெய் யெனத் தோற்றமளிக்கின்றது; விழித்து எழுந் தவுடன் பொய்யாகி விடுகின்றது." (அது போன்றே பிரபஞ்சமும்).

"ஸம்ஸாரம், உலக வாழ்வு என்பது யாது? ராகம் (விருப்பு) த்வேஷம் (வெறுப்பு) ஆகி யவை கலந்திருப்பதே ஸம்ஸாரம். நம்முடைய உலக வாழ்வின் அனுபவங்களை ஆராய்ந்தால், அவை ஒன்று ராகமாகவோ அல்லது த்வேஷ மாகவோதான் இருக்கவேண்டும். இவை இரண்டையும் தவிர்த்து உலக வாழ்வு இல்லை. வாழ்க்கையின் Trial Balance (கணக்கு) எழு தினால் அவை Credit, Debit (வரவு, பற்று) ஆக அமையும். மேலும், இன்ப துன்பம், நன்மை தீமை, சுகம் துக்கம் ஆகிய இரட்டை களே விருப்பும் வெறுப்பும் ஆகின்றன. நமக் குச் சுகத்தைத் தரும் பொருளில் விருப்பும், துக்கத்தைத் தரும் பொருளில் வெறுப்பும் உண்டாகின்றன அல்லவா? இதை நன்கு உணர்ந்த விவேகி இவை இரண்டினாலும் பாதிக்கப்படாத மனப்பக்குவத்தைக் கைக் கொள்வான். மனதில் சமபாவம் உடையோர் சம்சாரிகள் அல்லர். சுகமோ, துக்கமோ எதுவும் நிலையானவை அல்ல. இவை மாறி மாறி அமைவதும், வந்து போவதும், அழியும் தன்மையும் கொண்டவை. (ஆகமாபாயினோ அநித்யா:) மேலும் ஒரு சமயம் துக்கமாகவோ சுகமாகவோ தோன்றும் ஒரே வஸ்து, முறை மாறி அமைவதும் உண்டு. 'சுகஸ்ய மூர்த்தனி துக்கானி'-சுகத்தின் மேல் அமர்ந்து துக்கங்கள் வருகின்றன. ஆகவே விவேகம் என்பது சுக துக்கங்களால் பாதிக்கப்படாத தன்மை யாகும். சாதகர்கள் இக்கருத்தை நன்கு மன திற் கொள்ளவேண்டும். ராகம், துவேஷம் பற்றி ஒரு நுட்பமான தத்துவத்தை ஆசாரியர் அழகாக விளக்குகின்றார். இவை அலாதி யாக மனித இனத்திற்குமட்டும் உரியன அல்ல; விலங்குகளிடையேயும் இவை இயல் பாகவே நிறைந்துள்ள உணர்ச்சிகள். பிரம்ம சூத்திரத்தின் உரையில், அவர் குறிப்பிடுகின் றார்: "வியவகார வாழ்க்கையில் விலங்குகளி லிருந்தும் வேறுபடாத தன்மையை மனிதர்களி டம் காண்கின்றோம். தங்களுடைய புலன் களைக்கொண்டு சப்தம், ஸ்பர்சம் ஆகிய விஷய அர்த்தங்களை அறியும்போது, தங்களுக்கு அனுகூலமானதில் ஈடுபட்டு, பிரதி கூலமான தினின்றும் விலகுகின்றன. எவ்வாறெனின் தடியை எடுத்துக்கொண்டு ஒருவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு பசு ஒன்று 'என்னை அடிக்க விரும்புகின்றான்' என்று உணர்ந்து ஓடி விடுகிறது; ஆனால் கைநிறையப் பசும்புல்லுடன் ஒருவர் வந்தால், அவரை நோக்கி முன்னேறு கிறது. அது போன்றே மனிதர்களும் உள்ள னர். வியவகாரத்திற்குப் பயன்படும் அறிவும், அதனைப்பெறும் முறையும் (பிரமாண, பிரமே யம்) விலங்குகளின் முறையைக் காட்டிலும் உயர்ந்தவையல்ல என்று குறிப்பிடுவதால், 'ராகம், துவேஷம்' என்ற தளைகளிலிருந்து விடுபட்டால்தான் கீழான இயல்புகளினின்று நம்மை விடுவித்துக்கொள்ளமுடியும். விலங்கு நிலையை விடுத்து, மனித நிலையை அடைந்து, தெய்விக நிலைக்கு உயர விரும்பும் சாதகர்கள் இருமையின் வசப்படாது இருத்தல் இன்றி யமையாதது.

இங்ஙனம் 'ராக, துவேஷங்களின்' கலப்பாக உள்ள சம்சாரம் 'கனவைப் போன்றதுதானே' (ஸ்வப்ன துல்ய: ஹி) என்று குறிப்பிடுகின்றார். அவஸ்தா த்ரயம்-மூன்று நிலைகள் என்று குறிப்பிடப்படும் வேதாந்த விசாரம் செய்வது

அவசியம். நமக்கு விழிப்பு, கனவு, உறக்கம் என்று மூன்று அவஸ்தைகள் இருக்கின்றன. விழிப்பு நிலையில் உள்ள பிரபஞ்சத்தில், சரீரம், இந்திரியம், மனம், புத்தி, ஆணவம் ஆகிய வற்றின் மூலம் பல அனுபவங்களை நாம் பெறுகின்றோம். சுக துக்க மயமாக இவை அமைகின்றன. குறிப்பிட்ட கால தேச காரண காரியத்திற்கேற்ப அமைகின்றன.

கனவு அனைவருக்கும் ஏற்படும் அனுபவம். கனவு விழிப்பினின்று வேறுபட்ட நிலை என்று எவரும் கருதுவதில்லை. விழிப்பு நிலையை அளவு கோலாகக்கொண்ட கனவையும், அதன் அனுபவங்களையும் ஆராய்வது நமக்கு இயல்பு. ஆயினும் தனிப்பட்ட ஒரு நிலையாக, விழிப்புடன் சம்பந்தப்படாத ஒன்றாகக் கனவை ஆராய்வது அவஸ்தாத்ரய விசாரத்தின் விசேஷமாகும். கனவு நிலைக்கு இயைந்த முறையில் காலம், தேசம், காரண காரியம் உள்ளன. சிறிது நேரமாகத் தோன்றிய கனவில் காலம் பல வருடங்களாக அமையலாம். கீழே விழாது பொருட்கள் வானில் பறக்கலாம்; பறவை பாடலாம்; விலங்குகள் பேசலாம்; பல விந்தையான முறைகளில் மனிதர்கள் நடக்கலாம். ஆயினும் இவை அனைத்தும் கனவில் இயல்பானவையே. அந்த நிலையில் அவை விழிப்புலக அனுபவங்களே. கனவு கலைந்து, நித்திரையிலிருந்து விழித்து எழுந்த பிறகே இவை உண்மைகளல்ல கனவு என்ற அறிவு (போதம்) தோன்றுகின்றது. நனவு நிலையில் கனவு பொய். ஆனால் கனவு நிலையில் அது நனவே.

'நனவு-கனவு இரண்டும் சமானமானவை. நனவு இல்லாதபோது கனவு தோன்றுகிறது. அதில் பிரபஞ்சம், காலம், தேசம், காரண-காரியம், அனுபவிக்கும் ஜீவன், அதனுடன் அகங்காரம்-என்று நனவுலகில் காண்பன அனைத்தும் உள்ளன. எனவே கனவைப் போன்று நனவும் நிரந்தரமன்று; இதுவும் கனவு போன்றதுதான்' என்று சுலோகம் உரைக்கின்றது. இந்த நிலை கலைந்து, அக்ஞானம்என்ற நித்திரை கலைந்து பரபோதத்தில் எழும்போதுதான் நனவின் நிலையற்ற தன்மை விளங்கும்.

'ஸ்வகாலே ஸத்யவத் பாதி'—தன்னுடைய காலத்தில் சத்தியம் என்று காணப்படுகின்றது. நமது நிஜ ஸ்வரூபத்தை உணராது நாம் இருக்கின்றோம். 'ஸம்சாரமே ஸத்தியம்' என்ற மயக்கத்தில் உள்ளோம். தவறான கருத்தில் மனம் ஆழ்ந்திருக்கும்வரை உலகம் நமக்கு உண்மையெனத் தோன்றும். அந்த மயக்கத்தினின்று விழித்து எழுந்தால்தான் உண்மையை உணரமுடியும். அது வரையில் உலக அனுபவம் துன்பமயமானதுதான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபமானக்கதை ஒன்றன் மூலம் இதை விளக்குகின்றார்.

'உறங்கச் சென்ற ஒருவன், தான் நரியாக மாறியதாகக் கனவு கண்டான். அந்நரி தனது வாழ்க்கையைச் சுகமாக அனுபவிக்கின்றது. திடீரெனச் சில வேட்டை நாய்கள் அதைத் துரத்துகின்றன. உயிருக்குப் பயந்து நரி ஓடுகின்றது. தாவிக் குதித்துப் பெரிய நாய் ஒன்று அதன் கழுத்தைக் கௌவிப் பிடித்தது. நரி ஓலமிட்டது. அதேகணம் ஐயோ என்று கதறிக்கொண்டு அவன் எழுந்தான். 'அடே, ஏன் பதறுகின்றாய்?" என்றான் நண்பன். 'நாய் என்னைத் துரத்திப் பிடித்தது?' 'நாய் உன்னையா துரத்தியது.' 'இல்லை; நான் நரியானேன்; அதை நாய் விரட்டியது.' 'அப்படியா நீ ஏன் நரியானாய்?' என்று கேட்டான் நண்பன். தன்னுடைய நிலையை மறந்ததால் தானே இத்தனை அநர்த்தமும் விளைந்தது. அது போன்று நமது ஆன்ம சொருபத்தை உணராதிருந்தால் உலகம் உண்மையெனத் தோன்றும்; அதன் அனுபவங்களும் சுக துக்கங்களைத் தரும்.

"ப்ரபோதே ஸதி அஸத் பவேத்—விழித்து எழுந்தவுடன் பொய்யாக ஆகிவிடும்." விழித்தவுடன் கனவு பொய் ஆவதுபோன்று, மெய்ஞ்ஞான உணர்வு பெற்றவுடன் உலக விவகாரம் பொய்யாகிவிடும்.

'ப்ரபோதம்' என்ற சொல் உறக்கத்தினின்று விழித்து எழுவதைச் சாதாரணமாகக் குறிக்கும். ஆயினும் அதன் விசேஷ அர்த்தமோ 'மெய்யுணர்வு பெறும் பொழுது' என்பதாகும். தக்ஷிணாமூர்த்தி சுலோகத்தில் ஆசாரியர் உரைக்கின்றார்: "கண்ணாடியில் பிரதிபலிக்கும் நகரம் போல், உலகக் காட்சி என் மனதில் தோன்றுகின்றது. கனவைப்

போன்றே இத்தோற்றத்தில் அகத்தே தோன்றும் காட்சி மாயையினுல் புறத்தே காணப்படுகின்றது. ஆயினும் ஞானம் எய்திய பின் (ப்ரபோத ஸமயே) தன்னிலும் வேறுபடாத ஆத்ம சொருபமாகவே அதைக் காண்கின்றேன். அதை உணரச்செய்த ஞான குருவிற்கு நமஸ்காரம்."

கனவு, நனவு இரண்டிற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. நம்மைப் பொறுத்தவரை கனவு சீக்கிரம் முடிவடைந்து அதன் அசத் தன்மையை உடனே உணர முடிகிறது. ஆயினும் 'இந்த நனவும் ஒரு கனவே' என்ற வேதாந்த உண்மையை நம்மால் எளிதில் புரிந்துகொள்ளவோ, அனுபவத்தில் உணரவோ முடிவதில்லே. ஆன்மிகத்தில், பரபோதத்தில் விழித்தெழுந்தால் அதன் அசத் தன்மையை உணரலாம். கனவு இருக்கும்வரை, அந்தப் பிரபஞ்ச நெறிக்கு ஏற்ப வாழ்கின்ருேம். அது போன்று உலக எண்ணம் உள்ளவரையில் கனவாகிய இந்நனவிலும் அதற்கேற்ற சட்ட திட்டங்களுடன் வரையறைக்குட்பட்டு விவகாரத்தில் வாழவேண்டும். இதுவும் கனவுபோன்று பொய்தானே! எனவே நான் எப்படி வாழ்ந்தால் என்ன? ஆத்ம சொருபத்திற்கு நஷ்டம் எதுவும் இல்லே. எனது செயல்கள் அனேத்தும் பொய்மையில் தோன்றும். பொய்தான் என்று குதர்க்கம், விதண்டாவாதம் செய்பவர்கள் உண்மையில் ஆத்ம சாதகர்கள் அல்லர். தம்முடைய குறைகளேச் சாமர்த்தியமாக மறைத்துக்கொள்ளும் வேஷதாரிகளே.

அவஸ்தா த்ரய ஆராய்ச்சியைச் செய்யும் போது வேதாந்தத்தில் நுட்பமாக ஓர் அத்தியாயத்தை நாம் அணுகுகின்ருேம். உலகில் தோன்றியுள்ள மதங்கள் அனேத்திற்கும் ஆதாரமாகத் திகழ்பவை, அம்மதத்தை ஸ்தாபித்தவரின் தனிப்பட்ட வாழ்க்கையும், அவரால் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் அருளுரை நிறைந்த புத்தகமும் தாம். இவை இரண்டையும் ஏற்காது கருத்துவேறுபாடு கொள்வார்—அந்த மதத்தில் இருக்கமுடியாது. தவிர, மதவெறிபிடித்து அலேயும்பாங்கு உடையோர் அவர்களேச்சகித்துக்கொள்ள மாட்டார்கள். காபிர் (kafir) என்ருே, சாத்தானின் புத்திரர்கள் என்ருே இகழ்ந்து, சச்சரவிற்கும் இடம் தருவார்கள். ஹிந்து மதத்தில் உள்ள பல்வேறு சம்பிரதாயத்தினரிடையேயும் இத்தகைய பாங்கு ஏதோ ஓரளவில் காணப்படுகின்றது. ஆயினும் சுவாமி விவேகானந்தர், "வேதாந்தம் என்பது தனிப்பட்ட மனிதனேயோ, புத்தகத்தையோ சார்ந்ததன்று; எவருக்கும் எங்கும் ஏற்புடைய தத்துவத்தை உரைப்பதே. எனவே இதுவே அனேவருக்கும் ஏற்புடைய (universal) மதமாகும்'' என்று உரைக்கின்ருர். வேதாந்தம் தத்துவத்தைச் சாஸ்திரத்தின் துணேகொண்டு எடுத்துரைத்து, யுக்தியின் மூலம் நிலேநாட்டி, அனுபவத்தால் அறிந்துணரும் பாதையை வகுத்துத் தந்துள்ளது. சுருதி, யுக்தி, அனுபவம் என்ற அமைப்பு அலாதியாக நமக்கே உரியது. மேலும் ஹிந்து மதம், சாஸ்திரங்களேயும், சம்பிரதாய ஆசாரங்களேயும் ஏற்றுக்கொள்ளாதவர்களேக்கூட தன்னகத்தே ஏற்கிறது.

காரண காரியம் (cause and effect); காண்போன்—காணப்படும் பொருளேப் பற்றிய விசாரணே (த்ருக்-த்ருச்ய விவேகம்); ஐந்து கோசங்களும் அதற்கப்பாலான தத்துவமும் (பஞ்சகோச விலக்ஷணம்); வித்யா-அவித்யா; பந்தம்-மோக்ஷம்; அவித்யா-மாயா; ஜீவ-ஈஸ்வர பிரகிரியம்; ஸ்தூல-ஸூக்ஷ்மம்; சாமான்ய-விசேஷம்; வ்யஷ்டி-சமஷ்டி; ப்ரகிருதி-புருஷ விவேகம்—என்று பல முறைகளில் மஹாவாக்கியங்களின் பொருள் நிலேநாட்டப்படுகின்றது. இவற்றில் விவரிக்கப்படும் தத்துவவிளக்கம், சாதனே முறைகள் ஆகியவை அனேவரும் ஏற்கும் வண்ணம் அமைந்துள்ளன. இவை அனேத்திற்கும் சிகரம் வைத்ததுபோல் விளங்குவதே 'அவஸ்தா த்ரய சாக்ஷி' முறையாகும். நனவு, கனவு ஆழ்ந்த உறக்கம் ஆகியவை அனேவருக்கும் பொதுவானவை; அனுபவத்தின் வசப்பட்டவை அன்ருே?

ஜாக்ரத, ஸ்வப்பனம் இவ்விரண்டிற்கும் அநேக ஒற்றுமைகள் உள்ளன. அத்வைதம் இவற்றை இரண்டாகக் கருதாது ஒன்றே எனக் கூறும். நனவு, கனவு, உறக்கம் இம்மூன்றும் ஒன்றுடன் மற்ருென்று தொடர்பு அற்றவை. எனினும் இம்மூன்றையும் நான் அனுபவிக்கின்றேன் என்று ஜீவன் உரைக்கின்ருன். இது எங்ஙனம சாத்தியமாகின்

றது என்று அவன் ஆராய்வது கிடையாது. விழிப்பு நிலையை அனுபவிக்கும் ஜீவனே மெய்யானவன் என்ற அடிப்படை மயக்கத்தில் திளைத்து 'நான் கனவு கண்டேன்; உலகில் எனக்கு ஏற்படும் அனுபவங்கள் சிறிது விசித்திரமான முறையில் தோன்றின. பின் கனவற்ற ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தேன். பழையபடி விழித்தெழுந்து நனவில் விவகாரம் செய்கின்றேன்' என்று கூறுகின்றான். சாதாரணமாக நமது சிந்தனை இங்ஙனம் தான் செயல்படுகின்றது. கனவும், உறக்கமும் நமக்கு ஏற்படும் தாற்காலிக நிலைகள்; விழிப்புநிலையே அடிப்படையானது என்று கருதுபவர் அவஸ்தா த்ரயத்தின் உண்மைத் தத்துவத்தை அறிந்தோர் அல்லர்.

விழிப்பு நிலை என்பது யாது? உலகம், அதற்கேற்ற நியதிகள், அதன் அனுபவங்கள் மட்டும் விழிப்புநிலை அன்று; இவை அனைத்தையும் அனுபவித்து 'இவை எனது அனுபவம்' என்று எண்ணும் 'அஹம், Ego, நான்' என்ற எண்ணமும் விழிப்பு நிலையாகும். 'நான்' என்ற அஹங்காரம், மனம், புத்தி, இந்திரியங்களின் துணைகொண்டே 'ஜாக்ரத' நிலையை அனுபவிக்கின்றது.

கனவு நிலையில் இந்த மனமோ, புத்தியோ, இந்திரியங்களோ இல்லை; எனினும் மனதின் மூலம் அந்த நிலையும் அனுபவிக்கப்படுகின்றது. 'ஜீவன் தானே ஓர் உலகையும், தனக்கென இந்திரியங்களையும் தோற்றுவித்துக் கொள்கின்றான்' என எண்ணுவது பாரபட்சமாகும். இத்தகைய விசாரத்தில் ஜாக்ரத அபிமானமே தலைதூக்கி நிற்கும். எனவே அதனை விடுத்துத் தனிப்பட்ட ஒரு நிலையெனக் கனவை ஆராய்வோம். விழிப்பு நிலையில் உலகையும், அனுபவங்களையும் 'ஜாக்ரத-நான்' எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றதோ அது போன்றுகனவையும், அதன் அனுபவத்தையும் தயக்கமின்றி 'நான்' ஏற்றுக்கொள்கின்றது. 'நான் கர்த்தா, நான் போக்தா' என்ற அகங்காரம் இரண்டிற்கும் உரியது; 'விழித்துக்கொண்டிருக்கும் ஜாக்ரத-அஹங்காரமாகிய நான் காணும் கனவு இது' என்ற எண்ணம் கனவில் ஒருபொழுதும் ஏற்படுவதில்லை. அந்த நேரத்தில் அது கனவு அன்று; ஒரு நனவே. அந்த நனவை அனுபவிப்பது 'கனவு-அஹங்காரம்' ஆகின்றது. 'கனவு, நனவு' என்ற இரு நிலைகளைக் காண்பது 'ஜாக்ரத-அஹங்காரமே.' அந்த அஹங்காரம் வெளிப்படாத நிலையில் உள்ள 'கனவு' உண்மையில் 'கனவு' அன்று ஸ்வப்ன-அஹங்காரத்தின் 'நனவு' தான்!

ஜாக்ரத-அஹங்காரம், ஸ்வப்ன அஹங்காரம் என்ற இரண்டுமே இல்லாத நிலையே ஸுஷுப்தி-ஆழ்ந்த உறக்கம் ஆகும். அதுவே அஹங்காரமற்ற (Egoless) நிலையாகும். நம்முடைய தனி வியக்தியை இழந்து இருக்கும் நிலை அதுவே. ஒரு சிலர் ஜீவத் தன்மையே அழிந்து இருப்பதும் ஒரு நிலை என்றும் ஜட நிலைக்கும் அதற்கும் வித்தியாசமே கிடையாது என்றும்கூறுவர். ஆயினும் அஹங்காரமற்றநிலை அச்சத்திற்குரிய ஒன்று அன்று. அந்நிலையில் சாந்தத்துடன் இயல்பான முறையில் நாம் இருக்கின்றோம். ஆழ்ந்த உறக்க நிலையில் சுகத்தை அனுபவிக்காதவர் எவருமிலர். அஹங்காரமற்ற அந்த நிலையில் ஏற்படும் ஆனந்தத்தை அனுபவிப்பது யார்? நமக்குத் தெரிந்த ஜாக்ரத ஸ்வப்ன அஹங்காரங்கள் ஆங்கே இல்லை என்பது கண்கூடு. முற்றிலும் தொடர்பற்ற, வேறுபாடுகள் உடைய இம் மூன்று நிலைகளினூடே ஒரு நுண்ணிய இழை போல் தொடர்பு ஒன்று உள்ளது. இம் மூன்றையும் தன்னுடைய அனுபவமாக ஏற்கும் 'நான்' ஒன்று உள்ளது. இம்மூன்று நிலைகளும் தோன்றி மறைகின்றன. அவற்றின் தோற்றத்திற்கு ஆதாரமாய் உள்ளது துரியம்; அதன் மாறுபடாத தன்மையினால் 'இவை மூன்றும் என்னுடைய அனுபவங்கள்' என்று உரைப்பது சாத்தியமாகின்றது. ஜாக்ரத அபிமானத்தைத் துறந்து, 'கனவும் உறக்கமும்' யாருக்கு உண்டாகின்றன? என்று ஆராய்வதும் ஒரு சாதனை முறையாகும். அதன்மூலமே 'அவஸ்தாத்ரய சாக்ஷியை' உணரலாம்.

அவஸ்தாத்ரய விசாரமும், அதை எவ்வாறு சாதனைக்குப் பயன்படுத்துவது என்ற விளக்கமும் மாண்டுக்யஉபநிஷத், மாண்டுக்ய காரிகை, ப்ரஹ்தாரண்யக உபநிஷத் ஆகியவற்றில் காணலாம்.

'அவஸ்தா த்ரய சாக்ஷி' நெறியில் சாதனை முறை யாது? அகங்காரத்தை அழித்து ஆத்ம

சொருபத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளுதலே சாதனையின் குறிக்கோள். 'நனவு, கனவு' இரண்டும் ஒரே மாதிரியான நிலைகள்; சமானமானவை என்பது வேதாந்தக் கருத்து. 'எனக்கு இந்தக் கனவு தோனறியது' என்று நனவில் உள்ள 'நான்' ஆராய்கின்றது. இதுபோல் 'கனவு-நான்' ஏன் நனவு நிலையைப் பார்க்கக்கூடாது? A, B என்பவை சமமான நிலைகள். A-ல் இருந்து B-யைக் கண்டால், B-ல் இருந்து A-யைக் காண்பதும் சாத்தியம். எனவே 'ஜாக்ரத-நான்' என்ற அபிமானத்தை முற்றிலும் அழித்து 'ஸ்வப்ன-நான்' என்பதுடன் ஒன்றி, அதன் மூலம் நனவைக் காணல்வேண்டும் என்பதே சாதனையாகின்றது. அப்படிச் செய்யும் போது, ஜாக்ரத்-அபிமானம் குறைந்து, நனவையும் ஒரு கனவு என்று பார்க்க இயலும்.

இத்தகைய முறை கையாளப்படக் கூடிய ஒன்றே என்பதை இரு உதாரணங்களால் காணலாம். சீன தத்துவ ஞானி ஒருவர் கனவு ஒன்றில் அநேகவண்ணங்களில்பட்டுப்பூச்சிகள் பல பறந்து செல்வதைக் கண்டார். தன்னையும் ஒரு பட்டுப்பூச்சியாகப் பார்த்து திரிந்து அந்த உலகில் இன்புற்றிருந்தார். விழித்த பின்னரும் அவருடைய மனம் அந்த அனுபவத்திலே லயித்துஇருந்தது; அதனைப் பொருளற்ற கனவு என்று அவரால் எளிதில் துறக்கவியலவில்லை. 'இப்போது உள்ள அனுபவம் போன்று மிகவும் இயல்பாக, உண்மையாக அந்த அனுபவம் இருந்தது! எனவே உண்மை யாது? மனிதனுகிய நான் பட்டுப்பூச்சியாக மாறியதாகக் கனவு கண்டேனு? அல்லது பட்டுப்பூச்சியாகிய நான் தற்போது மனிதனுக மாறியதாகக் கனவு காண்கின்றேனு? இவற்றில் எது பொய், எது மெய்? இரண்டையும் ஏற்கவோ, ஒன்றை மட்டும் ஏற்று மற்றதைத் தள்ளவோ என்னல் முடியவில்லை' என்று விசாரம் செய்தார். இறுதியில் பட்டுப்பூச்சி நிலை எவ்வளவு பொய்யோ, அதுபோன்று மனித நிலையும் அல்லது மனிதநிலை எவ்வளவு மெய்யோ அது போன்று பட்டுப்பூச்சி நிலையும் என அறிந்து இரண்டிற்கும் அப்பாற்பட்ட தனது நிஜஸ்வரூப நிலையை அறிந்தார். பட்டுப்பூச்சியுடன் தன்னைப் பெரிதும் ஐக்கியப்படுத்திக்கொண்டதால், நனவுலகத் தளைகளை வெகு எளிதில் அவரால் அறுத்தெறிய முடிந்தது. 'நனவு அஹங்காரமே பெரிய தளை. அதனைக் களைதலே முக்திக்கு வழியாகும். கனவு-நனவு இரண்டையும் சமநோக்குடன் பார்க்கும் விவேகம் அவரைப் பெரியநிலைக்கு எடுத்துச் சென்றது.

இதேபோன்று, ஜனக மகாராஜாவின் வாழ்க்கையிலும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. விதேஹர் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்தவர். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து, நல்ல அறுசுவை உணவை உண்டபின் சொகுசான மெத்தையில் படுத்து உறங்கினர். அப்போது அவருக்கு ஒரு கனவு தோன்றியது. 'ராஜ்யத்திலிருந்து எதிரி அரசனுல் விரட்டப்பட்ட அவர், பிச்சைக்காரன் போன்று அலைந்தார். கந்தல் ஆடை அணிந்து, பசியாலும் பட்டினியாலும் வாடித் தவித்தார். திடுக்கிட்டு விழித்தெழுந்தார். தன்னுடைய நிலையை அடைய அவருக்குச் சிறிது நேரம் ஆயிற்று. அவர் தீவிர விசாரத்தில் ஆழ்ந்தார். 'அரசனுகிய நான் சிறிது நேரம் முன்பு படாத பாடுபட்டேன். அது பொய் என்று எண்ணவே முடியவில்லை. கனவு என்னைப் பிச்சைக்காரன் ஆக்கி விட்டதே! இதில் உண்மையான நிலை எது? 'சத்தியம்' என்பது எக்காலத்தும் மாருத ஒன்றன்றோ? அரசனுகிய நான் பிச்சைக்காரனுக மாறினேனு? அல்லது பிச்சைக்காரனுகிய நான் அரசன் என்று என்னை எண்ணிக்கொண்டு மயங்கி உள்ளேனு? எந்த நிலை நனவு? எது கனவு? அரசன் என்ற கனவு கலைந்தால் எனது நிலை யாது? இத்தகைய விசாரணையினுல் அவருக்கு இரண்டுவித அபிமானங்களும் அதாவது நான் அரசன்; நான் பிச்சைக்காரன்-என்பன ஒழிந்தன. அகங்காரமற்ற, விகல்பமற்ற நிலையை அவர் அனுபவித்தார்.

ஆத்ம போதத்தில் இந்தச் சுலோகம் வலியுறுத்தும் கருத்தாவது: 'சம்சாரமாகிய நனவுலகம் கனவிற்குச் சமமானது; கனவைப் போன்று அது இருக்கும் பரியந்தம் சத்தியமெனத் தோன்றுகின்றது. விழித்தபின் கனவுலகக் காட்சி அசத் எனஉணர்வதுபோன்று, ஆத்மபோதம் அடையும்போது இப்பொய்த் தோற்றமும் மறைந்துபோய், சத்திய ஸ்வரூப நிலையை நாம் உணர்வோம்.'

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.,)

கல்வி மனித மனத்திலே உள்ள அச்சத்தை நீக்குகிறது. அஞ்ச வேண்டிய காரியத்திற்கு அஞ்ச வேண்டும். அஞ்ச வேண்டாத காரியத்திற்கு அஞ்சத் தேவையில்லை. எது அஞ்ச வேண்டிய காரியம்; எதற்குப் பயப்படத் தேவையில்லை என்பதை நமக்குக் கல்வி விளக்கிக்காட்டுகிறது. தேவையில்லாத அச்சத்தை அகற்றுவதற்குக் கல்வி உறுதுணையாக அமைவதுடன், அச்சத்திற்கு அடிப்படையான எண்ணங்களை உள்ளத்திலிருந்து அறவே அகற்றுகிறது.

ஆனால், கல்வியைக் கற்ற அறிவுடையவர்களே சிலசமயம் சபையைக் கண்டு பயப்படுகின்றார்கள். கல்வி கற்காதவர்கள் சபைக்குப் பயப்படாமல், மனதிற்குத் தோன்றியவாறு பேசுகிறார்கள். இவர்களைப் பற்றிக் குமரகுருபரர் என்ன கூறுகிறார்?:

"அவைஅஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவைஅஞ்சா ஆகுலச் சொல்லும்-நவை அஞ்சி
ஈத்துஉண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்
பூத்தலில் பூவாமை நன்று." [னலமும்

கற்றவர்கள் நிறைந்து விளங்கும் சபையைக் கண்டு உடம்பு நடுங்குபவர்களுடைய கல்வி, எவ்விதக் கல்வியும் கல்லாத மூடர்கள் சான்றோர்கள் நிறைந்துள்ள சபைக்குப் பயப்படாமல் பேசுகின்ற ஆரவாரமான வெற்றுப் பேச்சு, பழி ஏற்படுமே என்று நினைத்து அச்சம் கொள்ளாமல் பிறர்க்கு வழங்கித் தாங்களும் உண்ணாத உலோபிகளின் செல்வம், எதுவும் கொடுக்க இயலாத ஏழைமக்கள் பிறருக்கு ஈகை செய்வது ஆகிய இந்த நான்கும் உண்டாவதைவிட, உண்டாகாமல் இருப்பதே நல்லது.

திறமையுடன் கல்வி கற்றிருப்பதற்கு அடையாளம், சான்றோர்கள் நிறைந்து விளங்கும் சபையில், எந்தச் சமயத்திலும், பொருத்தமான கருத்துக்களை எடுத்து விளக்குவதாகும். அவ்வாறு எடுத்து விளக்குவதில் எவ்வித அச்சமும் இருக்கக் கூடாது. அச்சம் இருக்குமானால் மெய் நடுங்கும், உடம்பு வியர்க்கும், நாக்குளறும், சொல் தடுமாறும், நினைத்த கருத்தை வகுத்தும் தொகுத்தும் முறைப்படி சொல்ல முடியாது போய்விடும்.

கல்விக்கு அழகு கசடற மொழிதல். குற்றமில்லாத கருத்துக்களைக் குறை சொல்ல முடியாதபடி எடுத்துக் கூறவேண்டும். மனத்தில் உள்ள பயம் காரணமாகப் படித்திருக்கக் கூடிய கருத்துக்களை எடுத்துச் சொல்லும் நிலை ஏற்படா விட்டால், படித்ததால் எவ்விதப் பயனும் இல்லை. சபையைக்கண்டு பயப்படுவதால், நல்ல கருத்துக்களை எடுத்து இயம்பும் சந்தர்ப்பம் கிடைக்காமல்போய்விடுகிறது.

கல்வியறிவு இல்லாத மூடர்கள் தங்களுடைய விருப்பம் போலப் பேசுவார்கள். சான்றோர்கள் நம் பேச்சைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படமாட்டார்கள். மற்றவர்கள் நினைப்பதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். ஆகையால், தாங்கள் பேசுகிற பேச்சிலும் கவலைப்படமாட்டார்கள். நல்ல கருத்துக்களைச் சொல்லுவதாக நினைத்துக் கொண்டு ஆரவாரமாகப் பேசுவார்கள். உரத்த குரலுடன் பேசிவிட்டால், பேசுவது உண்மையாகி விடாது; நல்ல கருத்தாகி விடாது. சபையினருக்கு ஏற்கக் கூடிய கருத்துக்களையே பேசுதல் வேண்டும். கல்லாத மூடர்கள் தாம் பேசுவதைப்பற்றிச் சிந்தனை செய்வது இல்லை. இவ்வாறு பேசுவதால் பேசுபவர்களுக்கும் சரி; கேட்பவர்களுக்கும் சரி; எவ்விதப் பயனும்இல்லை.

"ஈதல் அறம்" என்பது ஆன்றோர் முடிவு. "செல்வத்துப் பயன் ஈதல்" என்பதும் அவர்களின் கொள்கை. செல்வம் உடையவர்கள் தானம் செய்தல் வேண்டும். தானம் செய்யாவிட்டால் மற்றவர்கள் நம்மைப் பழிப்பார்கள். செல்வத்தை வைத்துககொண்டு தானம் செய்யாமல் இருப்பது குற்றமாகும். எனவே, தானம் செய்யவேண்டும் என்று நினைத்துச் செல்வம் உடையவர்கள், அதனைப் பிறர்க்கு வழங்குவார்கள்.

மற்றவர்களுக்கு வழங்காத செல்வம் பெருமையுடைய செல்வம் ஆகாது. மற்றவர்களுக்கும் கொடுக்காமல், தாமும் உண்ணாமல் செல்வம் வைத்திருப்பவர்கள் குற்றம் செய்கிறவர்

கள் ஆவார்கள். செல்வத்தை வைத்திருப்பவர்களுக்குச் சமூக நோக்கு இருத்தல்வேண்டும். தன்னலம் பாராமல், பிறர் நலன் பேணும் சமுதாய நோக்கு மக்களுக்கு இருத்தல் வேண்டும்.

செல்வத்தைப் பலவழிகளில் மக்களுக்கு உபயோகப்படும்படி வாரி வழங்கலாம். செல்வம் உடையவர்கள் தாங்கள் நேரிடையாகவே மக்களுக்குப் பயன்படும்படியாக வழங்குவது ஒருவகை. செல்வம் வைத்திருப்பவர்களுள் சிலருக்கு வழங்கும் முறை தெரியாதிருக்கலாம்; அல்லது வழங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை அமையாமல் இருக்கலாம்.

அந்த நிலையில் அவர்கள் எவ்வாறு பொருள் தானம் செய்ய இயலும்? அதற்குப் பொருத்தமான ஏற்பாட்டை நம் முன்னோர்கள் செய்துள்ளனர். சேவை செய்வதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள சேவா நிறுவனங்கள், அறநிலையங்கள் மூலம் தங்களுடைய செல்வத்தைச் சமூகத்திற்குப் பயன்படுமாறு செய்யலாம்.

செல்வத்தை அறிவு தானமாக மாற்றி அமைத்து வழங்குவதும் பயனுள்ள பணியாகும். அறிவுடைய சான்றோர்களைக்கொண்டும், இம்மைக்கும் மறுமைக்கும் பயன் நல்கும் ஞான நூல்களைப் பிரசுரம் செய்வித்து, அவற்றின் மூலம் அறிவு தானம் வழங்குவதும் பயனுள்ள பணியாகும்.

பகுத்தறிவை உடைய மனிதன் பணத்தைப் பத்திரபடுத்தி நல்ல வழியில் பயன்படும்படி செய்யவேண்டியவன் ஆகிறான்.

"நல் கூர்ந்தார் இன்னலம்" —நல் கூர்ந்தார் இன் நலம்—வறுமை உடையவர்களின் ஈகை போன்று நன்மை தரும் காரியங்கள் பயன்தர மாட்டா.

வறுமை உடையவர்களால் ஈகை செய்ய இயலாது. அப்படியே செய்தாலும் உரிய பயனைத் தராது. நினைத்த இலட்சியம் நிறைவேறாது. தங்களுடைய கைப்பணமாக இருந்தால், மனம் உவந்து பயன்தரும் முறையில் ஈகை வழங்கலாம். தங்களிடம் பணவசதி அற்றவர்கள் தானம் செய்ய எண்ணினால், செல்வ வசதி உடைய மற்றவர்களிடம் பணத்தைப் பெற்றுத்தான் செய்தல் வேண்டும். மனவிருப்பத்துடன் கொடுப்பவர்களும் உள்ளனர். மன விருப்பம் இல்லாமல் கொடுப்பவர்களும் உள்ளனர். விருப்பத்துடன் கொடுத்தால் தான் கொடுத்ததன் இலட்சியம் உண்மையாக நிறைவேறும். விருப்பம் இல்லாமல் கொடுத்தால் கொடுத்த இலட்சியம் நிறைவேறாமல் போய் விடும். எனவே, வறியவர்கள் செய்யக் கூடிய தானம் அவ்வளவாக நினைத்த பயனைத்தராது.

எனவே, குமரகுருபரர் சபைக்குப் பயப்படுகின்றவர்களின் படிப்பு, கற்றவர்கள் நிறைந்து விளங்கும் சபைக்குப் பயப்படாமல் சபையை இலட்சியம் செய்யாமல் பேசுகின்ற ஆர்ப்பாட்டமான பேச்சு, தரித்திரம் உடையவர்கள் தானம் வழங்க முனைவது, வரும் பிழைக்குப் பயந்து மற்றவர்களுக்கு வழங்கித் தாமும் உண்ணாதவர்களுடைய பயன் அற்ற செல்வம் ஆகியவை உண்டாவதைவிட உண்டாகாமல் இருப்பது நல்லது என்கிறார்.

"கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்—மலரவன் [செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ் [கொண்டு
மற்றுஇவர் செய்யும் உடம்பு."

—பிரமன் படைக்கின்ற மானுட உடம்பு அழிந்து போகும். ஆனால், சான்றோர்கள் படைக்கின்ற தெய்விக வாக்குகள் அமைந்த செய்யுள் என்னும் உடம்பு ஒரு நாளும் அழியாது. சான்றோர்கள் கூறுகின்ற கருத்துக்கள் அழியாமல் எப்பொழுதும் நிலைத்து நிற்கும் என்பது இப்பாடலின் பொருள்.

நம்முன்னோர்கள் கல்விக்குக் கடவுளாகக் கலைமகளைச் சொன்னார்கள். செல்வத்திற்குக் கடவுளாகத் திருமகளைச் சொன்னார்கள். வீரத்திற்குக் கடவுளாகச் சக்தியைக் கூறினார்கள். இப்படிச் சொல்லும் பழக்கம் ஏனைய சமயங்களிலும் உண்டு.

கிரேக்கக்கடவுள் ஜூயஸ் [Zeus]. இவனுக்கு ஜுபிடர் என்னும் பெயர் உண்டு. இவன் "நோய்தீர்க்கும் கடவுள்" என்று போற்றப்படுகிறான். இவனுடைய அடையாளம் ஆங்கில எழுத்துக்கள் RX. இன்றும் டாக்டர்கள் மருந்து சீட்டு எழுதித்தரும்போது, தலைப்பில் RX என்று போடுகிறார்கள்.

"கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்"

வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம மனும், செய்யுளாகிய கவி பாடும் புலவர் களும் கல்விக் கடவுளாகிய சரஸ்வதி தங் களுடைய முகத்தில் வாழ்கின்ற நல்வாழ்க் கையைப் பெற்றிருக்கின்றார்கள்.

முகத்தில் இலட்சுமி களை திகழ்கிறது என் பார்கள். பரம்பரையாகச் செல்வம் பெற் றிருப்பவர்களை, முகத்தைப் பார்த்துத்தெரிந்து கொள்ளலாம். அதேபோன்று, கல்விக் களை உடையவர்களையும் அவர்கள் முகத்திலிருந்து புரிந்துகொள்ளலாம். முகத்தில் உள்ள ஓர் உறுப்பு நாக்கு. நாக்கில் சரஸ்வதி உறை கின்றாள் எனச் சொல்லுவது ஐதிகம்.

நல்ல கருத்துக்களைச் சொல்லுகின்றவர் களின் நாக்கில் சரஸ்வதி உறைவது போன்று, தீய க்ருத்துக்களைச் சொல்லிக் கேட்டை உண்டுபண்ணுகின்றவர்களின் வாக்கில் சனி இருப்பதாகச் சொல்வது மரபு ஆகும்.

பிரம்மன் வேதங்களை நன்கு கற்றவன். கல் வியில் சிறந்தவன். கல்விக் கடவுள் சரஸ்வதி அவனில் அடக்கம். எனவே, பிரம்மனுடைய முகத்தில் கலைமகள் வாழ்வதாகச் சொல்லு வது மரபு.

கவிபாடுவதில் வல்லவர்கள் சான்றோர்களா கிய புலவர்கள். மக்கள் இவ்வுலக வாழ்க்கை யில் பல நல்ல செயல்களில் ஈடுபடும்படி செய்பவர்களும் அவர்களே. அத்துடன் மறு உலக நன்மைகளையெல்லாம் அடைவதன் பொருட்டு மக்களை வழிப்படுத்துகின்றவர் களும் புலமைச் சான்றோர்களே.

தாமும் நல்லொழுக்க வாழ்க்கையில் வாழ்ந்து மற்றவர்களையும் நல்வழிப்படுத்து கின்றவர்களாகிய புலவர்கள், நல்ல புலமை உடையவர்களாகவும், கல்வியில் தேர்ந்தவர் களாகவும் இருத்தல் வேண்டும். கல்விக் கடவு ளாகிய கலைமகள் அவர்கள் நாவில் வீற்றி ருந்து, அரும்பெரும் கருத்துக்களையெல்லாம் சொல்லுவதற்குப் பேருதவி புரிகின்றாள். இன்னும் சொல்லப்போனால், கற்றவர்களின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு ஏவல் புரிவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கின்றாள்.

எனவே, வண்டமிழோராகிய புலவர்களின் முகத்தில் கலைமகள் வீற்றிருக்கின்றாள் என்று சொல்லுவது மரபாக ஆயிற்று.

கலைமகளின் கருணை பரிபூரணமாகக் கிடைக் கப் பெற்றவர்களின் வாயிலிருந்து பிறக்கின்ற சொற்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மணிகளைப் போல விளங்குகின்றன.

"மலரவன் செய் வெற்றுடம்பு மாய்வன"

— மலரவனாகிய பிரம்மதேவன் படைக்கின்ற இந்த ஊன் உடம்பு, புகழோ பெருமையோ இல்லாத உடம்பாகும். உடம்பை வைத்து ஒருவருக்குப் பெருமையோ சிறுமையோ இல்லை. உடம்பினுள் ஆன்மா இருப்பதால் உடம்புக்குப் பெருமை ஏற்படுகின்றது.

எத்தகைய உடம்பாக இருந்தாலும் சரி, அந்த உடம்புக்கு ஒருநாள் கேடு வந்தே தீரும். சரீரம் அழியும் தன்மை உடையது. பஞ்ச பூதங்களால் ஆனதுதான் உடம்பு. நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகியவை பஞ்ச பூதங்கள். பல், காரை, எலும்பு முதலியவற்றில் கால் ஷியம் என்னும் சுண்ணம்பு உள்ளது. சுண் ணம்பு மண்ணோடு சேர்ந்தது. தீ உடம்பி லுள்ள வெப்பமாகும். நீர்—இரத்தம், சிறுநீர், உமிழ் நீர் முதலிய வடிவங்களில் அமைந்துள் ளது. வளி-சுவாசக்காற்று, உதானன், அபா னன் முதலியன. விசும்பு என்பது வெற்றிடம். உடம்பில் அமைந்துள்ள இடைவெளிகள் வெற்றிடம்.

அழியும் தன்மையுள்ள பொருட்களை ஆதார மாகக் கொண்டு உண்டான உடம்பும் அழியக் கூடியதுதான்.

கலைமகளைத் தனக்குக் குற்றேவல் செய்யும் படியான அளவுக்குக் கல்வி கற்றுள்ள பிரம்ம தேவனால் படைக்கப்படுகின்ற சரீரம் அழியும்.

ஆனால், கலைமகளின் தயவை எப்போதும் எதிர்பார்த்து நிற்கும் புலவர் பெருமக்கள் படைக்கின்ற செய்யுள் என்னும் உடம்பு ஒரு நாளும் மாய்ந்துபோகாது என்பது குமரகுரு பரரின் கருத்து.

பிரம்மனும் படைப்பாளன்; புலவனும் படைப்பாளன். பிரம்மன் மானிட சரீரத்தைப் படைக்கிறான். அந்தச் சரீரம் அழியும். புல வன் செய்யுளைப் படைக்கின்றான்; செய்யுள் என்னும் உடம்பு ஒருநாளும் அழியாது எனச் சொல்லுவதன் மூலம், கல்விக்குப் பெருமை தருகிறார் குமரகுருபரர்.

இந்த உலகத்துக்கு நன்மை தரும் என்று

தவருகக் கருதிக்கொண்டு, வெற்று ஊன் உடம்பைப் பெருக்கிக் கொண்டே போவதில் அர்த்தமில்லை. ஏழேழு பிறவிகளிலும் நன்மையே தருகின்ற கல்வியைப் பெருக்கிக் கொண்டு போவதுதான் சிறப்பு. "ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி" என்கிறது திருவாசகம். உள் ஒளி என்பது ஞானம். அஞ்ஞானம் அகன்றால் ஞானம் உண்டாகும். அஞ்ஞானம் அகலுவதற்குக் கல்வி உறுதுணையாகிறது.

உலகம் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை எத்தனையோ சரீரங்கள் தோன்றின; அழிந்தன. அவற்றை யாரும் நினைவிலே கொள்வதில்லை. ஆன்றோருடைய நூல்கள் என்றும் நிலைத்து நிற்கின்றன. அழிந்துபோன அச்சான்றோருடைய புகழ் உடம்புகளாக அவர்களுடைய நூல்கள் திகழ்கின்றன.

"வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு அரிப்பரித்தாங்கு
எய்த்துப் பொருள்செய் திடல்."

கல்வி கற்கும் முறையினைக் குமரகுருபரர் விளக்குகிறார். மிகவும் முயன்று வருத்தப்பட்டு படித்த பாடங்களை நினைவிலே வைத்துக் கொள்ளாமல் மறந்துவிட்டு, மேற்கொண்டு துன்பப்பட்டுப் புதிய நூல்களைப் படிக்கத் துவங்குவது எதுபோலத் தெரியுமா?

கையிலே உள்ள செல்வத்தை வீசி எறிந்து விட்டு எறிந்த இடத்திலே சல்லடையைக் கொண்டு அரித்து எடுப்பதற்கு நிகராகும்.

கல்வி கற்பதற்குப் பெரு முயற்சி இருத்தல் வேண்டும். உழைப்புக்கு ஏற்றவாறு உயர்வு கிடைக்கும்.பெரிதும் முயன்று நிரம்பக் கற்றால் அதற்கு ஏற்றவாறு அறிவு வளம் செழிக்கும்.

உடலை வருத்தி, முயன்று கற்கிற கல்வியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது மிக மிக அவசியமாகும். **I hear, I forget; I see, I remember; I do, I understand** என்பது கல்விக்கொள்கையின் ஒரு பகுதி.

காதால் கேட்கிற நிலையில் ஒரு சிலபகுதிகள் நினைவிலே நிலைத்து நிற்கும். பெரும்பாலானவை மறந்துவிடுகின்றன. கண்ணால் பார்க்கிறோம்; பார்க்கிற அளவில், படித்தவை ஞாபகத்துக்கு வருகின்றன. படித்தவற்றை அனுபவத்திற்குக் கொண்டுவருகிறோம். அந்த அளவுக்கு அவற்றை நாம் புரிந்துகொள்கிறோம்.

படித்தவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளாமல், வைத்துக்கொள்ள முயலாமல், மேலும் மேலும் முயன்று வருத்தப்பட்டுப் படிப்பதால் என்ன நன்மை? எனக் கேட்கிறார் குமரகுருபரர்.

படித்தது மறந்துபோகும் என்பது உண்மைதான். மறதி என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட நன்கொடை ஆகும். இந்த மறதி நமக்கு வழங்கப்படாவிட்டால் தேவையில்லாத எவ்வளவோ விஷயங்கள் ஞாபகத்தில் தேங்கிநிற்கும். எத்தனையோ பிறவிகளில் நடந்த விஷயங்கள் எல்லாம் ஒரேபிறவியில் நினைவுக்குவரும். அதன் விளைவாகத் துன்பச் சுமைகள் அதிகரிக்கும்.

மறக்க வேண்டியதை மறக்க வேண்டும். நினைவில் கொள்ளவேண்டியதை நினைவிலே வைத்திருக்கவேண்டும். சிலருக்கு எதிர்மாறாக ஏற்படுவதும் உண்டு.

கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், முடிவுக்கு வருதல் ஆகியவை கல்விப் பயிற்சிக்கு உறுதுணையாக அமைகின்றன.

வருத்தப்பட்டுப் படிக்கிறோம்; அதிகாலையில் எழுந்து படிப்பது நல்லது. இரவில் நல்ல ஆழ்ந்த உறக்கத்தில் மூளையில் எவ்விதப் பதிவும் ஏற்படுவதில்லை. வெளியேயும் அமைதி; ஆரவாரமும் இல்லை. உடலும் செயற்படுதல் இல்லாமல் இருக்கிறது. எனவே எவ்விதப் பதிவும் மூளையில் ஏற்பட வாய்ப்பு இல்லை. அந்நிலையில் அதிகாலையில் துயில் எழுகிறோம். அதிகாலைப் பொழுது பிராம்ம முகூர்த்தம் எனப்படும். அப்பொழுது எங்கும் அமைதி நிலவுகிறது. அச்சமயத்தில் வாய்விட்டு, உரத்த குரலில், அழுத்தம் திருத்தமாக வாசித்தால் முதல் பதிவாக மூளையிலே பதிகிறது. குரலில் தெளிவு, உச்சரிப்பில் திருத்தம், மூளையில் பதிவு ஆகிய பல நன்மைகள் கிடைக்கின்றன. நினைவாற்றல் இல்லையே எனச் சிலர் வருத்தப்படவேண்டியதில்லை. முயற்சி செய்தால் நினைவு சக்தி ஏற்படும்.

வருத்தப்பட்டுப் படித்தால், படித்த பல நல்ல விஷயங்கள் நமது மனத்தைத் திருப்திப் படுத்துகின்றன. மனத்தைச் செம்மைப் படுத்துகின்றன. வாழ்க்கைக்கு நல்வழிகாட்டுகின்றன. நமக்கு மட்டுமா பயன்படுகின்றன?

மற்றவர்களுக்கு நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்கிறோம். அவர்களுக்கும் பயன் அளிக்கின்றன.

எனவே, படித்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும்படியான நல்ல விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளாமல், மறந்துவிடுவதால் என்ன பிரயோஜனம்? மேன்மேலும் படித்து என்ன பயன்? பெட்டிக்குள்ளே இருக்கும் பொக்கிஷத்தைத் திரும்பவும் எடுத்துப் பயன்படுத்தாமல், மேலும் மேலும் திணித்துவைத்து, பின் அதனை எடுக்க முடியாமல் திணறுவது போலத்தான்.

உண்ட உணவு, அளவில் கொஞ்சமாக இருந்தாலும் பரவாயில்லை; ஆனால் நன்றாக ஜீரணம் ஆகி, இரத்தத்துடன் கலந்து திசுக்களோடு கலந்து உடல் வளர்ச்சிக்குப் பயன்படவேண்டும். அப்படி இல்லாமல், உணவு ஜீரணம் ஆகாமல், உடம்போடு சேராமல், வயிற்றுக்குக் கெடுதல் உண்டுபண்ணிய நிலையில் மேல்கொண்டு உணவு அருந்தி யாது பயன்? ஒரு பயனும் இல்லை; கேடுதான் விளையும்.

அதே போன்று, கற்ற கல்வியை நினைவில் வைத்துக்கொண்டு, நமக்கு நன்முறையில்பயன் படுத்திக்கொள்ளவேண்டும்; மற்றவர்களுக்கும் பயன்படும்படி செய்யவேண்டும். நமக்கும்,மற்றவர்களுக்கும் உதவாத கல்வி,கல்வி ஆகாது.

உள்ளதே ஞாபகத்தில் இல்லாதபோது மேற்கொண்டு படிப்பவை ஞாபகத்தில் நிற்குமா? நிற்கமாட்டா. நல்ல நினைவாற்றல் உடையவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவார்கள். எனவே, நினைவாற்றல் ஒவ்வொருவருக்கும் மிக அவசியமாகும்.

கையில் உள்ள செல்வத்தை வீசி எறிந்து விட்டு எறிந்த இடத்தில் சல்லடையைக் கொண்டு வந்து கஷ்டப்பட்டு அரித்து அரித்துத் தேடி எடுப்பது வீணான வேலையன்றோ?

படித்த படிப்பை மறந்துவிட்டு, மேற்கொண்டு புதிதாகப் படிக்க எண்ணுவது பொருத்தம் ஆகாது

கற்பதாலும், கேட்பதாலும், சிந்திப்பதாலும் நினைவில் வைத்துக்கொள்வதாலும் கல்வி முழுமை அடைகிறது.

ஒரு நல்ல தொண்டு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. நோயில் இரண்டு விதம் உண்டு. ஒன்று உடலைப்பற்றியது; மற்றது உள்ளத்தைப்பற்றியது. உடலைப்பற்றிய நோயை மருத்துவர்கள் கண்டுபிடிக்கின்றனர். மன நோயை மனிதன் தானே சரிப்படுத்த வேண்டும். மனநோயை நீக்குவதற்கு நல்லறிவு ஒன்றே உற்ற உபாயமாகிறது.

நோய் வராமல் தடுப்பதற்கும், ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கும், மனதைத் திருத்தி அமைப்பதற்கும் உரிய வழிகளை விளக்கும் 'நோய்க்கு இடம்கொடேல்' என்னும் சிறிய நூல் ஒன்று தபோவனத்தினின்று வெளியாகியுள்ளது. ஆஸ்பத்திரியிலிருக்கும் நோயாளிகளுக்கிடையில் இந்தப் புஸ்தகத்தைப் படிக்கக் கொடுத்துப் பின் திரும்பவாங்குவது நல்ல பலன் தரும். இப்பணியில் ஊக்கமுடைய அன்பர்கள் சில பிரதிகளை வாங்கிக் கைவசம் வைத்துக்கொள்ளலாம். பிறகு டாக்டர் அனுமதி பெற்று ஆஸ்பத்திரி சிப்பந்திகளைக்கொண்டு இந்தப் பணிவிடையை நன்கு நிறைவேற்றலாம்.

ஆகார நியதியைப்பற்றிய விவரம் இப்புத்தகத்தில் வெளியாகியுள்ளதை ஈண்டு மாதிரிக்குத் தருகிறோம். "உணவைக் கடவுளுக்குப் படைத்து உண்பதால் ஈசுவரப் பிரசாதமாக அது மாறுகிறது. உடலின் ஆரோக்கியத்துக்காகவும், திட்பத்துக்காகவும் அமைந்துள்ள தேவாமிர்தமாக அதைப் பாவித்தல் வேண்டும். உணவு அருந்துகிற வேளையில் வியாகுலப்படுதல், சினந்துகொள்ளுதல், பொருமைப்படுதல், பதை பதைப்புடன் இருத்தல் ஆகிய மனநிலைகள் பல கேடுகளை உண்டுபண்ணும். அது நோயாக வடிவெடுக்கும். இனிமையும் மகிழ்வும் உள்ளத்தில் குடிகொண்டிருப்பது மிக அவசியம். அப்பொழுது உணவு அமிர்தமாக மாறுகிறது."

குறிப்புகள்

பள்ளிக்குழந்தைகளும், கிராம சேவையும்

'எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது கோட்பாடு. வெறும் புத்தகப் படிப்பால் மனிதன் மேன்மை அடைந்துவிட முடியாது. இயற்கையோடு இணைந்து வாழவும், மக்களோடு கூடி வாழவும் பயிற்சிபெறவேண்டும். ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் சிறுவர், சிறுமிகள் பணிவிடையில் ஈடுபடுவார்களானால் அவர்கள் பண்பாடடைந்து வருவார்கள். மனதைப் பண்படுத்தும் செயல்களே மாணவர்களை மாண்புடையவர்களாக்குகின்றன.

திருச்சி கைலாசபுரத்தில் சாரதா வித்யாலயம் என்னும் ஆரம்பப்பள்ளி நடந்துவருகிறது. அப்பள்ளியின் குழந்தைகளும் ஆசிரியைகளும் ஜனவரி மாதம் 13ஆம் தேதி இறைவனுடைய நாமங்களைப் பஜனை செய்து கொண்டு பள்ளியிலிருந்து புறப்பட்டுக் கிருஷ்ணசமுத்திரம் என்ற சேரிக்குச் சென்றூர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் திருவுருவப் படங்களைச் சைக்கிள் ரிக்ஷாவில் வைத்து இறைவனுடைய நாமங்களைச் சொல்லிக்கொண்டு ஊர்வலமாக எடுத்து வந்தார்கள். அவ்வூர் மக்களும் அவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். ஊர்வலம் முடிந்தவுடன் பஜனையும், கலை நிகழ்ச்சியும் ஸ்ரீ சாரதா வித்யாலயக் குழந்தைகள் நடத்தினர்கள். திருச்சி கைலாசபுரத்திலுள்ள பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் வீடு வீடாகச் சென்று சேகரித்த அரிசியையும் பணத்தையும் கொண்டு அவ்வூர்மக்களுக்கு அன்று உணவு வழங்கினர்கள். கிருஷ்ண சமுத்திரம் சேரியிலுள்ள குழந்தைகளும், பெரியவர்களும் சுமார் ஐந்நூறுபேர் அன்று அமைதியாக இருந்து உணவு எடுத்துக்கொண்டார்கள். இந்தச் சேவை சென்ற ஆண்டும் இதே ஊரில் தைப்பொங்கல் அன்று செய்யப்பட்டது. குழந்தைகள் மகிழ்ச்சியுடன் இப் பணியில் ஈடுபடுவது அவர்கள் உள்ளம் திருந்துவதற்கு நல்ல உபாயமாகிறது.

திருச்சி கைலாசபுரத்திலுள்ள பாய்லர் பிளாண்ட் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களும், ஆசிரியைகளும், மாணக்கர்களும், மாணவிகளும் இவ்வாண்டு ஸ்ரீ விவேகானந்தஜயந்திவிழாவை 28-1-82 அன்று திருவெறும்பூர் கோயிலுக்கு அருகிலுள்ள அம்பேத்கார் என்னும் சேரியில் கொண்டாடினர்கள். 28—1—82 அன்று மாலை 3-30 மணிக்கு அவர்கள் 'சிவாய நம ஓம் சிவாய நம: சிவாய நம ஓம் நமச்சிவாய' என்ற நாமம் சொல்லிக்கொண்டு பள்ளியிலிருந்து அம்பேத்கார் சேரிக்கு நடந்துசென்றனர். அச்சேரி மக்கள் அவர்களை அன்புடன் வரவேற்றனர்.

மாலை 4-30 மணிக்குச் சேரியை அடைந்தவுடன் ஒரு மணிநேரம் ஆசிரியர்களும் குழந்தைகளும் உற்சாகத்துடன் சேரியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டார்கள். ஒருமணி நேரத்துக்குள் சேரியிலுள்ள தெருக்கள் முழுவதையும் பெருக்கிச் சுத்தம் செய்து கோலம் போட்டு அழகுபெறச் செய்துவிட்டார்கள். அச்சேரியில் மாரியம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. அக்கோவிலிலுள்ள ஒட்டடையை அடித்துச் சுவர்களுக்கு வெள்ளை அடித்துக் கோயிலைப் புறச்சுத்தம் செய்தனர். கோயிலிலுள்ள அம்மனை நீராட்டி, எண்ணெய்க்காப்புச் செய்தனர். பிறகு பூமாலை அணிவித்து அம்மனுக்குஅலங்காரம் செய்தனர். அம்மன் சந்நிதிமுன் ஆசிரியர்களும், குழந்தைகளும் அமர்ந்து அரைமணி நேரம் பஜனையும் வழிபாடும் செய்தனர். கோயிலைப் புறத்தூய்மைப் படுத்தியதோடு கோயிலின் அருள் சக்தியையும் அன்று வளர்த்தார்கள். அச்சேரியின் பொதுவிடம் ஒன்றில் எல்லாரும் அமர்ந்து அரை மணிநேரம் ஐக்கிய வணக்கம் செய்தனர். அதில் அச்சேரி மக்களும் கலந்துகொண்டார்கள். பாய்லர் பிளாண்ட் நடுநிலைப்பள்ளி மாணவிகளால் பரதநாட்டியம் நிகழ்த்தப்பட்டது. பிரஹ்லாதன் நாடகமும் அவ்வூர் மக்களுக்கு அம்மாணவ மாணவிகள் நடித்துக் காட்டினர். அவ்வூர் மக்களின் காதுக்கும், கண்ணுக்கும் விருந்து கொடுத்தான பிறகு வயிற்றுக்கு உணவு கொடுப்பதற்கும் பாய்லர் பிளாண்ட் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களும், குழந்தைகளும் தயாராக வந்திருந்தார்கள். அவர்கள் கைவசம் தயார் செய்து கொண்டு

வந்திருந்த சர்க்கரைப் பொங்கல், புளிச் சாதம், தயிர்ச்சாதம் முதலியவைகளை அவ்வூர் குழந்தைகளை அமைதியாக வரிசையாக உட்கார வைத்து நாமம் சொல்லும்படி செய்து பரிமாறினார்கள். முதல் பந்தியில் குழந்தைகள் திருப்தியுடன் சாப்பிட்டு முடித்தார்கள். இரண்டாவது பந்தியில் பெரியவர்கள் அனைவரும் சமபந்தி போஜனம் செய்தார்கள். குழந்தைகளும், பெரியவர்களும் சுமார் எண்ணூறுபேர் அன்று சமரச மனப்பான்மையுடனும், அக மகிழ்ச்சியுடனும் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு சுயநல மற்ற சேவை செய்து உணவு எடுத்துக் கொண்ட காட்சி அனைவருக்கும் ஆனந்தமாக இருந்தது. இங்ஙனம் குழந்தைகள் தன்னல மற்ற மக்கள் பணி செய்வதற்கும், பரமனைப் பாடித் துதிப்பதற்கும் பயிற்சி பெறுவதற்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும், அரசாங்கத்தினரும் திட்டம் வகுப்பார்களானால் அது நல்ல சமுதாயச் சேவையாகும்.

அறிவு வளர்ச்சி அடைவதோடு அன்பும் வளர்ச்சி அடையவேண்டும். அறிவையும் அன்பையும் வளர்ப்பதில் ஆற்றல் பயன்படுத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் ஆற்றல், அன்பு, அறிவு ஆகிய மூன்றும் முறையாக வளர்வனவாகின்றன. இம்மூன்றையும் முறையாக வளர்க்கும் கல்விதான் முழுக் கல்வி ஆகும். பள்ளியில் பாடப்புத்தகங்களைப் படிப்பதற்கிடையில் இடையிடையே கிராமங்களுக்குச் சென்று பணிவிடை செய்யும் பயிற்சியைக் குழந்தைகள் பெறுவார்களானால் அவர்கள் முழுக் கல்வியும் பெறுபவர்களாவார்கள்.

கோவை—மருதமலையில் படித்திருவிழா

ஆண்டுதோறும் மருதமலை திரு. அருணகிரிநாதர் அருள்நெறிக் கிருத்திகைக் கழகத்தினர் கழக ஆண்டு விழாவையும், மருதமலைப் படித் திருவிழாவையும் சிறப்பாக நடாத்தி வருகின்றார்கள். இவ்வாண்டு 15–1–82 அன்று அவர்கள் தங்கள் கழகத்தின் 26வது ஆண்டு நிறைவு விழாவையும், 19வது ஆண்டு மருதமலைப் படித் திருவிழாவையும் மருதமலையில் சிறப்பாக நடத்தினர். அன்று அங்குப் பல மாவட்டங்களிலிருந்தும் பஜனைக் குழுவினர் வந்திருந்தனர். யாவரும் மருதமலையின் அடிவாரத்திலுள்ள அருணகிரிநாதர் சந்நிதி முன் அமர்ந்து காலை 7-00 மணிமுதல் ஒவ்வொரு பஜனைக் குழுவினராக உருக்கமானமுறையில் தெய்வீகப் பாடல்களைப் பாடினார்கள். காலை சுமார் 8-00 மணிக்கு அருணகிரிநாதரை வழிபட்டுப் படித் திருவிழாவைக் கௌமார மடாலயத் தலைவர் ஸ்ரீமத் சுந்தரசுவாமிகள் துவக்கி வைத்தார்கள். பித்துக்குளி திரு. முருகதாஸ் அவர்கள் படிவிழாப் பஜனையைத் துவக்கி வைத்தார்கள். ஒவ்வொரு மாவட்டப் பஜனைக் குழுவினரும் மருதமலையின் படிகள்மீது உருக்கமான பஜனையுடன் ஏறினர். படிகள்தோறும் பூஜை செய்து படித்திருவிழா வழிபாடு நிகழ்ந்தது. எல்லாப் பஜனைக் குழுவினரும் மலை ஏறி முருகன் சந்நிதானத்தை அடைவதற்குக் காலை சுமார் 10-00 மணி ஆயிற்று. மலையின்மீது பக்தி சம்பந்தமான சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அருளாளர்களும், சான்றோர்களும் மக்களுக்குப் பக்தி மார்க்கத்தை எடுத்துப் புகட்டினார்கள். அன்று நண்பகல் எல்லார்க்கும் நல்லுணவு அருணகிரிநாதர் கிருத்திகைக் கழகத்தார்கள் படைத்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் இவ்விழாவில் கலந்து முருகன் திருவருளுக்குப் பாத்திரமானார்கள்.

பகவானும், பக்தனும், பாகவதமும் ஒன்று என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருள் காட்சியில் கண்டார். பகவான் சந்நிதி முன் பக்தர்கள் ஒன்றுகூடி அவருடைய பெருமையைப் பாடும்பொழுது பகவான், பக்தன், பாகவதம் ஆகிய மூன்று மகிமைகளும் ஒன்று சேர்கின்றன. இதை அருள்துறையில் திரிவேணி சங்கமம் எனலாம். கங்கையும், யமுனையும் பிரயாகையில் ஒன்று கூடுகின்றன. சரஸ்வதியும் மானசிகமாக அங்கு ஒன்று கூடுவதாகக் கருதி பிரயாகையைத் திரிவேணி சங்கமம் என்பார்கள். ஆங்கு நதியில் ஸ்நானம் செய்வது புனிதமாகக் கருதப்படுகிறது. ஆண்டுதோறும் மருதமலையில் அருள்துறையில் நிகழும் படித்திருவிழாவில் கலந்து கொள்பவர்கள் அருள் துறையிலே திரிவேணி சங்கமம் ஸ்நானம் செய்பவர்களாகிறார்கள். மருதமலை அருணகிரிநாதர் அருள்நெறிக் கிருத்திகைக் கழகத்தினர் இவ்விழாவைக் கொண்டாடுவதன்மூலம் பக்தர்களைப் பகவான் சந்நிதியின் முன் ஒன்று கூடச் செய்து அருளை

வளர்க்கும் பணியில் ஈடுபடுத்துகின்றனர். அருள் மங்கிக் கொண்டு வரும் இக்காலத்தில் சமுதாயத்துக்கு இது நல்ல திருப்பணி ஆகிறது. அருள் சக்தியை வலிவுபடுத்தும் இத்தகைய விழாக்கள் நாட்டின் பல பாகங்களிலும் நிகழ்ந்து வருமாயின் தீய சக்திகளின் வலிவு குன்றும். மக்களுடைய உள்ளத்தில் பக்தி உணர்வு ஓங்கி ஆன்மிகத்துறையில் முன்னேறி வருவதற்கு மருதமலைப் படித்திருவிழா பணியாற்றி வருகிறது. ஊக்கமும், உற்சாகமும் உடையவர்களாக மருதமலை ஸ்ரீ அருணகிரி நாதர் கிருத்திகைக் கழகத்தினர் நிகழ்ச்சிகளைக் குறித்த நேரத்தில் அமைத்துக் கட்டுப்பாட்டுடனும், பக்தி உணர்வுடனும் ஆண்டுதோறும் இவ்விழாவைச் சிரத்தையுடன் நடத்தி வர முருகன் திருவருள் புரிவாராக.

ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் குருபூஜை விழா

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் ஆண்டுதோறும் ராமநாதபுரத்தில் அமைந்துள்ள தாயுமானவர் தபோவனத்தில் தாயுமானவர் குருபூஜையைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது. இவ்வாண்டும் 19–1–82 அன்று ஆங்குத் தாயுமானவர் குருபூஜை விழாச் சிறப்பாக நடந்தது. திட்டப்படி தாயுமானவர் கோயிலில் குருபூஜைவிழா நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. காலை 7·30 மணியிலிருந்து 9·00 மணி வரையில் அபிஷேக ஆராதனையும், பஜனையும் நிகழ்ந்தன. தாயுமானவர் பாடல் சமர்ப்பணம் காலை 9-00 மணிமுதல் 9-30 மணி வரை நடந்தது. அதன் பிறகு சிவ சஹஸ்ரநாம அர்ச்சனை நிகழ்ந்தது. ஒவ்வொரு நாமம் சொல்லும் பொழுதும் பக்தர்களும், பக்திமதிகளும் வரிசையாக நின்று தாயுமானவருக்கு மலர் சாத்தி வணங்கினர்கள். பகல் பன்னிரண்டு மணிக்குத் தீபாராதனை நிகழ்ந்தது. அதன் பிறகு நிகழ்ந்த சமாராதனையில் வெளியூர் மக்கள், உள்ளூர் மக்களுமாகச் சுமார் ஆயிரம் பேர் பிரசாதம் எடுத்துக்கொண்டனர். மாலை 5-00 மணியிலிருந்து 8-00 மணி வரையில் தாயுமானவர் பாடலுக்கு விளக்கம் சொல்லப்பட்டது. இடையில் திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் தாயுமானவர் பாடிய ஆனந்தக்களிப்பில் உள்ள பாடல்களை இசையோடு பாடினர்கள். இடையிடையே பக்தர்களும், பக்திமதிகளும் தாயுமானவர் பாடல்களை உருக்கத்துடன் பாடினர்கள். இரவு 8-00 மணிக்குக் குருபூஜை விழா மங்களம் பாடச் சிறப்பாக முடிவடைந்தது.

நாம அர்ச்சனையும் வழிபாடும்

வட ஆற்காடு ஜில்லா வேலூருக்குப் பக்கத்தில் மதிநைப்பள்ளி என்னும் கிராமம் உள்ளது. அக்கிராம மக்கள் கோடி அர்ச்சனை செய்யத் திட்டமிட்டு ஒவ்வொரு மாதமும் சாதுக்களைக்கொண்டு 'ஓம் நமோ நாராயணய' என்னும் நாமஅர்ச்சனைசெய்துவருகிறார்கள். மாதந்தோறும் பௌர்ணமியை ஒட்டிச் சில நாட்களுக்கு முன்போ பின்போ சுமார் நூறுபேர் ஒன்றுகூடிக் குத்துவிளக்குகள் ஏற்றிவைத்து ஒருபுறம் அன்பர்களும், எதிர்ப்புறம் தாய்மார்களுமாக அமர்ந்து சுமார் ஒருமணி நேரம் 'ஓம் நமோ நாராயணய' என்னும் நாம அர்ச்சனை செய்துவருகிறார்கள். அர்ச்சனையில் பயன்படுத்தும் அக்ஷதையை ஆண்டுதோறும் மே மாதத்தில் நிகழும் சமபந்தி போஜனத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். அச்சமபந்தி போஜனத்தில் சுமார் ஆயிரம்பேர் கலந்துகொள்கிறார்கள்.

1–2–82 அன்று சுமார் நூற்றுப்பத்துபேர் ஒன்று கூடி 'ஓம் நமோ நாராயணய' என்று ஒருமணி நேரம் அர்ச்சனை செய்தார்கள். இவ் அர்ச்சனையைக் கோடி அர்ச்சனையாக ஆக்க வேண்டும் என்ற திட்டத்துடன் சிரத்தையுடன் செய்து வருகிறார்கள்.

அன்று இரவு மாட்டுவண்டியில் விஷ்ணு வடிவத்தை அலங்கரித்து ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதாதேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவருடைய படங்களையும் அலங்கரித்துப் பஜனையுடன் ஊர்வலம் வந்தார்கள். அவ்வூர்வலத்தில் ஊர்மக்கள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி கலந்துகொண்டு பஜனை செய்தார்கள். ஊரிலுள்ள எல்லாத் தெருக்களின் வழியாகவும் ஊர்வலம் சென்றது. ஒவ்வொரு வீட்டின் முன்பும் உற்சவமூர்த்தியை நிறுத்தி வழிபாடு செய்தார்கள். பக்தி உணர்வுடன் உயர்வு தாழ்வின்றி குடி மக்களும் சேரி மக்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். தீண்டாமைக்கு ஆங்கு இடமில்லை.

இன்றைக்கு நாட்டில் ஆங்காங்கே கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் இந்துக்களைத்

தங்கள் மதத்துக்கு மாற்றும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்துக்களுள் தீண்டத்தகாதவர்கள் என்று புறக்கணிக்கப்பட்டுள்ள மக்களை மதமாற்றும் செயல்தான் தீவிரமாக நடந்து வருகிறது. இந்துக்கள் தங்கள் சகோதரர்களைத் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைத்திருப்பதை அவர்கள் மதமாற்றத்திற்குச் சுலபமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்துமதம் பரந்த கொள்கைகளை உடையது. அனைவரையும் ஈசனுடைய குழந்தைகளாகக் கருதும்படி இந்துமதம் புகட்டி வருகிறது. இதைப் புரிந்துகொள்ளாத மக்கள் கீழ்க்குலத்தவர்கள் என்று சில மக்களை ஒதுக்கி வைப்பது பொருந்தாது. இனியும் இந்தப் பாபத்தைச் செய்யாது மக்களனைவரையும் முன்னேற்றுவதற்குரிய சமரச நோக்கத்தை இந்துக்கள் தங்களுக்கிடையே வளர்த்துக்கொள்ள வேண்டும். சமுதாயத்தில் பிராமணர்கள் என்று சொல்லப்படுபவர்களும் பள்ளர்கள், பறையர்கள், சக்கிலியர்கள் என்று சொல்லப்படுபவர்களும் கடவுளின் குழந்தைகளே ஆவார்கள். அவரவர்கள் செய்கின்ற தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை. ஆலயத்தில் சென்று வழிபடுவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. இத்தகைய எண்ணத்தை அனைவரும் தங்களுக்கிடையில் வளர்த்துக் கொள்ளவேண்டும். அன்று மதினுப்பள்ளிக் கிராமத்தில் நிகழ்ந்த வழிபாடு அவ்வெண்ணத்துக்குச் செயல் வடிவம் கொடுத்தது. மேல் நிலையில் இருப்பவர்கள் கீழ்நிலையில் உள்ள மக்களைத் தங்கள் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று எண்ணவேண்டும். கீழ்நிலையிலுள்ள மக்கள் மேல் நிலையில் உள்ள மக்களைப் போன்று தாங்களும் ஆகவேண்டும் என்று எண்ணவேண்டும். இறை வழிபாட்டின் மூலம் மேல் நிலையிலுள்ள மக்கள் கீழ்நிலையிலுள்ள மக்களை உயர்த்துகிறார்கள். கீழ்நிலையிலுள்ள மக்கள் மேல் நிலையிலுள்ள மக்கள் நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள். எல்லா மக்களுடைய மனதையும் உயர்த்தும் வழிபாடு அன்று ஆங்கு நிகழ்ந்தது. இத்தகைய வழிபாடு ஒவ்வொரு கிராமத்திலும் நிகழ்ந்து வருமாயின் கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் சேரி மக்களைத் தங்கள் மதத்துக்கு மாற்றும் செயலை நிகழ்த்த முடியாது. மக்கள் மதம் மாருதிருப்பதற்கு வேண்டிய காரியங்கள் அமைதியான முறையில் ஆங்கு நிகழ்ந்து வருகின்றன. தெய்வ பக்தியும், ஒற்றுமை வாழ்வும், சமத்துவ மனப்பான்மையும் அக்கிராம மக்களிடையே நிலவி வருவதற்கு வேண்டிய திட்டம் சமயத்துறையில் நிகழ்ந்து வருகிறது. பாமர மக்களுடைய மனதையும் உயர்த்துவதற்குரிய செயல் ஆங்கு நிகழ்கிறது. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கோட்பாடு கொள்கை அளவில் நின்று விடாமல் ஆங்குச் செயல் அளவில் நிகழ்ந்து வருகிறது எனலாம்.

செய்திகள்

நிகழ்பவை

'நம்பிக்கை உள்ளவனிடம் எல்லாம் உண்டு' என்னும் தலைப்பில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தரின்** பேச்சு 19—2—82 வெள்ளிக்கிழமையன்று காலை 8-20 மணிக்குத் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும்.

பிப்ரவரி மாதம் 22ஆம் தேதி திங்கட்கிழமை மகாசிவராத்திரி ஆகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்து நான்கு மணிநேரம் அகண்ட நாமபஜனை செய்வார்கள்.

25-2-82 வியாழக்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ணர் திதி பூஜை ஆகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணிநேரம் அகண்ட நாம பஜனையும், பகல் 11-00 மணி முதல் 12-00 மணிவரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

28-2-82 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜயந்திவிழா திருப்பராய்த்துறை தபோவனத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். அன்று காலை 6-00மணிக்கு ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருஉருவப் படத்தைத் திருப்பராய்த்துறை சிவாலயத்திற்கு நாம பஜனையுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று வருவார்கள். அன்று காலை 9-00 மணிக்கு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்களின் பெற்றோர் கூட்டம் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை ரூ.	16-00
மஹாபாரதம்	,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	5-50
இராமாயணம்	,, ...	5-00
தினசரி தியானம்	,, ...	4-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
விவேகானந்த உபநிஷதம்	...	4-00
கடவுளின் வடிவங்கள்	...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	...	3-50
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	...	2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்குநிறைகின்றபொருள்	ஷை ...	2-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
பஜனைப் பாடல்கள்	...	2-50
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
ஹரிச்சந்திரன்	(நாடகம்) ...	2-00
விரதவீரர் பீஷ்மர்	ஷை ...	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
சகோதரி நிவேதிதை	...	1-00
காயத்ரீ	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள்	,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	,, ...	1-00
தானவீரன் கர்ணன்	,, ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00

மார்க்கண்டேயன்	(நாடகம்) ரூ.	1-00
பிரஹ்லாதன்	,, ...	1-00
தபோபலன்	,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
ஆத்ம சக்தி	...	1-00
நன்மக்களைப் பெறுதல்	...	0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்) ...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	0-75
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	...	0-60
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*சூரிய நாராயணன்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
சைவன் யார்?	...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?		0-50
*கணபதி	...	0-40
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-25
The Bhagavad Gita (10th Imp.)	...	20.00
Sri Lalitambika Sahasranama Stotram	...	10-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	6-00
Ramayana (do)	...	4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bhagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் ரூ. 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சிராப்பள்ளி Dt.

அன்புடையீர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா 1982 பிப்ரவரி மீ 28ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5-30 மணிமுதல் 8-30 மணிவரை இங்குக்கொண்டாடப்பெறும். நீங்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்,
சித்பவானந்த

நிகழ்ச்சி முறை

28—2—82 ஞாயிறு மாலை

5-30 மணிமுதல் 7-00 மணிவரை
குருகுல மாணாக்கர் ஆடல், பாடல், பேச்சு முதலியன
7-00 மணிமுதல் 8-30 மணிவரை குருகுல மாணாக்கர்களால்
பிரஹ்லாதன் என்னும் நாடகம்

தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. சிற்றுண்டிச்சாலை உண்டு.

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் அந்தர்யோகம்

1982 ஆம் மார்ச் மாதம் 2, 3, 4 தேதிகளாகிய மூன்று தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் மார்ச் மீ 1ஆம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 6-00 வீதம் செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	மணிமுதல்	மணிவரை	மாலை	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	4-30		போஜனம், ஓய்வு	12-00	2-30
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-00	5-30	மாலை உபந்யாசம்	2-30	3-30
காவேரி ஸ்நானம் முதலியன	5-30	6-30	தனியாக வாசித்தல்	3-30	4-30
காலை தியானம்	6-30	7-00	பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-00
சிற்றுண்டி	7-00		நாம ஜபம்	6-00	6-15
காலை உபந்யாசம்	8-30	9-30	ஆரத்ரிகம், தியானம்	6-15	7-00
மௌனம்	9-30	10-30	இரவு போஜனம்	7-00	
பஜனை	10-30	11-30	ஸத் ஸம்பாஷணை	8-30	9-30
அர்ச்சனை, பூஜை	11-30	12-00	நித்திரை	10-00	

உபந்யாசங்கள்:— யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத் ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.